# அன்று இரவு

CONNEMARA PUBLIC LIBRARY
23 JUL 1958
MADRAS

புதுமைப்பித்தன்

ஸ்டார் பிரசுரம்

# அன்று இரவு

புதுமைப்பித்தன்

ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி
சென்னை—5

மேலக் கோபுரத் தெரு
மதுரை

முதற் பதிப்பு, நவம்பர்—1954

விலை ரூ. 3–0–0

**STAR PUBLICATIONS**

**TRIPLICANE,** **WEST TOWER St.,**
**MADRAS-5.** **MADURAI.**

அச்சிட்டோர்: கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்,
46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை—1.

# பதிப்புரை

தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் புதுமைப்பித்தன் இலக்கிய சிருஷ்டிகளில் இதுவும் ஒன்று. இது வரை **புதுமைப்பித்தன் கதைகள், புதிய ஒளி, ஆண்மை** என்ற மூன்று கதைத் தொகுதிகளும், **வாக்கும் வக்கும்** என்ற நாடகமும், ஒரு கட்டுரைத் தொகுதியும், ஒரு கவிதைத் தொகுதியும், ஐந்து மொழிபெயர்ப்புக் கதைத் தொகுதிகளும், '**பிரேத மனிதன்**' என்ற மொழிபெயர்ப்பு நாவலொன்றும் வெளிவந்துள்ளன. இனி வரக்கூடியனவாக சில கதைகள், நாடகங்கள், கடிதங்கள், இலக்கிய விமர்சனங்கள், சில மொழிபெயர்ப்புக் கதைகள் இருக்கின்றன. இவை தவிர முற்றுப் பெருத நாவல்கள், நாடகங்கள், கட்டுரைகள் முதலியனவும், கையெழுத்துப் பிரதிகளாக இருக்கின்றன. பூரணத்துவம் பெற்றவை முழுதும் வெளிவந்த பின்னர் முற்றுப் பெருதவைகளையும் வெளியிடலாம் என்று கருதுகிரேம்.

அமரர் புதுமைப்பித்தன் இவ்வுலகைவிட்டுப் பிரியும்போது அவரது குடும்பத்தினரின் எதிர்காலத்திற்காக எந்த ஏற்பாடுகளும் செய்யாமல் விட்டுச் சென்றது போலவே அவரது இலக்கியத்தையும் விட்டுச் சென்றூர். அவரது சிறந்த இலக்கியங்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தமிழ் நாட்டின் பல பாகங்களிலும், பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், கடிதங்களிலும், கையெழுத்துப் பிரதிகளாகவும் விரவிக் கிடந்தன. அவருக்குப் பின் அவற்றை ஒழுங்கு படுத்தி ஒன்று திரட்டி முறைப்படுத்தி வெளியிட்டு வருவதுடன் அதைக் கொண்டு அவரது குடும்பத்தினருக்கு ஒரு நிரந்தரமான வருவாய் தேட வேண்டியதும் அவசியமல்லவா ?

அப் பெரும்பணியை அவரது நண்பரும், அவரது வரலாற்று ஆசிரியரும், சிறந்த இலக்கிய கர்த்தாவுமான ஸ்ரீ ரகுநாதன் மேற்கொண்டு ஆங்காங்கு சிதறிக் கிடந்தவற்றைத் திரட்டித் தொகுத்து முறைப்படுத்தி வெளியிடுவதற்கும் அவ்விற்பனைத் தொகையிலிருந்து ஆசிரியர் பங்குப் பணமான

ராயல்டி (Royalty) மூலம் அவரது குடும்பத்திற்கு நிரந்தரமான வருவாய் கிடைப்பதற்கும் ஒரு ஏற்பாடு செய்தார். அந்த ஏற்பாட்டின்படி அவரது இலக்கியங்கள் எங்களால் தொடர்ந்து முறையாக வெளியிடப்பெற்று வருகின்றன. சென்ற ஆண்டில எதிர்பாராமல் ஏற்பட்ட சில சங்கடங்களினால் நூல்கள் வெளிவருவதில் தாமதங்கள் ஏற்பட்டன. இப்பொழுது அவையெல்லாம் ஒருவாறுக நீங்கி விட்டன. மீதமுள்ள நூல்களும் தொடர்ந்து வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

புதுமைப்பித்தன் மனைவிக்கும் அவரது ஒரே மகளுக்கும் ஒரு பாதுகாப்பும் எதிர்கால நம்பிக்கைக்கு ஒரு பிடிப்பும் வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு அவரது குடும்பத்திற்கு உதவி நிதி சேர்க்க வேண்டுமென்று அப்பொழுது துணைச் செயலாளராயிருந்த ஸ்ரீ ரகுநாதன் கூறிய யோசனையை ஏற்றுத் தமிழ் எழுத்தாளர் சங்கம் அவ்வேலையை மேற்கொண்டது. அந்நிதிக்குத் தமிழ் நாட்டிலும், கடல் கடந்து இலங்கை மலாயா

முதலிய நாடுகளிலுமுள்ள தமிழ் மக்கள் மனமுவந்து நி தி ய னு ப் பி உ த வி ப் புதுமைப்பித்தன்பாலும், அவரது இலக்கிய சேவையின்பாலும் தங்கட்குள்ள பற்றுதலைத் தெரிவித்தனர்.

அந்நிதித் தொகை சென்னையில் சமீபத்தில் புதிதாக உருவாகி வரும் ராஜா அண்ணுமலைபுரத்தில் **"புதுமைப் பித்தன் நிலையம்"** என்ற ஒரு வீடாக உருவாகியிருக்கிறது. இது தமிழ் மக்கள் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய ஒரு காரியமல்லவா?

புதுமைப்பித்தன் இலக்கியங்களை மு றை ப் ப டு த் தி ச் சேகரித்துதவிய ஸ்ரீ ரகுநாதன் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி. நீங்களும் நன்றி செலுத்துவீர்கள் அல்லவா?

வணக்கம்

**கண. இராமநாதன்**

பதிப்பாசிரியர்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அன்று இரவு | ... | 9 |
| நிசமும் நினைப்பும் | ... | 35 |
| புரட்சி மனப்பான்மை | ... | 55 |
| உபதேசம் | ... | 62 |
| நாசகாரக் கும்பல் | ... | 69 |
| பொய்க் குதிரை | ... | 102 |
| வாடா மல்லிகை | ... | 113 |
| செவ்வாய் தோஷம் | ... | 119 |
| கருச் சிதைவு | ... | 131 |
| சணப்பன் கோழி | ... | 140 |
| திருக்குறள் செய்த திருக்கூத்து | ... | 146 |
| மனநிழல் | ... | 159 |
| எப்போதும் முடிவிலே இன்பம் | ... | 169 |

புதுமைப்பித்தனின் கதைகள் ஒவ்வொன் றும் ஒரு பிரச்னையைப் பற்றியதாகவே இருக்கும். அவருடைய கதைகள் பொழுதுபோக்குக்கான கதைகள் அல்ல. அவரது கதைகள் சமூகத்தை நோக்கிப் பல்வேறு ஆணித்தரமான கேள்விக் குறி களை அடுக்குகின்றன. அழுகி நாற்ற மெடுத்துப்போன சமூகத்தின் ஊழல் களைக் கீறிப் பிளந்து காட்டுகின்றன. வாழ்க்கையின் அன்ருடப் பாட்டின் அடிக் குரல் அவரது கதைகளிலே எதிரொலித் தது. சொப்பனுவஸ்தையிலே சிக்கி, கனவு காணும் அபூதக் கலைஞனல்ல புதுமைப்பித்தன்.

—ரகுநாதன்.

# அன்று இரவு

## 1

### அரிமர்த்தன பாண்டியன்

**நா**ன்மாடக்கூடலில் அன்றிரவு மூவர் உறங்கவில்லை. அதில் ஒருவன் சொக்கேசன். மனிதனுடன் மனிதனுக நடமாடி, அவர்களுடைய சுகதுக்கங்களைப் பகிர்ந்துகொண்டு, வளையல் விற்று, சாட்சி சொல்லி, சங்கப் புலவர்கள் கருவமடக்கி, வாழையடி வாழையாக ஆண்டுவரும் பாண்டியர்களுக்கு மந்திரியாய், நல்லாசிரியனுய், தெய்வமாய்க் கை கொடுத்து வரும் சொக்கேசன், அழகன் உறங்கவில்லை. பிறவா நெறி காட்டுவானுக்கு உறக்கம் ஏது? ஊண் ஏது? அடுத்த ஆள் ஓர் அரசன்; பாண்டியன், அரிமர்த்தன பாண்டியன். இமையா நாட்டம் பெற்றவன் போல, சயனக்ருஹத்தில் மஞ்சத்தில் அமர்ந்து நினைவுக் கோயிலில் நடமாடி வந்தான். அறிவை அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகள் சரக்கூடம் போட்டன; நடைபெற்ற நிகழ்ச்சிகளை வாலுடன் தலையிணைத்துக் காட்டி நகரின் வரம்பமைத்த பாம்பு மாதிரி அறிவு சக்கரவியூகம் போட்டது.

பிரகாசம் கண்ணைக் குத்தித் தூக்கத்துக்கு ஊறு விளைக்காமல் இருப்பதற்காக அமைத்த நீலமணி

விளக்கு, அவனது மார்பில் கிடந்த ஆரத்தில் பட்டு, சற்று அசையும்போது மின்னியது. கை விரல் மோதிரத்தை நெருடிக் கொண்டே சாளரத்தின் வழியாகத் தெரிந்த சிறிய துண்டு வான்வெளியை நோக்கிக் கொண்டிருந்தான். அன்றிரவு கிருஷ்ண பட்சத்துச் சந்திரன்; அது உதயமாக இன்னும் இரண்டு சாமம் கழிய வேண்டும். சாளரவரம்புக்கு உட்பட்ட தாரகைகள் ஒன்று இரண்டு, தீர்க்கதரிசிகளின் அறிவு வரம்புக்குள் அடைபட்ட பிரபஞ்ச ரகசியங்கள் ஒரு குறிப்பிட்ட கோலத்தில் அமைந்து, மனித உயிர் நாடும் வேட்கைக்குச் சாந்தி தரும் சமயம் என்ற ஒரு குறிப்பிட்ட கோலத்தைக் காட்டுவதுபோல, ஜோதிட விற்பன்னர்கள் வகுக்காத ராசி மண்டலங்களை அமைத்துக் காட்டியது.

சாளரத்தின் உச்சியிலிருந்து, வானத்துக்கு நேர் கோட்டில் ஆணியடித்து வைரம் பதித்தது மாதிரி, அல்ல மஞ்சள் கலந்து சிவப்புக் கல்பதித்த மாதிரி, ஒரே ஒழுங்கில் அமைந்து நின்று அசைந்து கண் சிமிட்டியது. மன்னன் மனம், அன்றைய நிகழ்ச்சிகளை ஒரு விநாடி மறந்து தாரகைக் கூட்டத்தில் லயித்தது. மனம் ஒன்ற ஒன்ற, இருட்டுக்குள் இருளுக்கு வரம்பு போட்ட மாதிரி கோபுரமும் கலசமும் திரண்டு உருவாயின; அதன் மத்தியில் அந்த விளக்குகள் என்ன, நம்மூர்க் கோயிலைக் கூடவா, நாம் தினம் கும்பிட்டு மன உளைச்சல் என்ற சுமையை இறக்கி வைக்கும் சுமைதாங்கியான கோயிலைக் கூடவா மறந்துவிட்டோம் என்று நினைக்கிறான் பாண்டியன். தன்னை அறியாமல் மீசையை நெருடிக் கொண்டே சிரிக்கிறான். கோபுரத்தைத் தாண்டி ஒண்டித் தெரியும் துண்டு வானத்தில் ஒரு நட்சத்திரமும் கூடச் சிரிக்கிறது.

'முப்பது வயசுக்குள் எவனுவது தீடீரென்று மாறிப் பரம் ஒன்றே என்ற நினைப்புடன் நடமாட முடியுமா?

குதிரை வாங்கப்போன மந்திரி திரும்பிவரும்பொழுது, விழுந்து கும்பிடு என்று என் மனசே சொல்லும்படி எப்படி மாறிவிட முடியும்? கொண்டுபோன பணத்தை என்ன செய்தான் ? விரயம் செய்து போகத்தில் ஆழ்வதென்றால் அவன் உடம்பு அதைக் காட்டியிருக்குமே.'

அரிமர்த்தனன் மனசிலே அன்று பிற்பகல் பட்டி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன :

அமாத்தியன் திருவாதவூரன், பகல் முழுவதும் கால் கடுக்க நடுவெயிலில் நின்று கல் சுமந்து கசையடிபட்ட தன் சோர்வு சற்றும் காட்டாமல், வந்தபோது பூத்து அலர்ந்த புன்சிரிப்போடு நிற்கிறான். அரசன் அரிமர்த்தன பாண்டியன் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறான்.

" அமாத்தியரே, குதிரைகளுக்குக் கொடுத்தனுப்பிய தொகை எங்கே ?"

" அவனைத் தவிர இவ்வுலகில் கொடுப்பவர் யார் ? கொள்பவரார் ?"

" வாதவூரரே, அப்படியானால் பணம் வாங்கவில்லை என்று மறுக்கிறீரா ?"

" குதிரை வரும் என்று சொல்லுகிறேன்."

" குதிரையைப் பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். பணத்தை என்ன செய்தீர், சொல்லிவிடும் ; உம்மை மன்னித்துவிடுகிறேன்."

" அரசே, வாதவூரர் கொண்டு சென்றது அரசாங்கப் பணம்; அதை விரயம் செய்யத் தங்களுக்குக்கூட உரிமை கிடையாது என்பதைத் தாங்கள் எத்தனை முறை இந்த வாதவூரார் முன்னிலையிலேயே சொல்லியிருக்கிறீர்கள்

மன்னிப்பது என்ருல் பாண்டியன் தனது ஆட்சியை அழிப்பது என்பதே பொருள்" என்று இடைமறிக்கிருர் ருத்திரசாத்தனுர் என்ற மந்திரி.

"பணம் வந்துவிட்டால் போதுமா? சமயத்தில் குதிரைகள் கிடைக்காததனுல் நாம் எவ்வளவு ஆபத்தான நிலேயில் இருந்தோம்? சோழன் திரட்டிய சேனே நம்மீது விழுந்திருந்தால் நாடு என்ன கதியாகும்? களப்பிரர்கள் சோழநாட்டைச் சூறையிடாதிருந்தால் இன்று மீன் கொடியில் ரத்தக்கறைகள் அல்லவா படிந்திருக்கும்? தோல்வி என்பது நமக்கு இல்லே. சொக்கேசன் உள்ளவரை, பாண்டியன் உள்ளவரை, அந்நியன் தலே மண்ணில் உருளத்தான் செய்யும்; இருந்தாலும்...." என்கிருர் ஏனுதியான பகைக்கூற்றச் சித்திரனுர்.

"வாதவூரரே, என்ன சொல்லுகிறீர்? தொகை எங்கே?" என்கிருன் அரிமர்த்தனன்.

"கொடுத்தவன் வாங்கிக்கொண்டான்; குதிரைகள் வரும்" என்கிருர் வாதவூரர்.

"அரசே, வாதவூரருக்கு வயசு முப்பதுதான். திருக்கோவையாரைப் பாடியவர் என்பதற்காக, அவரை நாம் சிறிது காலம் பார்க்காமல் இருந்துவிட்டதற்காக, ஜீவன் முக்தராகிவிட்டார் என்று நினேப்பது தவறு. சங்கரனுர் நெற்றிக் கண்ணேத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்ற நாடு இது. சங்கரருக்கே அப்படியென்ருல் வாதவூரருக்கு மட்டும் என்ன இளக்காரம்?" என்கிருர் ருத்திரசாத்தனுர்.

"வாதவூரரே, என்ன சொல்லுகிறீர்? சித்தர்கள் போலப் பரிபாஷையில் பேசி ராஜாங்க நேரத்தைக் கழிக்க வேண்டாம். குதிரைகள் வரும் என்கிறீரே; எப்போது வரும்?"

வாதவூரன் கண்கள் ஏறச் செருகிவிட்டன, நின்ற நிலையிலேயே உள்ளோடு ஒன்றி விட்டான்.

உதடுகள், "குதிரைகள்-குதிரைகள்-குதிரைகள்...." என முணுமுணுக்கின்றன.

பாண்டியன் மனசிலும், "குதிரைகள், குதிரைகள் குதிரைகள்" என்ற வார்த்தைகள் எதிரொலிக்கின்றன.

பட்டி மண்டபத்துக்கு வெளியே சடபட வென்று ஆர்ப்பாட்டமான சத்தம். காவலர்கள் இருவர் ஓடி வருகிறார்கள். "குதிரைகள் வந்துவிட்டன ! அரசே ! குதிரைகள் வந்து விட்டன !" என்று நமஸ்கரிக்கின்றனர்.

"என்ன, குதிரைகளா ! எங்கே !" என்று எழுந்திருக்கிறான் மன்னன். சபையும் திரண்டு எழுந்திருக்கிறது. வீரக்கழல் முழங்க, அரசன் மிடுக்குடன் வாசலுக்குப் போகிறான். மந்திரி பிரதானிகள் பின் தொடர்கிறார்கள். பட்டி மண்டபத்திலே 'குதிரைகள் குதிரைகள்' என்று தம்மை மறந்து ஜபிக்கும் வாதவூரரையும் சிலைகளையும் தவிர யாரும் இல்லை.

குதிரைகள்தாம் எத்தனை ! பத்து அக்குரோணிக்குப் போதுமானவை ; அவ்வளவும் வெள்ளை. குதிரை நோட்டம் தெரிந்த கணக்காயர்கள் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறார்கள் ; ஒரு சுழி இருக்கவேண்டுமே. அத்தனையும் உயர்ந்த ஜாதிக் குதிரைகள்.

குதிரைப்பாகன்தான் கண்கொள்ளாக் காட்சி. அவனை அழைத்துச் சென்று அப்படியே முடி சூட்டிவிடலாமா என்றுகூட நினைத்தான் அரிமர்த்தனன். என்ன அசட்டுத்தனமான நினைப்பு ! அவன் துருஷ்கனா, யவனனா, சோனகனா ? கண்களிலேதான் அம்மம்ம, என்ன பயங்

கரம்! சாட்டையைக்கொண்டு சிமிட்டாக் கொடுக்கிருன் அத்தனை குதிரைகளும் அணிவகுத்து நிற்கின்றன!

"பெற்றுக்கொண்டு சீட்டைக் கொடும்; போகவேண்டிய வழி கணக்கில் அடங்காது" என்கிருன் குதிரைப் பாகன். குரலில் இனிமையும் பயங்கரமும் கலந்திருந்தன.

அரசன் முறிச்சீட்டில் கையெழுத்திட்டுத் தருகிருன். பாகன் வாங்கிக்கொண்டு வணக்கங்கூடச் செய்யாமல் போய்விடுகிருன்.

மன்னனும் மந்திரிப் பிரதானிகளும் பட்டி மண்டபத்துக்குள் திரும்ப வருகிருர்கள். வாதவூரன் முகத்தில் சோகம் தேங்க, "நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே, வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்" என்று தழுதழுத்தபடி உருகி நிற்கிருர்.

"வாதவூரரே, என்னை மன்னிக்கவேண்டும்; நான் ராஜ்யத்தைச் சுமக்கிறவன்."

"அரசே, நான் உலகின் துயரத்தை, வேதனையைச் சுமக்கிறவன்."

"வாதவூரரே, அப்படி மனம் நொந்துகொள்ளக் கூடாது. தாங்கள் பழையபடி எனக்கு அமைச்சராகவே இருக்கவேண்டும்; தாங்கள் இல்லாவிட்டால் இத்தனை குதிரைகள் கிடைக்குமா?"

"அமைச்சன் மருத்துவனைப் போல இருக்கவேண்டும் என்பதை நான் தங்களுக்குச் சொல்லவேண்டுமா?" என்கிருர் ருத்திரசாத்தனுர்.

"பகையை விரட்டப் படை பலம் வேண்டாமா?" என்கிருர் ஏனதி.

அரிமர்த்தனன் மனசு மறுபடியும் அந்தக் குதிரைகள் மீது, அந்த வெள்ளைக் குதிரைகள் மீது சவாரி செய்கின்றது. பகைவர்கள் தலைமீது நடமிடும் குதிரைகள், வாதவூரன் கொடுத்த குதிரைகள் அல்லவா? என்ன அறிவு, என்ன தூய்மை! தெய்வாம்சமாக, தெய்வமாகக் குதிரைப்பாகனைப் போலவே நின்றானே......

நடுச்சாமத்தைப் புள்ளியிடச் சங்கு விம்முகிறது, அலறுகிறது, முழங்குகிறது. அதன் ஓசையும் மடிகிறது.

அது என்ன சத்தம், தனி நரி ஊளையிடுகிறமாதிரி! அதன் குரல் ஒடுங்கும் சமயத்தில் ஆயிரம் ஆயிரமாக நரிகள் ஊளையிடுகின்றன. நான்மாடக்கூடலில் நரிகளா? குதிரைப்பந்தி இருக்கும் திசையிலிருந்து அல்லவா கேட்கிறது? அரிமர்த்தனன் எழுந்து நிலாமுற்றத்துக்குச் செல்லுகிறான். காதுகளை ஈட்டியிட்டுக் குடைவது போன்ற இரைச்சல். இருட்டில் கண்கள் துழாவுகின்றன. இருட்டைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை.

மன்னவன் வீரக்கழல் ஒலிக்க, உத்தரீயம் தரையில் புரள, மறுபடியும் சயனக்கிருஹத்தில் நுழைகிறான். மஞ்சத்தருகில் சாய்த்து வைத்திருந்த உடைவாளுடன் அறையை விட்டு விரைகிறான். வாசலில் தூக்கமும் மருட்சியும் கண்களில் தேங்க, குழலும் மேலாக்கும் சரிய துவண்ட நடையில் விளக்கெடுத்து முன் செல்லுகிறார்கள் பணிப்பெண்கள். அந்த மங்கிய ஒளியில்தான் அவர்கள் என்ன அழகு!

அரசன் அரண்மனை வாசலில் வந்து நிற்கிறான். "குதிரை லாயத்தில் நரிகள் புகுந்துவிட்டன. அரசே, அவை நகருக்குள்ளும் பிரவேசித்து விடும்போலத் தெரிகிறது..." என்று கும்பிடுகிறார்கள் குதிரைப் பந்தியின் காவலர்கள்.

மூன்று ஜோடிக் கழல் ஒலிகள் இருட்டில் படிப்படியாக மங்கி ஓய்ந்தன.

திடீரென்று இருட்டையே கூர்ங் கத்திகொண்டு கிழிப்பதுபோல ஒரு தனி அலறல். பீதியில் வெருண்டு உயிருக்குப் போராடி மடியும் குதிரையின் குரல் அது. அதைத் தொடர்ந்து ஆயிரம் பேய்கள் கெக்கலிகொட்டி நகைப்பது போன்ற நரி ஊளை. போர்க்களத்தில் கவந்தங்கள் ஆடுவதையும் அச்சிற்று விழும் தேரில் அடிபட்டு நசுங்கும் குதிரைகள், யானைகள் போடும் கூச்சல்களையும் கேட்டவன்தான் அரிமர்த்தனபாண்டியன். ஆனால் அன்று கேட்ட அந்தத் தனிக் குதிரையின் சப்தம், அவனிடம் அபயம்கேட்டு ஏமாந்து உயிர்விடுவது போல இருந்தது. நான்மாடக்கூடலில் இந்த இருட்டுப் பேய்க் கூச்சல் ஜனங்களை எழுப்பிவிட்டிருக்கக்கூடும். அவர்கள் இரட்டைத் தாழிட்டு வீட்டுக்குள் அமர்ந்து விட்டனர்.

குதிரைக் கொட்டடியின் முன் காவலர்கள் கதவைத் தாழிட்டுக் காவல்காத்து நின்றனர்.

"உள்ளே மருந்துக்குக்கூட ஒரு குதிரை இல்லை. நமது லாயத்தில் நின்ற பழைய குதிரைகளைக்கூட, ஒன்று பாக்கிவிடாமல் கொன்று கிழித்துவிட்டன" என்றார்கள் காவலர்கள்.

"புதுக் குதிரைகள் ?"

"அவை மறைந்த மாயந்தான் தெரியவில்லை. உள்ளே நரிகள் நின்றுதான் ஊளையிடுகின்றன. அவை வெளியே வந்துவிடாமலிருக்க, கதவை இழுத்துச் சாத்தி வைத்திருக்கிறோம். நாங்கள் சாத்து முன்பே பெரும் பகுதி வெளியே ஓடிவிட்டன."

"அரசே, குதிரைப் பந்திக்குள் நரிகள் ஊளையிடு கின்றனவே; புதுக் குதிரை ஒன்றுகூட இல்லையே" என்று பக்கத்தில் ஒரு குரல் கேட்டது.

அரசன் திரும்பிப் பார்க்கிறான். அமாத்தியர் ருத்திர சாத்தனார் நின்றுகொண்டிருந்தார்.

"ஆமாம். புதுக் குதிரைகளைக் காணவில்லையாம்" என்றான் அரிமர்த்தனன்.

"நானும் அப்படித்தான் எதிர்பார்த்தேன். தங்கள் மந்திரியின் சித்து விளையாட்டாக இருக்கலாம். நீங்கள் கவனித்தீர்களோ, குதிரைகள் வந்தபோது அவரது நிலையை? நான் வரும்போதே மீண்டும் அவரைக் கைது செய்யும்படி உத்திரவிட்டுவிட்டு வந்தேன்."

"சீ! அப்படி இருக்காது. மேலும் நீதி வகுக்க நாம் யார்?"

"அரசே, தாங்களுமா?"

"குதிரைப்பாகன் எங்கு மறைந்தான் என்பதுதான் தெரியவில்லை. நேற்று நமது கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் சென்று படுத்ததைத்தான் சிலர் பார்த்த தாகத் தெரிகிறது. ஒற்றர்கள் கிரகித்த தகவல் இது தான்" என்றது மற்றொரு குரல். ஏனாதி பகைக்கூற்றச் சித்திரனார்தாம்.

"பாகனைப் பிடித்தால் காரியம் தெரியும்."

## இடை வெட்டு

**அடியார்க்கு நல்லார்:** நான்தான் அப்பொழுதே சொன்னேனே; குதிரைகள் நிச்சயமாக வரும் என்று, எனக்குத் தெரியாதா வாதவூரனை!

**சேனாவரையர்:** வாதவூரன் பொய்யன் என்று நான் எப்பொழுதும் சொன்னதுண்டா? சமயத்துக்கு வராத குதிரைகள் இனி வந்து என்ன, வராமல் என்ன? இப்பொழுது வெகு சிரேஷ்டமான பரிகள் கிடைத்தாலும் அவை நரிகளுக்குத்தான் சமம். மானம் கெட்டுப்போய் அரசனும் அவற்றை ஏற்றுக்கொண்டானே !

**இளம்பூரணர்:** புரை தீர்ந்த நன்மைபயக்கும் என்றால் எதுவும் பொய்யே அல்ல. இன்று அரசன் ஏற்றவை நரிகளாகவே இருந்தாலும் அவை பரிகளே. வாதவூரனுக்கு வயசு முப்பது என்பதற்காக வாயில் வந்தபடி எல்லாம் பேசுவதா?

**ஒற்றன்:** குதிரைகள் கொண்டு வந்தானே, அவனை நீங்கள் எங்காவது கண்டீர்களா?

**அடியார்க்கு நல்லார்:** சொக்கேசன் ஆலயத்து வசந்த மண்டபத்துக்குள் போய் உட்கார்ந்தான். நான் என் கண்களால் கண்டேன்.

**சேனாவரையர்:** நான் பார்க்கும்பொழுது அவன் வசந்த மண்டபத்தில் இருந்தான், என்று சொல்லும். அவன் இப்பொழுது எங்கும் இருக்கலாம். அவனது கழுத்தில் கிடந்த மறுவைப் பார்த்தீர்களா? ஆலகால விஷம் மாதிரி அல்லவா இருந்தது? உன்மத்தன்போல் அல்லவா, நிதான புத்தியுடன் நடந்துகொள்ளச் சிரமப்படும் உன்மத்தன்போல் அல்லவா, அவன் விழித்தான்?

**இளம்பூரணர்:** மறு இருக்கிற இடத்தில் இருந்தால் எல்லாருக்கும் அதிருஷ்டந்தான். அவன் அதிருஷ்டசாலிதான் என்பது நிச்சயமில்லை. வாதவூரன் நிச்சயமாக அதிருஷ்டசாலிதான்.

## 2

## வாதவூரர்

**வா**தவூரன் மனசும் அறிவும் தட்டு மறித்து விளையாடின. யாருக்கு யார் பதில் சொல்லுகிறார்கள் என்ற நினைப்பின்றி யாரோ மனசில் சொன்னதை, தாம் நாவால் சொன்னதாகவே வாதவூரருக்குப் பட்டது. குதிரைகள் வாங்க வேண்டும் என்ற நினைப்பே அற்றுப் போகும்படி தம்மை இழுத்து உட்கார்த்திவிட்ட பெரியார் தம்மிடம் என்னத்தைக் கண்டுவிட்டார் என்பதுதான் முடிவில்லாப் புதிராக அவரை மலைக்க வைத்தது.

கல்லால நீழலில் அமர்ந்த தட்சிணாமூர்த்தத்துக்கு, கண்கூடாகக் கண்டு, ஸ்பரிசித்துப் பேசக்கூடிய ஒரு ரூபம் இருக்குமாகில் அது அவர்தாம். என்னை ஆட்கொள்ளுவதற்காக அம்மையப்பனே அப்படி வந்தானோ! சீ! நான் யார்? எனக்குத் தகுதி என்ன! மனசில் அவன்மீது நாட்டம் இருந்துவிட்டால் போதுமா? கால் எடுத்து வைக்க முடியாமல், அறிவுதான் அடிக்கு நூறு வேலிகள் கட்டுகிறதே, அப்படிப்பட்ட அறிவு, என்னை ஆட்கொண்டு என்னை அளந்து நிற்கும்போது, அவனால்தான் வர முடியுமா, என்னால்தான் அவனிடம் போக முடியுமா?

பாண்டியனிடம் சமத்காரமாகப் பேசிவிட்டதால் நான் செய்த காரியம் சரியாகிவிடுமா? அவன் கொடுத்தானாவது! அவன் வாங்கிக் கொண்டானாவது! அவன் அரிமர்த்தனனாக வந்து கொடுத்தபொழுது அரிமர்த்தனனாக நிற்கும் அவனிடம் கணக்குக் காட்டுவதை விட்டு, வேதாந்தம் பேசி என்னை நான் பொய்த்துக்கொண்டேனே! என்னைவிட நெஞ்சறி கள்வன் எவன்? என்னையும் நம்பி, பணத்தைக் கொடுத்தானே பாண்டியன். பாண்டியன் பணம். பாண்டியன் பணம் கரையும்பொழுது காலம் நின்

றதே, களனே அழிந்ததே. அந்தப் பெரியாரை நான் திரும்பவும் பார்க்க வேண்டுமே. அவர் அருகில் இருந் தால், தாய் மடியில் இருப்பது போலல்லவா இருந்தது? அவர் என்னிடம் என்ன சொன்னார்? என்னத்தைத்தான் சொல்லவில்லை? அவர் சொன்னதை வேதமும், வேதாந்தி களும், சங்கரனும் சொல்லத்தான் செய்திருக்கிறார்கள். அவர் சொன்னதன் நுட்பம் வார்த்தைக்குள் இல்லையே. குரலிலா? கண்ணிலா? அவர் எதைக் கொண்டு என்னை இழுத்துவிட்டார்? எனக்குத் தெரிந்ததைத்தான் சொன் னார். ஆனால் தெரிந்தது என நான் நம்பி இருந்ததற்கு எவ்வளவு உள்ளுறை கொடுத்து விட்டார்? "தாமே குதிரைகள் வரும்; நீ உன் குதிரைகளை அடக்கக் கற் றுக்கொள்" என்றாரே சிரித்துக்கொண்டு. அப்பொழுது பாண்டியனும் அவனுடைய குதிரைகளும் அவனுடைய குதிரை வேட்கையும் இந்தப் பிரபஞ்ச லீலையில் எவ்வளவு அற்பமாக, துச்சமாகப் பட்டன; நமது பார்வைக்குள் படவேண்டாத ஒன்றாகப் படும்படி செய்து விட்டாரே. நானா பணத்தை எடுத்துக் கொடுத்தேன்? இந்தப் பிர பஞ்சமே எடுத்துக் கொடுத்தது. அதற்குப் பாண்டியன் என்னை வெயிலில் நிறுத்த வேண்டும், கசையடி கொடுக்க வேண்டும், கண்ணைப் பிடுங்க வேண்டும், யானையைவிட்டு என் தலையை இடற வேண்டும், இவை எல்லாம் அற்பத் துக்கு அற்பமான காரியங்கள். பாண்டியனது குதிரை வேட்கை மாதிரி பிரபஞ்சத்தின் பார்வையில் படவேண் டாத ஒன்று. என்னுடைய கட்சியும் பாண்டியன் கட்சி போன்றதுதான். மதுரை அதிருஷ்டம் பெற்ற ஊர்தான். பாண்டியநாடு அதிருஷ்டம் பெற்ற நாடுதான். என்னை எப்படியாவது நீதியின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாப்ப தற்காக என்ன என்ன பாடு பட்டான்! அவனுக்குக் குதிரையைப் பற்றிக்கூட அக்கறை இல்லைபோல் இருக் கிறது. நீதி என்ற ஒன்று திருப்தியடையும்படி நான்

பதில் தந்துவிட்டால், என்னைப் பாதுகாத்து மறுபடியும் இந்த மாதிரி உத்தியோக விலங்கை மாட்டிவிடுவதில் அவனுக்கு என்ன ஆசை! அரிமர்த்தனனும் அதிருஷ்ட சாலிதான். என் உயிருக்கு உயிரான ருத்திரசாத்தனும் ஏறுதியும் சத்திர வைத்தியர்கள் போல அல்லவா நடந்து கொள்ளுகிறார்கள்? மனித வம்சம் அநாதி காலந்தொட்டு இன்றுவரை, இனிமேலும் அறுகு போலப் படர்ந்து கொண்டே இருக்க, கண்களைக் கட்டிக்கொண்டு நடக்கும் நீதியின் பின்புறமாக, தம் மனதைச் செப்புக் கோட்டைக்குள் சிறை செய்து நடந்தார்களே, அவர்கள் அல்லவா மந்திரிகள்? மந்திரிகள் என்று உலகத்தில் வேடமிட்டால் மந்திரியாகவே நடிக்க வேண்டும். இடையிலே வேஷத்தைக் கலைத்துக் கொள்ளலாமா? அது மனு தர்ம மாகாது; உயிர்த் தருமம். உயிர்த் தருமத்துக்கு அரசனது பட்டி மண்டபத்தில் இடங்கொடுக்க முடியுமா? கொடுத்தால் பட்டி மண்டபத்தில் வௌவாலும் குறு நரியும் கொண்டாடி நடக்குமே....

என்ன?

குதிரைகளா? பாண்டியனுடைய பணியாளர்கள் அல்லவா வந்து சொல்லுகிறார்கள்.? குதிரைகள்! குதிரைகள் வந்துவிட்டனவோ? குதிரைகளாவது வருவதாவது! பணம் போன திக்கில் குதிரைகள் ஏது? உன்னை ஆட்கொண்ட ஐயன், அன்று கல்லாலின் அடியில் உன்னையே உருக்கிவிட்டவன், உன்னைக் காப்பாற்றக் குதிரைகளைக் கொண்டு வந்து விட்டானா? என்ன ஆபத்து? எனக்காக, என் பொய்க்காக, என்னுடைய நிலையில்லா மனசுக்காக என்னுடன் சேர்ந்து தெய்வமே, என்னுடைய குருதேவனே, அந்தப் பொய்யை நிலைநாட்டத் துணிந்தானா? நான் கொடுக்காத தொகைக்குக் குதிரைகளா? எனக்காக, என்னுடைய அற்ப ஜீவனைப்

பற்றுவதற்காக, சகல லோகங்களுமே திரண்டு நின்று எனது பொய்யை நிலைநாட்ட வருவதா? களங்கமற்ற தர்மமானது, என்னுடைய சிற்றறிவின் கொடுக்கல் வாங் கல்களின் அற்ப நடத்தைகளுக்கு, அகந்தைக்குத் துணை வருவதா? உலகத்தையே பொய்ப்பிக்கும் பொய்யை உண்டாக்கிய நான், அதமன் அல்லவா? சர்வேசுவரனு டைய லீலை என்னுடைய பொய்க்கும் துணை நின்று அதை மெய்ப்பிக்க அதலபாதாளத்தில் இறங்குமாகில் அது....அது...எனது நா எழவில்லையே.......!

வாதவூரரின் உடலிலிருந்து விலங்குகள் கழற்றப்படு கின்றன. அவருக்குப் பழைய மரியாதைகள் செய்யப்படு கின்றன. ஆனல் அவை மெய்யான பார விலங்குகளாக ஊனையும் உயிரையும் உணர்வையும் அதற்குப் பின்புற மாக உள்ள மகா சூட்சுமமான கரணங்களின் சேர்க்கைக் கோப்பையும் அழுத்தின. அவரது நெஞ்சு உலர்ந்தது, வறண்டது, சுழன்றது, பொங்கியது, குமுறியது; சுழித்து நுரைத்துக் கொப்புளித்துப் பொய்ம்மை என்னும் வேதனை யைக் கக்கி விக்கித் தடுமாறியது. அவருடைய வேதனை உலகத்தின் வேதனை ஆயிற்று. மதுரை மூதூரின் வேதனையாக உருவெடுத்தது; பெருக்கெடுத்தது. பிர வாகமாகச் சுழித்துக் குறியற்றுக் குறிக்கோள் அற்று விம்மிப் புடைத்து ஓடியது. கரைகள் என்ற பிரக்ஞை இல்லாமலே மதுரை மூதூரை நனைத்தது, முழுக்கியது, ஆழ்த்தியது. பஞ்சணை மெத்தையில் அமர்ந்திருந்தது வாதவூரன் உடல். அவருடைய வேதனை உலக வியாபக மாக, மதுரையையும் அதற்கும் அப்பால் உள்ள அண் டங்களையும் தன்னுள் ஆக்கியது......

நடுநிசியில் ருத்திரசாத்தனுடைய சேவகர்கள் அவ ருடைய உடலில் விலங்கிட்டனர். விலங்குகள் ஏறின என்ற உணர்வும் அற்றுப்போன சமயம் அது. வேதனை

வெள்ளம் அவரையும் அவரது பிரபஞ்சத்தையும் அமுக்கித் தன்னுள் ஆக்கித் தடந்தெரியாமல் செய்துவிட்டது.

## இடைவெட்டு

**சேனுவரையர்:** வையை நதியிலே வெள்ளம் இப்படி வந்தது என்று சொன்னல் நம்புகிறவர்கள் யார்? சில சமயங்களில் கண்ணுல்காணும் விஷயங்கள்கூட நிஜமா என்ற சந்தேகம் தோன்றுகிறது. நீர் அந்தப் பக்கமாக ஒரு கூடை மண்ணை அள்ளிப் போடும்.

**இளம்பூரணர்:** பரிகள் நரிகளுக்குச் சமம் என்றீரே உமக்கு யக்ஷிணி உபாசனை உண்டோ? சொன்ன மாதிரி பாண்டியன் குதிரை லாயத்திற்குள் நரிகள் எப்படிப் புகுந்தன? தலையாலங்கானத்துப் போரில் கவந்தங்கள் ஆடினவாம். கூளிகளும் பேய்களும் கூழ் அட்டனவாம். அன்று கேட்ட பேரிரைச்சல்கூட இன்றைய நரி ஒன்றின் சத்தத்துக்கு ஈடாகாதே, அலறல் கால பாசம் போல் அல்லவா உயிரை நாடித் தடவியது! நரிச் சத்தம் கேட்டே நகரத்தில் சாவுக்குக் கணக்கு இல்லையாம்.

**அடியார்க்கு நல்லார்:** பேசிக்கொண்டே நிற்காதீர். முழங்கால் பரியந்தம் தண்ணீர் சுற்றுவது தெரியவில்லை? இன்று வையையில் வெள்ளம் எப்படி உண்மையோ அப்படி நரிகளும் உண்மை. இவை கண்ணுக்குத் தெரிந்தவைகள். இவற்றிற்கும் மேலாக ஏதோ ஒன்று, ஆதிகாரணமான ஒன்று......

**ஒற்றன்:** ருத்திரசாத்தன் உத்தரவுப்படி வாதவூரனை விலங்கிட்டுவிட்டார்கள். அவனைப் பிடித்தால் போதாது. குதிரைப் பாகனையும் பிடிக்க வேண்டும்.

**மூவரும்:** மன்னவன் ஆக்ஞை அல்ல அது. அவன் அப்படி உத்தரவு போடமாட்டான். ஐயோ, வெள்ளம்

பொங்குகிறதே! நுரைகள் புரள்வதைப் பாருங்கள், சிவ னுடைய சிரிப்புமாதிரி......

## 3

## சொக்கன்

ஆலவாய்மெய்யன், உலகத்தைத் தன் வசம் இழுக் கும் சொக்கன் விளையாடினன். ஜீவாத்மாவின் வேத னையை உணராது விளையாடினன். அங்கயற்கண்ணியின் கண்ணில் பாசமும் கன்னத்தில் குழிவும் தோன்ற அவன் விளையாடினன். பெரியவராக வந்து, பெரிய ஞானோபதே சம் செய்வது போலப் பாவனை செய்து, தெரிந்ததையே சொல்லி, ஏற்கனவே தன் பாசத்தில் சிக்கிய ஜீவனை இன் னும் ஒரு பந்தனம் இட்டு வேடிக்கை பார்த்தான். ஈசன் விளையாடினன். வாதவூரன் அவனுடைய விளையாட்டுப் பொம்மையானன். ஈசனுக்குப் பிரபஞ்சமே வாதவூரனு யிற்று. பிரபஞ்சத்துக்கு உடைமையான அவனது பார்வை வாதவூரன்மீது மட்டும் விழுந்தது. பிரபஞ்சமும் அண்டபகிரண்டமும் அனந்தகோடி ஜீவராசிகளும் யோக நித்திரை போன்ற தாமஸ நித்திரையில் ஆழ்ந்துள்ள நிலைப்பொருள்களும் ஏகோபித்து ஏற்றுச் சுமக்க வேண் டிய அவனது பார்வை அத்தனையையும் விட்டு அதில் ஒன்ருன மகா நுட்பமான வாதவூரன் என்ற தோற்றத் தின்மீது, ஓர் உருவ வரம்புக்கு உட்பட்ட தனிச் சாகை யின் மீது விழுந்தால் அது சுமக்குமோ?

ஆமாம், அதனுல்தான் வாதவூரன் நெஞ்சிலே வேதனை பிறந்தது. சொக்கன் திடுக்கிட்டான். விளை யாட்டு விபரீதமாயிற்று. அவன் மனசையும் அந்த வேதனை கவ்வியது. அங்கயற்கண்ணியின் கண்கள் வாளையைப் போலப் புரண்டு சிரித்தன. கன்னங்கள் குழிவுற்றன. கோவைக் கனிக்கு நிறமும் மென்மையும்

கற்பிக்கும் அவள் அதரங்கள் மலர்ந்தன. கொங்கைகள் பூரித்தன. காம்புகள் விம்மின. செல்வி சிரிக்கத் தொடங்கி விட்டாள், அண்ணல் தன் செயல் கண்டு. பித்தாடும் சொக்கன் வேதனை கொண்டு சிரிக்கலானன். சிரிப்பு நாபிக் கமலத்திலிருந்து கொப்புளித்துப் பொங்கியது.

ஈசன் மனசிலோ வேதனை. ஈசன் வாதவூரனுகிவிட்டான். அவன் துயரம் இவன் துயரமாகியது. ஜீவனுடைய பொறுப்புக்குள் உட்பட்டு, அதன் அற்பத்திலும் அற்பமான கொடுக்கல் வாங்கல் பேரங்களின் சிக்கலை நன்குணர்ந்து அதன் சுமைகளைத் தாங்கலானன். ஈசன் கழுத்துத் தள்ளாடியது. என்ன சுமை! என்ன பாரம்! கண்கள் ஏறச் செருகின.

அவனது வேதனையைக் கண்டு அங்கயற் கண்ணி சிரிக்கிருள். அண்ட பகிரண்டமும் ஏகோபித்து அவளுடன் சேர்ந்து ஈசனைப் பார்த்துச் சிரிக்கின்றன.

வாதவூரனுக ஈசன் வேதனை கொண்டான். அவன் மனம் என்ற சர்வ வியாபகமான காலம் கொல்லாத சர்வ மனம் நைந்தது. குமுறியது. கொப்புளித்தது. வாதவூரனுகக் கிடந்து வெம்பியது. குதிரை எனக்காட்டி ஏமாற்றி வந்துவிட்ட செயலுக்காக, தானும் அந்த மனிதனைப் போலச் சிட்சை பெற்ருல் தான், ஆறும்; வாதவூரன் தன் அருகில் வந்தால், அவனருகில் தான் இருக்கலாயக்கு என நினைத்தான்.

வேதனை சுமந்த கழுத்துடன் ஆலவாய்க் கர்ப்பக் கிருகத்திலிருந்து வெளிவந்தது ஓர் உருவம். ஈசன் வெளி வந்தான். சுற்று முற்றும் பார்த்தான். எங்கே பார்த்தாலும் வெள்ளம். மதுரை மூதூரை ஊர் என்று அறிய முடியாதபடி ஆக்கிவிட்டது வெள்ளம். ஈசன் நடந்தான்.

ஈசன் சிரித்தான். ஈசன் வெள்ளத்தில் நீந்தி விளையாடி முக்குளித்துக் கும்மாளி போட்டுக்கொண்டிருந்தான்.

அங்கயற்கண்ணி சிரித்தாள். வெள்ளம் இன்னும் உக்கிரமாக நுரை கக்கிப் பாய்ந்தது.

மனிதவம்சம் துயரத்திலும் வேதனையிலுமே ஒன்று பட்டு வரும். தன்னை அறியாமலே முக்திநிலை எய்தும். அன்றிரவு அவ்வூரின் நிலை அது. யானையும் காளையும் மனிதனும் மதிலும் மண்ணும் அரசனும் ஆண்டியும் அன்று வெள்ளத்தைத் தடுக்க, மறிக்க, தேக்கி நகரத்தைக் காப்பாற்ற, காரிருட்டில், அருகில் இருப்பவன் என்ன செய்கிறான் என்பதை அறியாமல் மண்வெட்டிப் போட்டுப் போட்டு நிரப்பினர். மண் கரைந்தது. மறுபடியும் போட்டனர். கரைந்தது. மறுபடியும் போட்டனர்.

அன்றிரவு இரண்டு ஜீவன்கள் வெவ்வேறான துயரத்தில் வாடின. வாதவூரன் தன் பொய்யை நிலைநாட்டிய தெய்வத்தின் கருணையைச் சுமக்க முடியாமல் வேதனைப் பட்டான். மண் வெட்டி வெட்டிப்போடும் அனந்த கோடி ஜனங்கள் முயற்சியை அவனது வேதனை கரைத்தது. உழைத்து உழைத்துச் சோர்வடைகிறவர்களுக்குப் பசியாற்ற ஒரு கிழவி, பந்தமற்ற நாதியற்ற கிழவி பிட்டு அவித்து அவித்துக் கொட்டி விற்று வருகிறாள். அவள் கிழவி. அவளுக்கு நாதி இல்லை. பந்தம் இல்லை. பிட்டும் பிட்டுக் குழலுந்தான் பந்தம். தணிக்கை பண்ணிவரும் கணக்கர்கள் பசி போக்கப் பிட்டுக்காரியிடம் வந்தார்கள். அவளது அடுப்பில் எரிந்த நெருப்பில் கொஞ்சம் எடுத்து அவளது வயிற்றில் கொட்டிவிட்டுப் போனார்கள். மதுரை வாசிகள் எல்லாரும் கரைக்கு மண் போடவேணுமாம். அவளது பங்குக்கும், தச்சுமுழம் நாலு அளந்து போட்டிருக்கிறதாம். அவள் என்ன செய்வாள்? பிட்டுக் குழ

'ஃலப் பார்ப்பாளா, அடுப்பைப் பார்ப்பாளா, அந்த இருட்டில் ஆள் தேடிப்போவாளா?

இருட்டிலே "ஆச்சீ" என்ற குரல் கேட்டது. அதிலே எக்களிப்பும் பரிவும் கலந்திருந்தன. வேதஃன வெள்ளத்தில் முக்குளித்த ஈசன் குரல் அல்லவா?

"யாரப்பா, புட்டு வேணுமா?" என்று கேட்டாள் ஆச்சி.

"என்ன ஆச்சீ, புட்டா அவிக்கிருய்? புட்டு நன்ருக இருக்குமா?" என்கிருன் ஈசன்.

"என்னப்பா, இப்படிவா. உன்ஃன வெளிச்சத்தில் நல்லாப் பார்க்கட்டும். என் பேரன் மாதிரி இருக்கியே; வா இப்படி உட்காரு. உன் பங்கை நிரப்பிவிட்டியா? எனக்கு நாலு மொளம் அளந்திருக்காங்களாம். நீதான் ரெண்டு கூடை மண்ஃணப் போடேன். உனக்குக் கோடி புண்ணியம் உண்டு" என்ருள் கிழவி.

"எனக்கு என்ன கொடுப்பாய் ஆச்சி?"

"என்னிடம் காசு பணம் ஏது? இப்பவரை சாப்பிட்டவங்க கணக்குச் சொல்லிவிட்டுப் போயிட்டாங்க. உனக்கு வேணும்ஞ, புட்டுத் தாரேன்."

"ஆச்சீ, அப்படியென்ருல் நீ ரொம்ப ஏழையா?"

"இதென்ன கூத்தா இருக்கு! உங்க ஊர்லே பணக்காரங்களா புட்டுச் சுட்டுப் பொஃளக்கிருங்க?" என்று சிரித்தாள் கிழவி. நாலு புறமும் நரிகள் ஊஃளயிடும் வனந்திரத்தில் சிக்கிக்கொண்ட ஜீவனின், நிர்க்கதியாகத் தவிக்கும் உயிரின், துயரம் அந்தச் சிரிப்பிலே இழையோடியது.

"நீயோ பரம ஏழை. எனக்கோ பசி சொல்லி முடியாது. போஞப்போகிறது. புட்டு உதிர்ந்துபோஞல்,

அதை மட்டும் எனக்கு எடுத்து வைத்திருந்துகொடு. நான் போய் உன் பங்குக்கு மண்போடுகிறேன். ஆனால் எனக்குப் பசி அதிகம். ஒரு கூடை போட்டால், உடனே ஓடி வருவேன்."

"இந்தா..."

"இப்ப வேண்டாம் ஆச்சீ, போட்டுவிட்டு வருகிறேன்........"

ஈசன் மறுபடியும் வெள்ளத்தில் முக்குளித்து விளையாடினான். கரையேறினான். மறுபடியும் தண்ணீரில் குதிக்க ஆசை. ஆனால் பிட்டு ருசி நாக்கைச் சுழற்றியது. ஒரு கூடை மண் எடுத்துப் போட்டான்.

பாதிவெள்ளம் படக்கென்று வற்றியது. ஆனால், ஜலம் மனித வெள்ளம் இட்ட மண் கரைமேல் மோதித் தத்தி அலம்பி வழிந்து கொண்டிருந்தது.

"ஆச்சீ, ஒரு கூடை போட்டுவிட்டேன். பசிக்கிறது, புட்டுப் போடு."

"பேரப்பிள்ளை, தெய்வமேதான் உன்னை இங்கே அனுப்பியிருக்கு. நீயும் அதிட்டக்காரன் தான். நீ போனதுலே இருந்து எடுக்கிற புட்டு எல்லாம் உதுந்து தான் போகுது. இதோ பார், எத்தனை பேர் காத்து உட்கார்ந்திருக்கிறார்கள்."

"அது கெடக்கட்டும். இந்த முந்தித் துணியிலே புட்டைப் போடு. நேரமாச்சு. மண்ணைப் போட்டுக் கரையை அடைக்க வேண்டாமா?"

"ஆமாம், ஆமாம். நேரமும் விடியலாச்சு. ராசா வந்தா......."

"ஆமாம், ஆமாம்."

ஈசன் ஒரே அமுக்கில் பிட்டை விழுங்கிவிட்டான். என்ன ருசி! பேரின்பம்! ஒரே ஓட்டமாக ஓடி, கூடையை விட்டெறிந்துவிட்டு, வெள்ளத்தில் குதித்து விளையாடினான்.

அசுரப் பசிபோலச் சுழித்தோடும் வெள்ளத்தில் மீன் போலப் புரண்டு, முழுகி முக்குளித்து விளையாடினான். வெள்ளத்தில் படம் விரித்துச் சீறிக்கொண்டு நீந்திச் செல்லும் நாக சர்ப்பம் மாதிரி எதிர்த்து நீந்துவான். ஆனந்த வெள்ளத்தில் மிதக்கும் யோகியைப் போலச் சுகாசனமிட்டு வெள்ளத்தின் போக்கில் மிதந்துவருவான். திரும்பவும் வாலடித்துத் திரும்பும் முதலையைப் போலக் கரை நோக்கி வருவான். பிறகு மீன் கொத்திப் புள்மாதிரி கைகளைத் தலைக்குமேல் வீசிக் கோபுரம் போலக் குவிய நீட்டிக் கொண்டு உயரப் பாய்ந்து தலை குப்புற ஜலத்தைக் கிழித்துக்கொண்டு மறைந்து விடுவான். ஜனங்கள் செத்தானோ என்று பயப்படும் போது மறு கரையில் தலை தெரியும். பிறகு சீறி வரும் பாம்பு மாதிரி நீந்தித் திரும்புவான்.

வெளிச்சம் வர ஆரம்பித்தது. வெள்ளத்தின் பீதி குறைய, ஜனங்களும் கரைகளில் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

சூரியனுடைய முதல் கிரணங்கள் வெள்ளத்தின் நுரைகளில் வானவில்லிட்டன. அரிமர்த்தன பாண்டியனுடைய மணிமுடிமீதும் பட்டத்து யானையின் வைரமிழைத்த முகபடாம் மீதும் பட்டுத் தெறித்து மின்னி விளையாடின.

அரசன் கரையோரமாகப் பட்டத்து யானைமேல், ஜனங்களிட்ட கரையைப் பார்த்துக் கொண்டு, கணக்கர்கள் கணக்கு ஒப்பிக்க, வந்து கொண்டிருந்தான். தூரத்

திலே அவன் கண்ணில் ஒரு பகுதி மட்டும் உடைத்துக் கொண்டு வெள்ளம் பாய்வது தெரிந்தது. மீசை துடிக்க அந்த இடத்துக்கு யானையை விரட்டி ஓட்டும்படி சொல்லுகிறான். பாகன் அங்குசத்தினால் குத்துக் குத்தி, செவியின் புறத்தில் விரல்களால் இடிக்கிறான். அடுத்த கணம் யானை அந்த இடத்துக்கு வந்து நிற்கிறது.

அரிமர்த்தன பாண்டியன் தரையில் குதிக்கிறான்.

மேல்மூச்சு வாங்க ஓடிவந்த கணக்கர்கள், அவசர அவசரமாக ஏடுகளைப் புரட்டி, "பிட்டு வாணிச்சி பங்கு" என்கிறார்கள்.

கூடியிருந்த ஜனக் கும்பல், "தண்ணீரில் கும்மாளி போடுகிறவன் கடமை" என்கிறது.

அரசன் கைதட்டிச் சைகை செய்து கரைக்கு வரும்படி அழைக்கிறான்.

ஈசன் நாக சர்ப்பம் போலக் கரைக்கு நீந்தி வந்தான். கரையேறி ஈரம் சொட்டச் சொட்ட நிற்கிறான்.

கோபாவேசமாக, "ஏன் மண்ணைப் போடாமல் பொழுதைக் கழிக்கிறாய்? சோம்பேறி!" என்று கேட்கிறான் அரசன்.

ஈரச் சிகையை அண்ணாந்து உலுப்பிக்கொண்டு ஈசன் வாய்விட்டு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். கண்டத்தில் நனைந்த மறு, சூரிய ரேகை பட்டு மின்னியது. ஈசன் சிரித்தான்.

அரசன் கோபித்தான். கூட்டத்தை விலக்குவோர் வசம் இருந்த பொற்பிரம்பை வெடுக்கெனப் பிடுங்கி ஓங்கி ஓர் அடி கொடுத்தான். பொற்பிரம்பு ஈசன் முகத்திலும் நெஞ்சிலும் ரத்த விளிம்பு காட்டியது.

அரசன் சினம் அவியவில்லை. மீண்டும் ஓங்கினான்.

ஈசனது அசட்டுச் சிரிப்பு அதிகமாயிற்று. வெருண்டவன் போல ஜலத்தில் பாய்ந்தான்.

அரசன் சினம் அவிந்தது. ஈசனைக் காப்பாற்ற அவனைத் தாவி எட்டிப் பிடித்தான். ஈசனது முடிப்பிட்ட முந்தி கிழிந்து கையுடன் வந்தது. ஈசன் ஜலத்தில் முக்குளித்து மறைந்துவிட்டான். அரசனும் தொடர்ந்து குதித்து மறைந்து விட்டான்.

வெள்ளம் மடமடவென்று வற்றியது. நுங்கும் நுரையுமாகக் கொப்புளித்த பிரளயம் சர்வேசனது ஹிரண்ய கர்ப்பத்தில் ஒடுங்கியது.

ஈரச் சகதியிலே மன்னவன் அரிமர்த்தன பாண்டியனது சடலம் கிடந்தது.

உலராத சகதியிலே, முகத்தில் சிவந்த வடுவுடனும் சொல்லில் அடங்காத பொலிவுடனும் மன்னவன் அரிமர்த்தன பாண்டியனது சடலம் கிடந்தது.

மடங்கி இறுகப் பற்றிய கைக்குள், முன்றானைக்குள் பந்தகமிட்ட ஓலை நறுக்கு ஒன்று இருந்தது.

ஈசனுக்குக் குதிரைகள் பெற்றுக் கொண்டதாக எழுதித் தந்த அந்த முறிச்சீட்டு.

## இடைவெட்டு

**இளம்பூரணர்:** அவன் மண் சுமப்பவன் என்றால் என்ன? நெஞ்சில் தைரியம் இருந்தால் தண்ணீரில் நீந்தக் கூடாதா? மதுரை நகரத்தில் எத்தனை வீரர்கள் உண்டு! அவர்கள் காலில் உள்ள வீரக் கழல்களின் ஓசை எவ்வளவு! அவ்வளவு பேரும் மண்ணை வெட்டித்தானே

போட்டுக்கொண்டிருந்தார்கள்? அவன் ஒருத்தன்தானே தனக்குள் வெள்ளம் அடக்கம் என்பதுபோல அதன்மீது பாய்ந்து நீந்தினன்? அவனை அடிக்கலாமா?

**அடியார்க்கு நல்லார்:** இருட்டில் இருந்த பயம் நமக்கு இப்பொழுது இல்லை. வெள்ளமும் வற்றிவிட்டது. வெள்ளத்தின் வரம்பு தெரிகிறது. அவன் எங்கே? அரிமர்த்தன பாண்டியன் எங்கே?

**சேனவரையர்:** பரிகள் எங்கேயோ, வெள்ளம் எங்கேயோ, வெள்ளத்தில் நீந்தியவன் எங்கேயோ அங்கே அரிமர்த்தன பாண்டியன்.

## 4

## அங்கயற்கண்ணி

**ம**துரை மூதூரின் கர்ப்பக்கிருகத்திலே மணியூசலிலே கருங்குயில் ஒன்று உந்தி உந்தி ஆடிக்கொண்டிருந்தது. விளக்கற்ற வெளிச்சத்திலே புலன்களுக்கு எட்டாத ஒளிப் பிரவாகத்திலே மணியூசல் விசையோடு ஆடியது. அளகச் சுருள் புலன் உணர்வு நுகரும் இருட்டுடன் இருட்டாகப் புரள, கால் விசைத்து உந்திச் சுழி குழிந்து அலை போல உகள, கொங்கைகள் பூரித்து விம்மிக் குலுங்க, அன்னை, மணியூசல் ஆடினள். ஆலவாய் ஈசன், அழகன் சொக்கன் வருகை நோக்கி மணியூசலாடினள். தோள் துவள அவள் சங்கிலிகளைப் பற்றி அமர்ந்த பாவனை. சொக்கனை ஆரத் தழுவ அகங்காட்டும் செயல் போல அமைந்திருந்தது. அங்கயற்கண்ணியின் அதரத்திலே கீற்றேடிய புன்சிரிப்பு; மருங்கிலே துவட்சி; கண்ணிலே விளையாட்டு; நெஞ்சிலே நிறைவு. செல்வி மணியூசல் ஆடினள். அண்ட பகிரண்டங்களையும் சகல சராசர பேதங்கள் யாவற்றையும் தன்னுள் அடக்கும் ஆலிலை வரிவிட்டுப் புரண்டு விளையாடியது.

அந்த ஒளியில், அந்த இருட்டில், அந்த நிறைவில் சொக்கன் வந்தான். முகத்திலே வடு, மார்பிலேவடு, நெஞ்சிலே நிறைவு. விளையாடச்சென்ற ஈசன் வீடு திரும்பினன். விளையாட்டின் பலன் ஏற்று ஈசன் வீடு திரும்பினன்.

அன்னை அகங்குழைய நெஞ்சம் பூரிக்க அண்ணலை நோக்கினள். அந்தப் பார்வை அகிலத்தை இழுக்கும் சொக்கனை இழுத்தது. தானுக, தன்னில் ஓர் அம்சமாகப் பிரபஞ்சத்தைக் கொண்ட ஈசனது அகன்ற மார்பில் அன்னை துவண்டாள். மணியூசலிலே வேகமும் கனலும், வேட்கையற்ற வேட்கையும், இரண்டு நாகசர்ப்பங்கள் உயிர்ப் பாசத்தினுல் பின்னிப் புரளுவது போல, ஏதோ ஒரு தோற்றந்தான் அந்த இருட்டில்தெரிந்தது. அன்னையின் நெஞ்சு சுரந்தது; ஈசனின் வேதனை அவிந்தது.

மணியூசல் விசை கொண்டு உயர்ந்து பொங்கியது. வாமபாகத்தில் தன்னில் ஓர் அம்சமாக அன்னையை அமர்த்தி, வலக்கரம் கொண்டு சங்கிலியைப் பற்றி விரல்கொண்டு ஊன்றி ஆடினன்.

பாதத்தினடியில் முயலகன் முதுகு சற்று வளைந்து கொடுத்தது. கொடுமை என்ற அவனது கோரப் பற்களிடையிலும் புன்சிரிப்பு என்ற எழில் நிலாப் பொங்கியது.

வாமபாகத்தமர்ந்த அன்னை இடக்கரம் ஒரு சங்கிலியைப் பற்றியது. அவளது பெரு விரல் ஈசனது பெருவிரலில் பின்னிப் பிணைந்து உந்தியது.

"அடித்ததற்குப் பலன் அறியணைக்குப் பதில் அரன் மடிபோலும்" என்ருள் அன்னை.

அவர்களது மடிமீது அரிமர்த்தன் பாண்டியன் அமர்ந்திருந்தான்; சிசுவைப் போல. கவலை இல்லை; எதுவும் இல்லை.

"வாதவூரன் நெஞ்சில் வெள்ளம் அடங்க வில்லை. வழிநடையும் தூரந்தான்" என்றான் ஈசன்.

## பொற் பிரம்பு

ஈசன் முகத்தில் விழுந்தது பொற்பிரம்பின் அடி. அவனது மார்பில் விழுந்தது. நெஞ்சில் விழுந்தது. அப்புறத்து அண்டத்தின் முகடுகளில் விழுந்தது. சுழலும் கிரகங்களின்மீது விழுந்தது. சூலுற்ற ஜீவராசிகள் மீது விழுந்தது. கருவூரில் அடைபட்ட உயிர்கள்மீது, மண்ணின்மீது, வானத்தின் மீது, மூன்று கவடாக முளைத்தெழுந்த தன் மீது, முன்றிலில் விளையாடிய சிசுவின்மீது, முறுவலித்த காதலியின் மீது, காதலின் மீது, கருத்தின் மீது, பொய்மையின்மீது, சத்தியத்தின் மீது, தருமத்தின் மீது அந்த அடி விழுந்தது.

காலத்தின்மீது விழுந்தது. தர்மதேவனுடைய வாள் மீது விழுந்தது. சாவின்மீது, பிறப்பின்மீது, மாயையின் மீது, தோற்றத்தைக் கடந்தவன்மீது, வாதவூரன் மீது, வாதவூரன் வேதனையின்மீது, அவன் வழிபட்ட ஆசையின்மீது, அவனது பக்தியின்மீது அந்த அடி விழுந்தது.

அங்கயற்கண்ணியின் மீதுவிழுந்தது. அவளதுநெற்றித் திலகத்தின்மீது, கொங்கைக் குவட்டின்மீது அந்த அடி விழுந்தது.

# நிசமும் நினைப்பும்

"அடேடெ! வி. பி. யா? வாருங்க; ஏது இந்தப் பக்கம் வந்து வெகு நாளாச்சே!" என உத்ஸாகத்துடன் வரவேற்றார் என். பி. ராமலிங்கம்.

மூன்று நாள் தாடியைப் புறக்கையினுல் பலமாகத் தேய்த்துப் பிறகு சிக்குப் பின்னிப் பறந்து கொண்டிருந்த சிகையைக் கோதி விட்டுவிட்டு, உள்ளே நுழைந்தார் வி. பி. 'அரைமணி நேரத்துக்குமேல் உட்காரக்கூடாது. அவனிடம் இருக்கிறதை வாங்கிக்கொண்டு கடைசிப் பஸ் புறப்படுமுன் புறப்பட்டுவிட வேண்டும்' என்ற வைராக்கியத்துடன். மனசு தனது நாட்டத்தின் பலன் காயா பழமா என்பது பற்றி அலமந்தது. சற்று அழுக்குப் பிடித்த நீண்ட கதர் ஜிப்பா, கரையோரத்தில் கால்பட்டுக் கிழிந்த வேஷ்டி, கீழே விழுவோமா வேண்டாமா எனத் தோளில் தொத்திக்கொண்டு தொங்கும் கதர் மேல் வேஷ்டி, அவருக்குத் தேச பக்தர் என விலாசம் ஒட்டின. குதிகாலடியில் அர்த்தசந்திர வட்டமாகத் தேய்ந்து போயும் விடாப்பிடியாகச் சேவை வைராக்கியத்துடன் மிளிரும் மிதியடியைத் தலைவாசலில் நிறுத்திவிட்டு, "என்ன ராமலிங்கம், எல். எஸ். பி. எங்கே?" என்று கேட்டுவிட்டு, சுற்றும் முற்றும் பார்த்தபடி சுவரோரத்தில்

இருந்த பெஞ்சின்மேல் உட்கார்ந்தார். "எல். எஸ். பி. பிரஸ்ஸுக்குப் போயிருக்கான், சித்தக் கழிச்சு வந்துடுவான்" என்றார் ராமலிங்கம். பிறகு சற்றுக்கழித்து, "என்ன விசேஷம்?" என்றார்.

"விசேஷம் ஒன்றுமில்லெ; ஒரு அஞ்சு ரூபா பணம் இருந்தாத் தேவலெ" என முழங்காலைத் தேய்த்தார் ஸ்ரீமான் வி. பி.

"ஏது ரொம்ப அவசரமோ?" என்று சற்று நிதானித்தார் ராமலிங்கம்; பிறகு விவகாரத்தை விளக்குகிறவர் மாதிரி, "இன்னிக்கு மணியாடர் எதுவுமே வறல்லே; ஸ்டார் புக்ஸ்டால்காரப்பயல் அடுத்த வாரம் வாடான்னுட்டான். அதிருக்கட்டும்; நீ போன மாசம் எழுதினியே, அந்தக் கதை, அதைப்பத்தி, புரொபஸர் சிதம்பரலிங்கம் என்ன சொன்னார் தெரியுமா? லோகத்திலேயே அந்த மாதிரிக் கதை என்று பொறுக்கி எடுத்தால் பத்துக்கூடத் தேருதாம்; அவ்வளவு உயர்வாம்; தமிழுக்கு யோகம்னு தலைகால் தெரியாமெ கூத்தாடினார்." ராமலிங்கம் சற்று நிதானித்து வி. பி. முகத்தைப் பார்த்தார்.

"அந்தச் சிதம்பரலிங்கம், அதான் இங்கிலீஷ் புரொபஸர், அவன்தானே? அவன் மகா கண்டுட்டானுக்கும்! எல்லாரைப் பத்தியும் அவன் அப்படித்தான் சொல்லிக்கொண்டிருப்பான். நீ அவனிடம் முகவுரை கேட்டுக் காவடி எடுத்தியா? எவண்டா வர்ரான்னு கொக்கு மாதிரி உக்காந்திருக்கிற கிழட்டுப் பொணத்துக்கு மின்னலே நின்னு காக்கா புடிச்சா இது மட்டுமா சொல்லுவான்? இன்னும் சொல்லுவான், அவனுக்குத் தமிழைப்பத்தி என்ன தெரியும்? இங்கிலீஷைப் பத்தித் தான் என்ன தெரியும்? அவனுடைய இங்கிலீஷ் இலக்கியம், போன தலைமுறை இங்கிலீஷ்காரனுடன் போச்சே; பாட புஸ்தக வாத்தியாருக்கு...."

"ஏன் ஸார் வி. பி. அவரை ஏன் இப்படித் திட்டு கிறீர்? அவர் உம்மைப் புகழத்தானே செய்தாராம்?"

"என்னைப் புகழ அவன் யார்? அவனுடைய வறட்டு இங்கிலீஷும், விதரணை இல்லாத தமிழும்..."

"அதிருக்கட்டும். வருணேந்திரன் இந்த மாதம் விலாசினி பத்திரிகையிலே, புதுத் தோரணையிலே..."

"புதுத் தோரணையிலே சரசுவதிக்குக் குடம் உடைச்சான்; என்னமோ தத்துப்பித்துன்னு...."

"சரி விடுங்கோ, உங்களுக்கு ஒத்தரையுமே பிடிக்காது......ஸார், உங்களையாவது உங்களுக்குப் பிடிக்குமோ" என்று சற்று எகத்தாளமாகக் கேட்டார் ராமலிங்கம்.

"என்னை எனக்குப் பிடிக்கிறதோ பிடிக்கலியோ அதெல்லாம் உமக்கென்ன?......அஞ்சு ரூபாய்க்கு விதியெக்காணும்; உமக்கு ஆராய்ச்சி, பிரசங்கம், நையாண்டி வேறு ஒரு கேடா......" என்று உறுமினார் வி. பி.

"மிஸ்டர் வி. பி., நீங்க போயிட்டு, நாளைக்குக் காலையிலே வாருங்க. எல். எஸ். பி. இருப்பார்; வந்து அவரோடே பேசிக்கிங்கோ; சரி, நாழியாறது......" என்று எழுந்திருந்தார் ராமலிங்கம்.

அந்தச் சமயம் பார்த்து எல். எஸ். பி. ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டு, செருப்பை நடை வாசலில் போட்டபடி, "ஏது, உள்ளே வி. பி. யா?" என்று குரல் கொடுத்தபடி உள்ளே நுழைந்தார்.

வி. பி. யும் ராமலிங்கமும் முகத்தில் ஈயாடாதபடி நின்றிருந்ததைக் கண்டதும், நிலைமையை ஊகித்துக் கொண்டு, "ஸார் வி. பி., உங்களைச் சந்திக்கணும்னு

ரொம்ப ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறவர் ஒருத்தர் வந்திருக்கார்; நீங்களே இங்கே வந்துவிட்டீர்கள் ; தெய்வ சங்கல்பம்னு இதுதான் ; அவர் யார் தெரியுமோ, பெரிய புரொபஸர், பழுத்த பண்டிதர், அபார ரஸிகர், சிதம்பரலிங்கம்" என்று சொல்லிக்கொண்டே அடுக்கிஞர்.

"புரொபஸர்வாள் இப்படிக் கொஞ்சம் வரணும்; இவாள் தான் இன்னித் தேதிக்குத் தமிழிலே கதை எழுதறத்துக்குன்னே பொறந்திருக்கறவர். வி. பி.ன்னு நாங்கள் கூப்பிடுவோம். பெயர் விக்கிரமசிங்கபுரம் பலவேசம் பிள்ளை" என ஓர் ஆவர்த்தி வாசித்து நிறுத்திஞர் எல். எஸ். பி.

புரொபஸர் சிதம்பரலிங்கம் உள்ளே வந்தார். தலையிலே பனிக்குல்லா, உடம்பிலே பிளாணல் ஷர்ட்டும் கம்பளிப் போர்வையும், கண்ணில் தங்கவிளிம்புக் கண்ணுடி, இடுப்பில் மல் வேட்டி.

"இவாள்தான் விக்கிரமசிங்கபுரம் பலவேசம் பிள்ளையோ? பலே பேர்வழி ஐயா, என்னை அப்பிடியே பிரமிச்சு உக்காரும்படி பண்ணிவிட்டீரே; திருநெல்வேலிச் சைவமோ !" என்ருர்.

"இல்லை, செட்டியப்பிள்ளைமார்" என்று சுருக்கமாகச் சொல்லி நிறுத்திக்கொண்டார் வி. பி.

"ராமலிங்கம், நம்ப ராமவிலாஸ்லெ போய் நாலு கப் காப்பி ஸ்டிராங்கா எடுத்தாறச் சொல்லேன் ; வி. பி., டிபன் எதுவும் கொண்டாரச் சொல்லட்டா ? முகம் சோர்வாக இருக்கே. ராமலிங்கம், முறுகலா இரண்டு ஊத்தப் பழம் போட்டுக்கொண்டு வரச் சொல்லு ; வெத்திலை பாக்குப் புகையிலையை மறந்துடாதே ; வி. பி. இருக்கும் போது மறக்கலாமா ?......"

"பத்மநாப ஐயர்வாள், எனக்கு இந்த வயசிலே, இந்த ராத்திரியிலே காபி சாப்டாத் தூக்கம் வருமா? ஒன்றும் வாண்டாம்ணு."

"அப்போ ஓவல்டின் கொண்டுவரச் சொல்லு கிறேனே...ஏதாவது கொஞ்சம்...சிரம பரிகாரமா" என்று சொல்லிக்கொண்டே மேஜையைத் துழாவினார் எல். எஸ் பி. "இதுதான் இவருடைய புஸ்தகத்தின் கடைசி பாரம். இதிலேதான் நான் சொன்னேனே, அந்தக் கதை வந் திருக்கு; இந்த மனுஷனுக்குக் கற்பனை எங்கிருந்துதான் வருதோ; நானும் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கேன்; முகத்து முன்னாலே வச்சுச் சொல்லப்படாது; குணமும் அப்படித்தான்னு" என்று மேலும் தொடர்ந்து நாமாவளி நடத்தினார்.

சிதம்பரலிங்கம் சாவதானமாக நாற்காலியில் உட் கார்ந்துகொண்டு, "ஏன் நிக்கறேள்? உட்காருங்கோ" என்று கையமர்த்திவிட்டு, "நானும் உங்களை வி. பி. ன்னே கூப்பிடத்தான் போறேன்" என்று அபூர்வ ஹாஸ்யம் பிடித்தது போலச் சிரித்தார்.

எதிரில் இருந்த இருவரும் ஒத்துச் சிரித்தனர்.

"மிஸ்டர் வி. பி., நான் சொல்லுகிறேனேன்னு வருத்தப்படப்படாது; உங்களுடைய கற்பனை ரொம்ப **raw**: (சாணை பிடிக்காதது), ரொம்ப ஒயில்ட் (**wild**: வரைமுறை மீறிய அபூர்வ கற்பனைகளை: ருசி பேதத்தைப் பாராட்டாமல் பிரயோகிப்பது). நம்ம ஜனங்கள் ரசிக் கிறதுக்குச் சித்தெ நாள் பிடிக்கும்..."

"என்னைப் படித்து ரசிக்கிறவாள் இங்கிலீஷ் ஞானம் அவ்வளவு இல்லாத நம்ம ஜனங்கள் தான்" என்றார் வி. பி.

"நீங்கள் சொல்றது வாஸ்தவந்தான். நம்ம ஜனங்கள்னு நான் சொல்லவறப்போ, இங்கிலீஷ் படித்த நம்ப ஜனங்களைத்தான் சொன்னேன். அவாள் ரஸித்தால்தான் உங்களுக்குப் பேர் வரும். அதற்கு நான் ஒரு வழி சொல்றேன்; உங்கள் கதைகளை இங்கிலீஷில் நான் மொழி பெயர்த்துச் சீமைக் கம்பெனியில் பிரசுரிக்கிறேன்; அப்புறம் உங்களுக்கு உலகப் புகழ்வராத போஹ......"

விவகாரம் தம் கையை விட்டுத் தாண்டிவிடுமோ என்று பயந்த எல். எஸ். பி., "நான் இன்னொன்னு உனக்குச் சொல்ல மறந்து போச்சே...இதோ காப்பி வந்துட்டுது, முதல்லெ சாப்பிடு" என்று ஸர்வரிடம் இருந்த ஓவல்டினை வாங்கி மரியாதையாக ஆற்றிப் புரொபஸரிடம் கொடுத்துவிட்டு, "கிட்டு, நம்ப ஸாரிடம் முதல்லெ ஊத்தப்பத்தை எடுத்து வையடா; என்ன, முறுகலாக் கொண்டாந்தியா? காபியெ அப்படியே ஆத்தாமே பெஞ்சிலே வய்யி. எங்கே ராமலிங்கம், இப்படி வெத்திலெயெ எடுத்தா" என்றார் எல். எஸ். பி.

"சீமையிலா! என் புஸ்தகமா?" என்ற பெருமிதத்தில் எதிரில் இருந்த கண்ணாடி அலமாரியில் தோன்றிய மங்கிய பிம்பத்தைப் பார்த்துத் தலையைக் கோதிவிட்டுக் கொண்ட வி. பி. க்கு ஊத்தப்பத்தில் விசேஷ ருசி தென்பட்டது. புரொபஸரது மேதையும் ஊத்தப்ப ருசியும் தம்முள் எது பெரியது என்பதற்காக அவரது மன அரங்கில் போட்டியிட்டன.

"நம்ம புரொபஸர் தமிழிலே லிட்டரரி கிரிட்டிஸிஸம்னு என்னொன்னு ஒரு புஸ்தகம் எழுதப்போறார்; அதுவும் நம்ம கம்பெனிக்கு எழுதப்போறார்; அதிலே தமிழ்ப் புது இலக்கியம் என்பது பற்றி ஒரு அநுபந்தமும் உண்டு" என்றார் எல். எஸ். பி.

" சபாஷ் ! இப்பொ அது தான் வேணும். வாசிக்கிற வாள் எல்லாம், மாடு பருத்திக்கொட்டை தின்கிறமாதிரி எதையாளுலும் விதரணை இல்லாமல் வாசிக்கிரு."

"மாடு பருத்திக்கொட்டை தின்கிருப்போலே,-என்ன அபூர்வமான கல்பனை!...." என்று கண்ணை மூடிக்கொண்டு அந்த 'அபூர்வ கல்பனை'யை அசை போட்டார் புரொபஸர்.

"என்ன வி. பி., மணி பத்தரை ஆயிட்டுது. லாஸட்டு பஸ் போயிடப்படாது; நீ எதுக்கு வந்தேன்னு தெரியும்; நாளைக்குப் பத்து மணிக்கு இந்தப் பக்கம் வா...." என்ருர் எல். எஸ். பி.

"என்னடா எல். எஸ். பி., என்னை ஒனக்குத் தெரீயாதா? நாளை இல்லாட்டா, நாளன்னிக்கே வர்றேன்; வெளியே வா ஒரு நிமிஷம்...." என்று கொண்டே எழுந்து நடையைத் தாண்டி நின்ருர்.

எல். எஸ். பி. நடைவாசலில் நின்ருர்.

"ஒரு எயிட் அணஸ் இருந்தாக் குடு" என்ருர் எழுத்தாளர்.

கையில் வைத்திருந்த எட்டணவை எல். எஸ். பி. இலக்கிய சேவைக்காகச் சம்பாவனையாக அளித்துவிட்டு, இருளில் மறைந்த திருவுருவத்தைத் திரும்பிப் பாராமல் உள்ளே வந்து உட்கார்ந்தார்.

"அபூர்வ ஆசாமிதான்; ஒத்தைக் கட்டை; உக்காத்தி வச்சு எழுத வைக்கறது தான் கஷ்டம்" என்று புரொபஸரிடம் விளக்கிளுர். சம்பிரதாய பூர்வமாகச் சிதம்பரலிங்கம் பிள்ளை காட்டிய இங்கிலீஷ் மோகத்துக்கு வேட்டு வைப்பதாக அவர் பாவனை.

"அதென்ன அப்படி எண்ணி விட்டீர்கள்? எனக்கு இந்த வயசுக் காலத்திலே படிக்கிறதாவது, மொழி பெயர்க்கிறதாவது!..." என்ருர் சிதம்பரலிங்கம்.

"செய்யவேண்டியதுதான்; நீங்கள் செய்யாட்டா யார் செய்யறது? அதிருக்கட்டும்; உங்கள் புஸ்தகத்தை இந்த மார்ச்சில் முடித்து விட்டால், வருகிற வருஷத் துக்குப் பாடப் புஸ்தகமாக வைக்க முடியுமா? முன்னு ரையும் சுருக்காக் கொடுத்துடுங்கோ. அப்புறம் வேறே என்ன?......."

ராமலிங்கம் ஒரு செக் புஸ்தகத்தை நீட்டினுன். "ஏதோ ஐந்நூறு ரூபா போட்டிருக்கேன்; என் சக்திக்கு ஏற்றது" என்று செக்கில் கையெழுத்திட்டு விட்டு மரி யாதையாக இரண்டு கைகளாலும் நீட்டினுர்.

"அது கெடக்கட்டும்ன; செக்தான பிரமாதம்? நாளைக்கு வந்து முன்னுரையை வாங்கிக்கொண்டு போயி டச் சொல்லிவிடுங்கோ;புஸ்தகம் ரெடியாத்தான் இருக்கு; ஒரு வாரத்திலே அனுப்பறேன்" என்று சொல்லி எழுந் தார்.

"நானே காலையில் வருகிறேனே" என வழி அனுப்பி ஞர் எல். எஸ். பி.

சிதம்பரலிங்கக் கையெழுத்துப் பிரதி, பிரசுராலய க்ஷேத்திராடனம் புரிந்து புண்ணியம் சம்பாதித்தது என் பதை அறியாததற்குக் காரணம் தொழிலில் அவர் புதிது என்பதுதான்.

"ராமலிங்கம், அந்தப் பித்துக்குளி கணக்கிலே ஒரு எட்டன கைப்பத்தெழுது; பொணம் எப்பப் பார்த்தாலும் சமய சந்தர்ப்பம் தெரியாமெ வந்து கழுத்தை அறுக்கிறது. ஏதாவது தத்துப் பித்துனு......."

"எல்லாம் நீ குடுக்கற எளக்காரந்தான், அந்த நாய் மூஞ்சிலியே வந்து நக்க வருது. இந்தப் பயகள்கிட்ட நீ பொஸ்தகத்தை வாங்காதே, வாங்காதே, மானம் போற துன்னு நான் எத்தினி நாள் மண்டையை உடைச்சுக் கிறது?" என்று கடிந்துகொண்டார் பங்காளி ராமலிங்கம்.

"போகட்டும் பொழைச்சுப் போறுன். அவன் கதை தானே நிறைய விக்கறது? இந்தக் கிழட்டு ராஸ்கல் பிடிச்ச பிடியில் ரூ. 500 கறந்து விட்டானே!"

"நீ வடிகட்டின முட்டாள்!"

"புஸ்தகம் பாட புஸ்தகமா வந்தா அப்ப யார் முட்டாளோ!"

"வராவிட்டாலோ?"

"இந்த வருஷம் இல்லை என்றுல் அடுத்த வருஷம்; அது லாஸ் இல்லை (நஷ்டமில்லை)."

"இந்த எழுதுகிற பயல்கள் எல்லாருமே திருட்டுக் கூட்டம்; சொன்னுச் சொன்னபடி நடக்க மாட்டான்கள்; பொஸ்தகக்கடை வைக்கிறதை விடப் பொடலங்காய் விக்கலாம்."

"புடலங்கா அழுகிப்போகுமடா முட்டாள்!"

## 2

**ரா**ம பத்மா பிரசுரகர்த்தர்கள் லிமிடெட் என இலக்கிய சேவைக்கெனவே உதயமான கம்பெனியின் நடையை விட்டு இறங்கி, இருட்டுக்குள் தான் என்ற பேதம் அற்று லயித்துப் போன வி. பி. யை யார் என்ன சொன்னுலும் அவர் பிறவி எழுத்தாளர்தாம். இந்த இலக்கிய சிங்காதனம் கிடைக்கு முன்பே, தம்முடைய

பெயரின்மேல் அவருக்கு வெறுப்பு உண்டு. இலக்கிய சிங்காதனம் தம்முடைய மானஸிக நிச்சயத்தைப் பொறுத்த வரையாவது கிடைத்துவிட்ட பிற்பாடு, தம்முடைய தகப்பனார்வழிப் பாட்டன் பேரில் இந்தப் பெயரை முன்னிட்டு வெறுப்பு ஸ்திரப் பட்டது. "மாட்டுக்குப் பருத்தி விதை வச்சியா, வண்டியை இழுத்துக் குறட்டு ஓரமாக விட்டு விட்டு, போயி சுப்பையாத் தேவனைச் சத்தங்குடுத்துட்டு வா" என்று அதிகாரம் செய்வோரிடம், இடுப்பில் துண்டை வரிந்துகொண்டு கும்பிக் கொதிப்பை ஆற்றிக் கொள்ள முயலும் ஜீவன்களுக்குப் பலவேசம் என்ற பெயர் இருந்தால் முழுவதும் பொருத்தமாக இருக்கும். அன்று, சென்ற யுகம் என மனக்குறளி கால நிர்ணயம் செய்யக் கூடிய ஒரு காலத்தில், தகப்பனாருடைய சுண்டு விரலைப் பிடித்துக்கொண்டு அம்பாசமுத்திரம் உயர்தரப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் முன்பு, சிவப்பு உல்லன் குல்லாவுக்கு வெளியில் நாய்வால் மாதிரி நீட்டிக்கொண்டிருந்த வாழை நார் முடிப்புச் சடையும், எண்ணெய்க் கசடுவழியும் நெற்றியில் சாந்துப் பொட்டும், காதில் தட்டும், பச்சைக் கோட்டும், பிறந்த நாளுக்கு ஆச்சி வாங்கித் தந்த ஜரிகைக் கரை நீலப்பட்டு வேட்டியும் சிலேட்டும் கையுமாக நின்று நாமகள் கோட்டை வாசல் திறக்க வரங் கிடந்த போது, "என்னடா, பேருக்கு ஏற்றாற்போலப் பலவேசமாக இருக்கியே; பின்னாலெ புலிவேசம் போட்டுடப் போறெ. கையில் என்ன இருக்கு, தெரியுமா?" என்று பிரம்பைக் காட்டி அவர் வரவேற்றது, மனசில் சிலாசாசனம் போலப் பதிந்து கிடந்தது. அதிலிருந்து தொடங்கிய இந்த நாமாவளி ஆத்ம சோதனை இன்றுவரை தீர்ந்தபாடில்லை. குற்றால நாதனை குறும்பலா ஈசனைச் சூசிப்பிக்கும்படி பலா ஈசன் என்பதன் திரிபா, அல்லது திருடனிலும் தியாகியிலும் திபெத் என்ற வார்த்தையிலும் தன்னைக் கரந்து சகல ரூபனாகி விளங்கும் அந்த சாட்

சாத் பரம்பொருளின் கற்பனை இந்த இலக்கிய சோபை யைப் பெற்றபோது........காலில் எதையோ சதக் என மிதித்தார். சாணிதான், வெறும் சாணி; பட்டணத்து ரோட்டில் சாணி என்பது அவருக்கு அபூர்வமாகத் தென் பட்டது; தமது ஊர் வளமைகளை நினைவுக்குக் கொண்டு வந்தது, கற்பனை இவ்வாறு பிறழ்ந்தது ஒரு விநாடி தான்; மறுபடியும் ஈசன் பல வேஷஙகைத் தென்படுவது மாறி, பலவேசம் பிள்ளையே ராமலிங்கமும், எல். எஸ். பி யும் சிதம்பரலிங்கமும், தாமுமாகக் காட்சியளித்துத் தம்முள் தர்க்கம் பண்ண ஆரம்பித்துவிட்டனர்.

இருட்டோ, நல்ல நிம்மதியான இருட்டு; தேனும் பேட்டை கண்ணுயிரம் பிள்ளை தெரு, 1-27 நம்பர் மேல் மாடியில் உள்ள ' கல்கத்தா இருட்டறை'க்கு (இது சரித் திரப் புளுகு அல்ல; சாசுவத உண்மை) போன மாதத்து வாடகைப் பாக்கிக்கும் இந்த மாதத்து வாடகைக்குமாக அந்திக் கால நாமாவளி செய்ய வரும் வீட்டுக்கு உடமைஸ்தரான பட்டணத்து முதலியார், இதுவரை காத்துக்கொண்டிருக்க வயிறுதான் பசிக்காதா, அவருக்கு வீடு வாசல் பிள்ளை குட்டி என்ற உலக பந்தங்கள் இல்லாத தனிக் கட்டையா? நிச்சயமாகப் போயிருப்பார்; நிம்மதி யாகப் போய்ப் படுத்துத் தூங்கலாம்; சிறிது விடியற் காலையிலேயே எழுந்து வெளியே புறப்பட்டு விட்டால், இந்தக் கடன்காரப் பயலிடம் எதையாவது வாங்கி, அவர் கடையண்டை கொண்டு போய்க் கொடுத்துத் திருப்தி செய்துவிடலாம். இருந்தாலும் இந்த இராமலிங்கம் பயலுக்கு என்ன இவ்வளவு துடுக்கு? நான் புஸ்தகம் எழுதிக் கொடுக்காமல் போயிருந்தால் அந்தப் பயல் கதிதான் என்ன? இவன் என்ன மகா பங்கு போட்டானும்! 200 ரூபா செக், அது ரொக்கமாகிறதுக்கு முன்னை ஆயிரத்தெட்டுத் தடவை அமிஞ்சி செக்கென்று எல். எஸ். பி. வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்

டிருந்தானுமே. சிவனேன்னு பேப்பர் வித்தவனைக் கொண்டு வந்து இந்தப் புஸ்தகக் கம்பெனிலே மாட்டி விட்டு விட்டான். என் புஸ்தகம் வராதெ போனு, கடையைச் சாத்த வேண்டி யிருந்திருக்கும்னு எல். எஸ். பி. தான் என்கிட்டச் சொன்னுனே. என்னு, எல். எஸ். பி. பேசாமெ உட்கார்ந்திருக்கே. ராமலிங்கம் என்னைப் பார்த்து, அதுவும் அவன் நாசமாப்போகாமல் காப்பாத்த வந்த என்னைப் பார்த்து, பல்லு மேலே நாக்கைப் போட்டு, வெளியே போன்னு சொன்னுனே, அவனை என்ன பண்ணினுத் தேவலே? நீதான் சொல்லு! நான் எவனையாவது என்னிக்காவது மரியாதைக் குறைவாக........

"அதை விடுங்க சார் வி. பி., - ராமலிங்கம் பெரிய மனுஷ்யன், அவனை இப்படிப் பிரமாதப்படுத்தினு? நீங்க தானே தன்னை என்னமோ பெரிய மனுஷன்னு அவனையே நினைச்சுக்கும்படி செய்யறேள். போய்க் காபி வாங்கிண்டு வாடான்னு சொல்ல வேண்டியவனை ஒரு பொருட்டாக மதித்துப் பேசினுல் தலைக் கொழுப்பு ஏருதா? நான்தான் உங்களுக்கு மிந்தியே அவனுடைய யோக்கியதையைச் சொல்லியிருக்கிறேனே........நான் வேணும்னு மன்னிப்புக் கேட்டுக்கிறேன்!"

"என்ன எல். எஸ். பி. உங்களை எனக்குத் தெரியாதா? நீங்களாவது மன்னிப்புக் கேட்பதாவது? நீங்க அன்னிக்கு வறத்துக்குக் கொஞ்சம் லேட்டா யிருந்தா பல்லை உடைத்துக் கையிலே குடுத்திருப்பேன்-ரைட்டர்னு மதிப்புக் கொடுக்காத மாட்டுக்குப் புத்தி வருத்த வேண்டாம்...."

"நீங்க அவனிடம் பேச்சு எதுக்கு வச்சுக்கொள்ளுகிறீர்கள்? இனிமேலிக்கி, எதானுலும் என்னிடம் சொல்லுங்கள், என்னிடம் கேளுங்கள்........கடைசி பாரம் புரூப் வந்திருக்கு; ராத்திரி கொண்டு போய்ப் பார்த்துப்பிட்டுக்

காத்தாலே எட்டு மணி வாக்கிலே அனுப்பிச்சுடுங்கோ— அந்தப் பாரத்தை ஏத்தி இறக்கிவிட்டா இந்த வாரத்துக் குள்ளாறயெ புஸ்தகத்தைக் கொண்டு வந்துடலாம்...."

[அப்படி வாடா மகனே. புரூப்பா வேணும்? கொடுத் தனுப்புறேன்....வாங்கிப் போட்டு வச்சாப் போறது. மன் னிப்புக் கேக்கட்டும். என் வீட்டு நடை வாசல்லெ வந்து நிக்க வைக்கிறேன்....]

"எல். எஸ். பி., அந்தப் பாரத்தை இப்படிக் கொடுங்கோ. காத்தாலேதானே வேணும்? நானும் லைப் ரரிக்கு வர்றேன்; அப்பொ கொண்டுவந்து போட்டுவிட்டு போயிடறேன்......"

"என்ன ஸார் வி. பி., என் கஷ்டம் உங்களுக்குத் தெரிய மாட்டேன்கிறதே......"

"எல். எஸ். பி. உங்களைப் பற்றி எனக்கு மனஸிலே கல்மஷமே இல்லை. ராமலிங்கம் வரட்டும்; புரூப்பை வாங் கிக் கொண்டு போகட்டும்....ஒரே பேச்சுத்தான்....ரெண்டு வார்த்தைக்காரன் நான் அல்ல."

"........ஸார்........ஸார்........"

"....யார் அது?......"

"நான்தான் ராமலிங்கம். என்ன ஸார், என் பேர்லெ பிரமாதமாகக் கோவிச்சுண்டுட்டியளாமே? அன்னிக்குப் பேப்பர்க் கம்பெனி சிவசாமி இருக்கான்னேல்லியோ, அவன் பில்லுலெ பேசினதுக்கு மாரு, பவுண்டுக்கு ஒரு தம்பிடி ஜாஸ்தி பண்ணிக் கணக்குப் பண்ணி அனுப்பிட் டான். பாரம் கம்போஸாயி ரெடியான பிறகு பிரஸ்காரன் டிலே பண்ணுவானோ? சிவசாமி என்னைக் கேக்காமே காயிதத்தைப் பிரஸ்ஸுக்கே அனுப்பிச்சிட்டான். பிரஸ்

காரனும் இங்கே ஒரு வார்த்தை சொல்லாமே பாரத்தை மிஷின்லே உட்டுப்புட்டான்; அப்புறம் பில் வறது. அந் தச் சமயத்திலே மனசு எப்படி இருந்திருக்கும்! இந்தப் புஸ்தக வியாபாரமே கேப்மாறி ஜாதிக்குத்தான் சரி... நீங் களும் வந்தியள்....நானும் என்னமோ எக்குத் தப்பா..."

"என்ன ராமலிங்கம், உன்னை எனக்குத் தெரியாதா? வா, இப்படி உட்காரு; புரூப் அன்னிக்கே ரெடியாகிவிட் டது; நீபாரு, குழந்தைப்பிள்ளை மாதிரி இருக்கக்கூடாது; ராம பத்மா கம்பெனி பங்காளி நீ; அடுத்த தடவை நான் பார்க்கிறப்போ...."

"எக்ஸ்யூஸ் மி ஸார்" என்றான் ராமலிங்கம். எழுத் தாளர் ஸ்ரீமான் வி. பி. மன அரங்கில் ஒரு வெற்றி.

இந்த வெற்றி ஸ்ரீமான் வி. பி. அவர்களை 1-27, கண் ணையிரம் பிள்ளை தெரு மாடியாகிய கல்கத்தா இருட்டறை யின் வாசலுக்கே கொண்டு வந்து விட்டது.

பூட்டில் கையை வைத்தார். இரண்டு பூட்டு!

உடம்பு ஜில்லிட்டது. வீட்டுக்காரப் பயல் எதிர்ப் பூட்டுப் போட்டுவிட்டானா?

'சட்! என்ன அசட்டுத்தனம். நேற்றுச் சாவியைத் தொலைத்த விபரீதத்தினால்தானே இந்த இரட்டைப் பூட்டு?'

"வெறும் கயிற்றரவு!" என்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று படுத்தார்.

வெற்றி நிம்மதியிலே அசதி தாலாட்ட, தம்மை மறந்தார்.

## 3

"ஸார்! ஸார் !"

அயர்ந்த நித்திரையில் ராமலிங்க வெற்றி நாடகத்தில் மறுபடியும் மறுபடியும் உழன்று ரஸித்துக்கொண்டிருந்த இலக்கிய மேதை வி. பி. யை இந்த விகற்ப உலகுக்குச் சடபடவென்ற சத்தமும், ஏழாம் கிணற்றடியிலிருந்து வரும் "ஸார்" என்ற அழைப்பும் மல்லுக் கட்டி இழுத்து வந்தன.

"ஏது, வீட்டுக்கார முதலி விடியறத்துக்கு மிந்தியே முற்றுகை போட்டு விட்டானு?" என்ற உதைப்புடன், என்ன முதலியார்வாளா, நேற்று வந்திருந்தீர்களோ? நான் ஒரு ஜோலியாய்ப் போனேன். வர்றத்துக்கு வேட்டாயிட்டது" என்று சமாதானம் சொல்லிக்கொண்டு கதவைத் திறந்தார்.

எதிரே ராமலிங்கம் நின்றுகொண்டிருந்தார்; நீண்ட ஜிப்பா, மொராக்கோ தோல் பை சகிதம் நின்றிருந்தார்.

"ஏது! ராமலிங்கமா! வாருங்க உள்ளே" என்று அழைத்துக் கொண்டு சென்று நேற்றிரவு தமக்கு ஹம்ஸ தூளிகா மஞ்சமாக அசதியைப் போக்கிய ஜமுக்காளத்தின் பேரில் உட்கார வைத்துவிட்டு, காகிதப் பொட்டலத்தில் சுருட்டி வைத்திருந்த வெற்றிலை மடிப்பை எடுத்துக் கொண்டு அந்த ஜமுக்காளத்தின் வேறு ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு, காய்ந்துபோன சுண்ணும்பைச் சூர்ணமாக்கி, வெற்றிலையில் போட்டு மடக்கி வாயில் மென்று அதுக்கிக்கொண்டு, "என்ன இவ்வளவு காத்தாலேலெ?" என்ருர்.

ராமலிங்கம் வாய் பேசாமல் ஒரு கடிதத்தை எடுத்துக்கொடுத்தார். அதில் ரொக்கமாக ஒரு பத்து

ரூபாயும் ஐந்து நாட்கள் தவணை கழித்துத் தேதியிட்ட 50 ரூபாய் செக்கும் இருந்தன. "ராமலிங்கம் கைவசமுள்ள புரூப்பைப் பார்த்துக் கையோட அனுப்பிச்சுட்டா ரொம்ப ஒத்தாசெயா இருக்கும்; புஸ்தகம் சீக்கிரம் வெளிவந்தால் எல்லாருக்கும் சவுகரியந்தானே?" என்று எழுதியிருந்தது.

"புரூப் எங்கே?" என்றார் வி. பி.

ராமலிங்கம் பேசாமல் எடுத்துக் கொடுத்தான்.

பேசாமல் எழுத்தெழுத்தாகப் பார்த்துத் திருத்திக் கொடுக்கலானார் எழுத்தாளர்.

மனசு ஒரு புதுமாதிரியான சுரம் பேச ஆரம்பித்தது.

'நேத்துச் சோமாரிப் பயல்மாதிரி இந்த ராமலிங்கத்துடன் மல்லுக்கு நிற்காமல் உறுதியைக் காட்டினது தான் செக்கும் பணமும் காலையில் சிட்டாகப் பறந்து வந்திருக்கிறது. ராமலிங்கம் என்ன பெட்டிப் பாம்பாக உட்கார்ந்திருக்கிறான்! என்ன மரியாதை! தாராளமாகப் பேசக்கூடப் பயப்படுகிறானே? இதுக்குத்தான் ஆத்ம சக்தின்னு பேரு. அறிஞ்சுதான் அஹிம்சையைப் பிடித்துக்கொண்டிருக்கிறார் மகாத்மா. எனக்கு நேத்தே இந்த மாதிரிதான் நடக்கும்னு தெரியும்.'

"என்ன ராமலிங்கம், உங்க பிரஸ்காரனுக்கு 'வந்தால்தான்' என்று எழுதினால் ஏன் எத்தனை தடவை திருத்தினாலும் இரண்டு வார்த்தை மாதிரி ஸ்பேஸ் போட்டு வைக்கிறான்? முதல் புரூப், இரண்டாவது புரூப்; இப்போ கடைசி பாரம் புரூப், எல்லாத்திலேயும் ஒரே மாரடிப்பாக இருக்கு."

"மெட்ராஸ் பிரஸ்களில் எல்லாம் கம்பாஸிட்டர்கள் அப்படித்தான் போட்டுத் தொலைக்கிறான்,—என்ன எழவைப் பண்ணுகிறது......"

"எப்படியோ பார்த்துச்செய்; இந்த வாரக்கடைசி யிலே புஸ்தகம் வந்து விடாது?" என விரல்களைச் சுடக்கு முறித்துக் கொண்டே கேட்டார்.

"ஏன் வெள்ளிக்கிழமையே வந்துடும். வெள்ளிக் கிழமை ராத்திரி எட்டு மணிக்குப் புஸ்தகம் ரெடியா யிடும்..."

"ராமலிங்கம், ஒரு நிமிஷம் இரேன், காபிசாப்பிட்டு விட்டுப் போகலாம்; நான் தலையில் தண்ணியைக் கொட் டிக்கொண்டு வந்துவிடுகிறேன்."

"இல்லெ ஸார்; எனக்கு வேலை இருக்கு; மாம்பலம் போகணும்..."

"அடே ஒரு நிமிஷம் இருடான்னா; என்னிக்கோ ஒரு நாள் நான் உன்னைக் கூப்பிடுகிறேன்" என்று சொல் லிக்கொண்டே, வேகமாக மாடிப்படி வழியாக இறங் கினார் எழுத்தாளர்.

"நீயா கூப்பிடுகிறாய்..." என்று யாரும் இல்லாத அறையில் சிரித்துக்கொண்டான் ராமலிங்கம்.

## 4

வீட்டுக்கார முதலியாரவர்களுக்கு,

அநேக கோடி நமஸ்காரம். தாங்கள் நான் வீட்டில் இல்லாத சமயத்தில் இங்கு வந்து சென்றுகொண்டிருப் பது கேட்க வருந்துகிறேன். இத்துடன் ரூ. 50 க்கு ஒரு செக் வைத்து அனுப்பி வைத்திருக்கிறேன். நாளது தேதி வரையில் உள்ள பாக்கியையும் வருகிற மாத வாடகையை யும் எடுத்துக் கொண்டு மீதியைத் தங்கள் வசம் வைத்

திருந்தால், நான் கடைப்பக்கமாக வரும்போது பெற்றுக் கொள்ளுகிறேன்.

1/27, கண்ணுயிரம் பிள்ளைதெரு, இப்படிக்கு,
தேனும்பேட்டை, தங்கள்
சனிக்கிழமை. வி. பி.

ராம பத்மா பிரசுரம் லிமிட்டெட் முதலாளி ஸ்ரீ எல். எஸ். பி. அவர்களுக்கு, நமஸ்காரம்.

தாங்கள் தங்களது சகபாடி ஸ்ரீ ராமலிங்கம் மூலமாக ரூ. 50 க்கு அனுப்பியிருந்த செக்கைப் பாங்கியில் எடுக்க மறுத்துவிட்டார்கள். இதன் மூலம் எனக்கு இரண்டாவது தடவை அவமானம் விளைத்துவிட்டீர்கள். எழுத்தாளன் என்றால் உங்கள் வீட்டுக் கொத்தடிமை என நினைத்துக்கொண்டீர்களோ? இது ஜனநாயக உலகம். எழுத்துக்கும் எழுதுகிறவனுக்கும் எங்கும் மதிப்பு உண்டு. ராம பத்மா பிரசுராலயம் தமிழ் இலக்கிய சரித்திரத்திலேயே தனக்கென ஒரு மாசு விளைவித்துக்கொண்டிருப்பது கண்டு பரிதபிக்கிறேன். தங்கள் செக்குக்குக் கௌரவம் கொடுத்து, நான் வேறு ஒரு நண்பரிடம் அனுப்பியதனுல் ஏற்பட்டுள்ள விபரீத பலனை, இலக்கிய நலனை முன்னிட்டாவது கூடிய சீக்கிரத்தில் நேர்படுத்த முடியும் என எதிர்பார்க்கிறேன்.

(**குறிப்பு:** திரும்பவும் தாங்கள் ராமலிங்கத்தை அனுப்ப வேண்டாம்.)

1/27, கண்ணுயிரம் பிள்ளை தெரு,
தேனும் பேட்டை, தங்கள்
புதன் கிழமை. வி. பி.

கிணற்றில் கல் போட்ட மாதிரி ராம பத்மா கம்பெனி பேசாதிருந்துவிட்டது; அதையும் குற்றம் சொல்ல

முடியாது. கவனத்தை இலக்கிய சேவையில் திருப்பி இருந்ததனால் இலக்கிய ஊழியரைப் பற்றிக் கவனிப்பதற்கு அதற்குப் போதில்லை.

வி. பி. நாளுக்கு நாள் துர்வாச விகாரம் படைக்க ஆரம்பித்துவிட்டார். அந்த நாய்ப் பயலுடைய புஸ்தகக் கம்பெனிக்கே போவதில்லை என்று தீர்க்கமாக வீட்டோடு உட்கார்ந்திருந்தார். அனுப்பப் பட்டிருந்த பத்து ரூபாய் அவரது வைராக்கியத்துக்கு ஒத்தாசையாக இருந்தது.

வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணி இருக்கும். வீட்டுக்கார முதலியார் வக்கீல் மூலம், வீட்டை 24 மணி நேரத்துக்குள் காலி செய்யும்படி கொடுத்திருந்த நோட்டீஸ் வந்தது.

“அயோக்கிய ராஸ்கல்; இந்த நொள்ளை ரூமுக்கு நோட்டீஸ் வேரேயா? கார்ப்பரேஷன் ஹெல்த் இன்ஸ்பெக்டரிடம் புகார் சொல்லி இந்தப் பயலுக்குத் தண்ணி காட்டுகிறேன்” என்று காலி அறையினிடம் கறுவிக் கொண்டிருந்தார்.

“வி. பி., கதவைத்திற. என்ன, இந்த நேரத்திலா தூங்குகிறாய்?” என்ற எல். எஸ். பி. குரல் கேட்டது.

தமது கோபத்தைத் தெரிவிக்கும் பாவனையில் பதில் பேசாமல் கதவைத் திறந்தார் வி. பி.

“என்ன சொன்னாலும் வி. பி. நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி. உன் வேலைன்னா பிரஸ்காரன் ஒரு நொடியிலே முடிச்சுக் குடுத்துடறான். இந்தக் கவர் டிஸைனைப் பாரு. இங்கிலீஷ் கெட்டப் மாதிரி; யாரு இந்தக் காலத்திலே உனக்கு இந்த மாதிரி இன்டரஸ்ட் எடுத்துண்டு செய்யறா?”

"புஸ்தகம்னு இதல்லவா புஸ்தகம்? உனக்குத் தான் பொஸ்தகம் போடற விவகாரம் அத்து படியா யிருக்கு; உன்னைப்போல யாரிருக்கா?"

"அதிருக்கட்டும்; அன்னிக்கி என்ன அப்படி கன்னுப் பின்னுன்னு கடுதாசி எழுதிவிட்டே? நிதானம் வாண்டாம்? பின்னெ உனக்கும் ராமலிங்கத்துக்கும் வித் தியாசம் என்னு? அதெப்பார்த்த பிற்பாடு என் மனசு நொந்தே போச்சு....உனக்கு என்ன புள்ளையா குட்டியா? ஏகக் கட்டை, அந்த ஓம் பணந்தான் பத்திரமா என் னிடம் இருக்கட்டுமே..."

"அது உனக்குத் தெரியாதா? வீட்டுக்காரன் நோட் டீஸ் கொடுத்துவிட்டான்; அதுதான் அவ்வளவு கோபம்; உன்னை எனக்குத் தெரியாதா?" என்றார் இரண்டாவது பிரம்மா.

"இதுதானு பிரமாதம்! நாளைக்கே கிளியர் பண்ணிட் டாபோச்சு. ஏன் இங்கே கெடந்து திண்டாடறே? வாட கைக்கு வாடகை மிச்சம்; குஷியாப் போது போக்கக் கம்பெனிக்குக் கம்பெனி ஆச்சு..."

"நான் வாடகை கட்டாயம் குடுக்கத்தான் செய் வேன்; அப்படியானு வறேன். சும்மா வந்திருக்க முடி யாது..."

"அட சட்! வாடகையா பிரமாதம்! உனக்கு எவ் வளவு எடம் வேணும்? சும்மா இருக்கிற நேரத்திலே அங்கே வருகிற புரூப்பைப் பார்த்தா கணக்கு அட்ஜஸ்ட் ஆயிடுது; நீ உன் மூட்டையை இப்பவே கட்டு. ரிக்ஷாவி லேயே போய் விடலாம்."

# புரட்சி மனப் பான்மை

அன்று என் நண்பரின் பத்திரிகை ஆபீஸிற்குப் போயிருந்தேன். அங்கே ஒரு புரட்சிக்காரர்,—அசல், அப்பட்டமானவர்' கொஞ்சம்கூட கலப்புக் கிடையாது — நண்பருடன் பேசிக்கொண்டிருந்தார். அவர் மாஜி—ஏதோ ஓர்—சதிக் கைதி.

என் நண்பர் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். 'நம் போன்றவர்கள் எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டியவராக்கும்' என்றார் என் நண்பர். புரட்சிக்காரர், 'ஓய்—உமக்கு—வெள்ளைக்காரனைச் சுடத் தெரியுமாங் காணும்' என்று ஒரு பார்வை பார்த்தார்.

சரி, இதுதான் ஸ்ரீமான் புரட்சியா என்று நிர்ணயித்துக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தேன். புரட்சிக்காரர் அணியவேண்டிய அசல் விதேசிச்சரக்கு, யாரையும் எடுத்தெறிந்து பேசும் தன்மை.........சர்வ லக்ஷணமும் பொருந்தியிருந்தது. சாட்சாத் புரட்சிக்காரர் தரிசனத்திற்காக, என் முன்னோர்கள் வழிபட்டு வந்த கடவுளை நான் கும்பிட்டுக் கொண்டேன்.

பாட்லிவாலா, பண்டார சன்னதி, கங்காரு, 1939 மாடல் மோட்டார் கார், இரட்டைப் பெண்கள், சினிமா

ஸ்டார் காந்தாமணி பாய், உயர் திரு தேச பக்தர், இத்யாதி இத்யாதி ரகத்தைப் பார்க்க மனுஷருக்கு சுபாவமாக உள்ள ஆசையை என் விஷயத்தில் திருப்தி செய்து வைத்த அந்த ஸ்ரீமான் இன்குவிலாப் ஜிந்தாபாத்துக்கு என் மனமார்ந்த வந்தனம்.

என் நண்பரும் சிறை சென்ற தேச பக்தர், கார்ல் மார்க்ஸ் பாராயணமும் கொஞ்சம் உண்டு. சுருங்கச் சொல்லுகிறேன்—வெகு தீவிரம்.

குசலப் பிரச்னங்களுடன், பரஸ்பர போலீஸ் காவல், சிறையில் கசையடி, இடைமறிக்கப்பட்ட கடிதங்கள், சமீபத்தில் வெளியான விக்டர் கோலான்சின் தீவிர வாத கிரந்தம்—சுங்க அதிகாரிகள் கண்ணில் பிஸ்கோத்து டின் மாதிரி இந்தியாவுக்குள் நுழைந்தது—எல்லாம் சேர்த்து, அந்தச் சமயத்தில் ஸ்ரீமான் எழுத்தாளரைச் சென்ற வருஷத்துப் பஞ்சாங்கமாக, அதாவது சமயா சமயங்களில் திருப்பிப் பார்க்க வேண்டிய விஷயமாக ஆக்கியது.

வேண்டாத இடங்களில், வெற்றிலை பாக்கு+புகையிலை என்ற அழுத்தமான வாய்ப்பூட்டை—(144 உத்திரவைவிடக் கடுமையானது) பிரயோகித்துக்கொள்ள எனக்குத் தெரியும் என்பது அவருக்குத் தெரியாது..........

எனது நண்பரை, இப்படிப் புரட்சி ச்க்தி அமுக்கிவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. லாட்டியடி முதல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கோபம்வரை, தாலுக்கா டிவிஷன்களில் ஏற்றுத் தாங்கியவர். அவர் தாலுகா பிராந்தியம் என்று நான் விசேஷமாகக் குறிப்பிடுவதின் காரணம், அங்குள்ள மலையாளத்து ரிசர்வ் போலீஸ்காரர்கள், சட்டத்தையும் ஒழுங்கையும் தங்கள் சொந்தப் பாங்கியிலிருக்கும் கரண்ட்—டிபாசிட்டாகக் கருதி அதில் அத்துமீறித் தலையிடுகிறவர்களைத் தங்கள் சொந்தக் கோபாவேசத்துக்கு ஆளாக்குகின்றனர்.

பட்டணத்துப் போலீஸ்காரன் என்றால் கொஞ்சம் தாராள புத்தி யுண்டு. இப்படியெல்லாம் அனுபவமுள்ள ஒரு மனிதன், சர்வ சூன்யமாகத் தன்னை இகழ்ந்து கொள்ளுவார் என்று நான் நினைக்கவே யில்லை.

வெற்றிலையின் நரம்பைக் கீறி எறிந்தேன். அது பிருமி' (காரமில்லாத மெட்ராஸ்) வெற்றிலை. வெறுப்புடன் சுண்ணும்பைத் தடவினேன். சுவரில் சுரண்டி யெடுத்தது போல, உருண்டு உருண்டு வெற்றிலையை ஓட்டைபோட்டது. இந்த சம்பிரமத்தில் களிப்பாக்கு. அதற்கு மேலாக முகப்பவுடர், செண்டு இவைகளில் நம்பிக்கை வைத்து ஆட்களை மயக்கி வரும் குரூபியான விபசாரிக்கு உதாரணம் போன்ற புகையிலை.

இவை போதாதென்பது போல, 'ஸ்ரீமான் வெங்கு ராவைத் தெரியுமோ, கவர்னர் ஸ்பெஷல் வெடிகுண்டு வழக்குக் கைதி; பெல்லாரி ஜெயிலிலே, தனி வார்டில் போட்டு அடித்தார்களே. ஓகோ, அப்பொழுது உங்களை திருச்சி ஜெயிலுக்கு மாற்றிவிட்டார்களோ,—வீரன்னு வீரன்தான் சார்—என்ன வேலைகளெல்லாம் பண்ணியிருக்கான் தெரியுமோ...........'

'அவரைப் பார்க்க உங்களுக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்குமே? பாவிப்பயல்கள் என்னை மாத்திப் போட்டானே!' என்று பரதவித்தார் புரட்சி மோகன வாகிரியில் சிக்கிய என் நண்பர்.

'மூவ்மெண்ட் டயம்லே என்ன செய்தார் தெரியுமா......செப்டம்பர் நடு ராத்திரி ரூம்லே டார்ச்கூட இல்லை,...........வெளியிலே சடபுட என்று கதவு தட்ற சப்தம் கேட்டது,—என்ன செய்தார் தெரியுமா?' என்று ஓர் ஆணித்தரமான கேள்வி போட்டார்......'தெரியாது; அதற்கப்புறம்?' என்றேன் நான்.

அரிச்சந்திரன் மயான காண்டத்தில் ஊன்றிக் கொண்டு நிற்கவேண்டிய தடி சடக்கென்று ஒடிந்துவிட்டால் எப்படியிருக்கும்? 'பின்—அரிச்சந்திரன்' அந்த சமயத்தில் சோகம் குலைய மிருதங்கக்காரனைப் பார்த்து உறுமுவது போலிருந்தது என் நண்பரின் பார்வை.

ஸ்ரீமான் புரட்சியின் ரசனை கொஞ்சம் கட்டை போலும்; 'அவர் அசல் கோதுமை சப்பாத்திதான் சார், பஞ்சாபிக்காரன் மாதிரி சாப்பிடுவார்' என்றார், பாவம் ஸ்ரீமான் புரட்சி.

சரி, நேரம் சரியில்லை என்று நினைத்துக்கொண்டு, 'உம்மிடம் ரெண்டு ரூபாய் கடன் வாங்க வேண்டும் என்று வந்தேன்; நாளைக்கும் வருவேன்; உம்மால் என்னை ஏமாற்ற முடியாது' என்று சொல்லிக்கொண்டு வெளியேறினேன்.

உப்பங்காற்று மட்டிலும் வீசும் சமுத்திரக் கரைக்குப் போகும்பொழுதுதான் விஷமத்தனமான என் கசப்பு என்னைவிட்டு அகன்றது.

அப்பொழுது அங்கு வந்தான் ஸ்ரீ பாலு, மெஸர்ஸ் பீபரிவாலாஹு-க்கும் சந்த் அன் சன்ஸ் கம்பெனியின் பல ஜோலி குமாஸ்தா. கம்பெனியின் காப்பிக்கொட்டை கேஸ்களுக்கு ஆணி அடித்து விலாசம் ஒட்டுவது முதல் வரவு செலவு கணக்குத் தயாரிப்பது, சேட்ஜி மகள் ஸோனியாவுக்கு வர்ணப் பென்சில் வாங்கிக் கொடுப்பது வரை உள்ள வேலைகள் எல்லாவற்றையும் விரக்தியுடன் செய்யும் அபேதவாதி அவன்.

'என்ன சார் இப்படி உட்கார்ந்திருக்கேள்! ஹி! ஹி! போனவாரம் நீங்க எழுதின கதை ரொம்ப ஜோர் சார்.—வாழ்க்கையின் நுணுக்கங்களை; அப்படியே எழுத்தோ

வியமாப் பண்ணியிருக்கேள் சார் ஹி-ஹி !' என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். அவன் அடிக்கடி என் கதைகளைப் படிப்பான்; அதைவிட என் விமர்சனங்களைப் படிப்பான். முக்கால் வாசி என் கைச்சரக்கே என் தலைமேல் தூக்கிப் போட்டு உடைக்கப்படும்.

என்ன இருந்தாலும் புகழல்லவா சார்? யாருக்குத் தான் இழக்க மனசு வரும். வர்ணக் கடுதாசி யொட்டிய ஜப்பான் விளக்கு மாதிரியான சுடாத புகழ் வெளிச்சத்தில் உடம்பைக் கொஞ்சம் காய வைத்துக்கொண்டேன்.

'........' என்ற பத்திரிகையைக் குறிப்பிட்டு 'போன வருஷம் மே மாதப் பிரதியைப் பார்த்தீர்களா' என்றான்.

'எதற்கு?' என்றேன்.

'அதிலே ஓர் ஆழ்ந்த உண்மையிருக்கு; பார்த்தேன் சார். நேற்று இப்படி மூர்மார்க்கெட் பக்கம் போனேன். இதை அடுக்கி இருந்தான். அட்டைப் பட்டமெல்லாம் கிழிஞ்சு போச்சு; காலணாவுக்கு ரெண்டுன்னான்; என் சார் நமக்கு விஷயந்தானே வேணும்; அப்படியே ஒரு ரெண்டணாவுக்கு ஒரு கத்தை வாங்கினேன். நம்ம வீட்டுக்காரி இருக்காளே, அவளுக்குக் காகிதக் கூடை பண்ணனுமாம்.—அப்படியே குடுத்துடுன்னு வாதாடினாள்; அதிலே ரொம்ப விஷயங்களிருக்கு; படிச்சிட்டுத்தான் தருவேன் என்றேன் ! எப்பப் பார்த்தாலும் இந்தத் தொந்தரவு தான் சார். நல்ல கோட் சார்,—மூணு வருஷந்தான் வாங்கினது; கை ஓரத்திலேதான் கொஞ்சம் கிளிசல். அதைக் குடுத்து ஒரு கண்ணாடி ஜாடி வாங்கிப்பிட்டாள் சார்—என்ன பண்ணச் சொல்ரேள்—என்னெ?' என்று ஒரு மூச்சுப் பேசி முடித்தான்.

நான் எப்பொழுது ஓயப்போகிறதோ என்று கேட்டுக் கொண்டே இருந்தேன்.

'ஏன் சும்மா ஒரு மாதிரி இருக்கேள்? கொஞ்சம் வெத்திலெயே போடுங்களேன்' என்று விதேசி டப்பீ நாசூக் வெற்றிலைச் செல்லத்தை என்னிடம் நீட்டிவிட்டு, 'நீங்கள் என்ன நினைக்கிறேள்,—எண்ணெ தேச்சுக் குளிச் சால் உடம்புக்கு நல்லதா சார்?' என்ருன்.

'எனக்கெப்படித் தெரியும்? நான் தேச்சுக்காம இருந்ததில்லையே' என்றேன்.

'சும்மாத்தான் கேட்டேன். அதிலே போட்டிருக்கான், எண்ணெ தேய்ச்சுண்டாக் கெடுதல்னு. கெடுதல் எப்ப டீன்ஞ ஜன்னி வந்திடுமாம். பாம்பு கீம்பு கடிச்சா, விஷத் தோடே ரோஷம் (உக்கிரம்: மெட்ராஸ் வார்த்தை) ரொம்ப ஜாஸ்தியாம். இந்தக் கெடுதல்களெல்லாம் எதற்கு? அவன் ஒரு மருந்து சொல்ருன்; அதிலே எனக்கு அவ்வளவு நம்பிக்கையில்லே—வெலே ஜாஸ்தி— அதுமட்டுமா (காதோடு காதாக)........சுக ஜன்னி வந்துடு மாம்! இன்னிக்கு ஒரு காரியம் செய்ரதுன்னு தீர்மானம் பண்ணிப்புட்டேன். இனிமே எண்ணெயே தேச்சுக்கிர தில்லேன்னு; வீட்டிலே ஏக ரகளை. இன்னிக்கி என்ன கிழமை தெரியுமா—புதன்! ஒரே பாட்டா முடியாதின்னுப் புட்டேன். தலையிலேகூட எண்ணெயைக் கொண்டுவந்து வச்சுப்புட்டா; நான் தீரமா உதறித் தள்ளிப்பிட்டு ஆபீஸுக்கு வந்துட்டேன்.

'இன்னும் வீட்டுக்குப் போகல்லே. இப்படியே பீச் சுக்கு வந்துட்டு பூ வாங்கிக்கிண்டு போகலாம்னு வந் தேன்........'

'ஏன் ஓய் உம்மவீட்டு மூலக்கிரகத்து சமாச்சா ரத்தை வெளியில் போட்டு உடைக்கிறீர்?—என்ன சமரசக் கமிட்டி ஏற்படுத்தணுமா' என்றேன்.

'போமையா! உங்களைப் பார்த்ததும், ரொம்ப நாளாச்சே; வீட்டுக்கு வாருங்களேன் காபி சாப்பிட்டுப் போகலாம் என்று கூப்பிடலாம்னு வந்தேன்' என்றான் பாலு.

'வீட்டிலே காபி சாப்பிடர திருக்கட்டும்; என்கூட ஹோட்டலிலே காப்பி சாப்பிடுமே!' என்றேன்.

'ஹு ஹும்! வீட்டிலே காப்பி பாழாப் போச்சேன்னு கத்துவா; வாருங்கள் போகலாம்!' என்றான் பாலு.

'பாலு நீ—பார்த்திருக்கிறாயா என்றேன்.'

'புரட்சிக் கைதி! அவரையா,..........நான் எப்படிப் பார்த்திருக்க முடியும்?'

இல்லே பார்க்கணும்னு ஆசையிருக்கா?'

ஆசையா! மனசு அப்படியே துடி துடிக்கிறது. ஆமாம்; புரட்சிக்காரரா? எப்படியிருப்பார்? ரொம்பத் தீவிரமாக இருப்பாரோ?'

'பார்க்கணும்னு கூட்டிண்டு போறேன்!' என்று புதிய சிஷ்யன் சேர்த்துக் கொடுக்கும் சேவையில் இறங்க முயன்றேன்.

'இல்லெ; வீட்டிலே காப்பி ஆறிப்போயிடும்; சுருக்க போவோம் வாருங்க; இல்லாட்டா ஒரே தொல்லைதான்' என்று எட்டி நடந்தான் பாலு.

இரண்டு தெய்வங்களுக்கு ஒரே சமயத்தில் சிஷ்யனாகும் திண்டாட்டத்தை பாலுவுக்கு ஏற்படுத்தக்கூடாது என்ற ஜீவ காருண்ய சேவையில் ஈடுபட்டேன்.

# உபதேசம்

டாக்டர் விசுவநாதன், கூரிய ஆபரேஷன் கத்தியை பேசினில் வைத்துவிட்டு, கத்தரிக்கோலால் குடலின் கெட்டுப்போன பகுதியைக் கத்தரித்தார். லிண்டை வைத்து ரணமும் சீழுமான பகுதியைத் துடைத்துத் தொட்டியில் போட்டார். "நர்ஸ், ஊசி" என்றார். பக்கத்தில் ஸ்டெரிலைஸ் செய்த ஊசியை நர்ஸ் கொடுக்க, டாக்டர் கை மடமடவென்று சக்கிலியத் தையல் போட ஆரம்பித்தது.

கிளாஸ் மேஜையில் கிடத்தப்பட்டிருக்கிற வியாதியஸ்தன் சிறிது முணகினான்; பிரக்ஞை வருவதின் முன்னணி சமிக்ஞை!

"டாக்டர் வில்க்கின்ஸன், இன்னும் கொஞ்சம் குளோரபாரம்....ஒரு நிமிஷம் போதும்........ஹூம், வெற்றிதான், என்று நினைக்கிறேன்" என்று பேசினில் ஊசியைப் போட்டுவிட்டு, கை உறைகளையும் முக மூடியையும் கழற்றிவிட்டுக் கைகழுவ பேசினிடம் சென்றார் விசுவநாதன். 'வியாதியஸ்தனுக்கு பிரக்ஞை வந்துவிட்டது; ஆனால் அளவு கடந்த முயற்சி. ஒரு மணி நேரம் கழித்துக் கொஞ்சம் குளுக்கோஸ் கொடுங்கள்.......' என்று சொல்

லிக்கொண்டே வாயில் சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு, ஆப்பரேஷன் தியேட்டரை விட்டு, டாக்டர் வில்க்கின்ஸன் தொடர இறங்கி நடந்தார். இவரது நரைத் தலையில் சூரிய ஒளிப் பிரகாசம் விழுந்தது இவர் முகத்திற்கு ஒரு விபரீதமான தேஜஸைக் கொடுத்தது.

விசுவநாத்துக்கு பல மேல்நாட்டுச் சர்வகலாசாலை களின் பட்டம். நிறபேதம் பாராட்டும் பிரிட்டிஷ் வைத் தியக் கௌன்ஸில் இந்திய வைத்தியக் கௌன்சில்கள் இவரது அபாரமான கல்பனை முறைகளைக் கண்டு பிர மிக்கும். ரண சிகிச்சை என்றால் டாக்டர் விசுவநாத் என்று அர்த்தம். சென்னை வாசிகள் அகராதிக்குமட்டு மல்ல. யூகோஸ்லாவிய இளவரசருக்கு வந்த விசித்திர மான வீக்கத்திற்குச் சிகிச்சை செய்த நிபுணர்களில் இவரும் ஒருவர். மண்டையில் வீக்கம். மற்றவர்கள் கத்தி எடுத்தால் பிராணஹானி ஏற்படுமோ என்று பயப் பட்டார்கள். ஏனென்றால் ஆப்பரேஷன் வெற்றியடை வது, அதைச் சீக்கிரம் செய்து முடிப்பதைப் பொருத்தது. ஒரு விநாடி அதிகமானால் இளவரசருக்குப் பிரேதப் பெட்டியை ஆர்டர் செய்யவேண்டியதுதான்........ஆனால் விசுவநாத் கைகள், வேலையை குறைந்தபட்ச நேரத்திற் கும் பாதியளவிலேயே செய்து முடித்தன. இப்பொழுது அவர் சௌகரியமாகப் பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டிருப்பதற்கு டாக்டர் விசுவநாத்தான் காரணம்.

சென்ற ஜெர்மன் சண்டையில் பேஸ்காம்புகளில் உழைத்ததினால், ஆப்பரேஷன் கத்தியை வைத்துக் கொண்டு யமன் வரவைத் தடுக்க, டாக்டர்கள் தப்புவழி என்று சொல்லக்கூடிய முறைகளில் எல்லாம் பரிசீலனை செய்ய இவருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது.

டாக்டர் வில்க்கின்ஸன் இவரது சகா. அவரது அந்தரங்க அபிப்பிராயம் மற்ற இந்தியர்களைப் பற்றி என்னவாக இருந்தாலும், டாக்டர் விசுவநாத்திடம் கருப்பன் என்ற பிரக்ஞை யில்லாமலே பழகி வந்தார். நாஸ்திகத்தின் பேரில் இருவருக்கும் இருந்த அபார பக்தி இந்த நெருக்கத்திற்குக் காரணமாக இருக்கலாம். முப்பத்து முக்கோடி கருப்புத் தேவாதி தேவர்களும், மூன்றே மூன்று வெள்ளைத் தெய்வங்களும் இவர்களது கிண்டல்களை இரண்டு நாட்கள் கூட இருந்து கேட்டுக் கொண்டு இருந்தால், இவர்கள் கண் எதிரிலேயே தூக்குப் போட்டுக்கொள்ளும்......ரூபமற்ற தெய்வங்களுக்கு...... அப்படிப்பட்ட அடி......

அன்று ஆப்பரேஷன் தியேட்டருக்கு கொண்டு வரப் பட்டவன் ஒரு ஹடயோகி; விஷங்களையும் கண்ணாடிச் சில்லுகளையும் கண் எதிரிலும் தின்று சாகாதவன். சித் தாந்தச் சாமி என்ற அவன், இந்த இரு டாக்டர்கள் முன்னிலையில்கூடத் தன் திறமையைக் காட்டி இருக் கிறான்.

அவன் ஏதோ திடீரென்று பிரக்ஞையற்றுக் கிடக் கிறான் என்ற தகவல் கிடைத்ததும், ஆம்புலன்ஸ் காரை அனுப்பி சத்திரத்திலிருந்து அவனை எடுத்து வரச் செய்த தும் இவர்தான். ஹடயோகியின் உட்புறம் எப்படியிருக் கிறது என்பதைப் பார்க்க இருவருக்கும் இருந்த ஆசை அளவில்லை. எக்ஸ்ரே பரீக்ஷையில் குடலில் ஒரு பகுதி பழுத்து அழுகிவிட்டது என்று கண்டனர். காரணம் குடல் சதையில் ஒரு கண்ணாடிச் சில் குத்திக்கொண் டிருந்ததே. ஹடயோகி ஏதோ முறை தப்பிச் செய்ததின் விளைவு.

சித்தாந்தச் சாமிக்கு இரண்டு ஸ்பெஷல் நர்ஸ்கள்; மூன்று மணி நேரத்திற்கு ஒரு தரம் டாக்டர் பரிசோதனை எல்லாம்......

மறுநாட் காலையில் டாக்டர் வில்க்கின்ஸன் கேட்ட செய்திகள் அவரைத் திடுக்கிட வைத்தன. ஒன்று ஆஸ்பத்திரியில் கிடத்தப்பட்டிருந்த சித்தாந்த சாமியைக் காணேம் என்பது. மற்ருென்று டாக்டர் விசுவநாத் காஷாயம் வாங்கிக் கொண்டார் என்பது. முதல் விஷயத்தில் டாக்டர் வில்க்கின்ஸனுக்கு அவ்வளவு சிரத்தையில்லை; அது போலீஸ் கேஸ். டாக்டர் விசுவநாத்திற்கு மூளைக் கோளாறு தான் ஏற்பட்டிருக்குமென்று முதலில் நம்பி, அதற்கு வைத்தியம் செய்யவேண்டுமென்று நினைத்தார்.

உடனே தமது மோட்டார் காரில் டாக்டர் விசுவநாத் பங்களாவிற்குச் சென்ருர். தலை மொட்டை; இடையில் ஒரு காவி வேஷ்டி; காலில் குப்பிப்பூண் பாதக்குறடு; இந்த அலங்காரத்தைக் கண்டதும் டாக்டர் வில்க்கின்ஸனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "எப்படியாலும் இந்தியர்கள் இந்தியர்கள்தான்" என்று நினைத்துக் கொண்டார்.

"என்ன டாக்டர்! இது என்ன ஜோக்? என்றைக்கு உமது தெய்வங்கள் உம்மைப் பேட்டி கண்டன? தவடையில் கொடுத்து ஏன் அனுப்பவில்லை" என்று சிரித்தார்.

"வில்க்கின்ஸன்! சிரிக்காதே; இது ஒரு புதிய பரிசீலனை. எனது சித்தாந்தம் ஒரு முடிவு கட்டப்படவில்லை. பரிசீலனை செய்துதான் பார்க்க வேண்டும்" என்ருர் டாக்டர் விசுவநாத். இவர்களிடத்தில், பாசறை ஆஸ்பத்திரி வாழ்க்கையில் தோன்றிய வெறி காணப்பட்டது.

டாக்டர் வில்க்கின்ஸனுக்கு ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. 'வெல்! குட்லக்!' என்று சொல்லிவிட்டுத் தான் திரும்ப முடிந்தது.

*　　*　　*　　*

ஐந்து வருஷங்கள் கழித்து கைலாச பர்வத சிகர யாத்திரைக் கோஷ்டியில் டாக்டர் வில்க்கின்ஸனும் ஒருவராகச் சென்றார். அப்பொழுது பிளான் போடப்பட்ட பாதையே புதிது. இதுவரை யாரும் அந்த வழியில் சென்றதில்லை. திபேத்திய சர்க்கார் கொஞ்சம் தில்லுமில்லு செய்ததால் யாத்திரைக் கோஷ்டித்தலைவர் கடைசி நேரத்தில் வகுத்தது. கோஷ்டியில் பலத்த எதிர்ப்பு இருந்தாலும், யாத்திரைக்காரர்கள் விட்டுக் கொடுக்க மனமில்லாமல் ஒத்துக் கொண்டனர்.

யாத்திரை ஆரம்பித்து இருபதாவது நாள். ஒன்றும் முளைக்காத உறைபனிப் பாலைவனத்தின் வழியாகச் செல்லுகின்றனர். மணல் பாதைதான். அருகில் அரை மைல் தூரத்தில் பனிச் சிகரம்.

கோஷ்டியின் நடுவில் நடந்து சென்று கொண்டிருந்த டாக்டர் வில்க்கின்ஸனுக்குச் சித்தாந்தச் சாமியாரின் அடையாளங்களுடன் ஒரு மனிதன் பனிக் கட்டி உச்சியில் நிற்பதுபோலத் தெரிந்தது.

'அதோ பாருங்கள் அந்த மனிதனை! அவனை எனக்குத் தெரியும். அவன் ஒரு சாமியார்' என்று தனக்கு முன்னே செல்லுபவரிடம் சொன்னார்.

முன்னே சென்ற ஜேக் ஆல்பர்ட்ஸன், ஆல்ப்ஸ் கிளப் நிரந்தர அங்கத்தினர். தூரதிருஷ்டிக் கண்ணாடியைத் திருப்பி வைத்துப் பார்த்து, 'மனிதன் மாதிரித்தான் தெரிகிறது......ஆனால்......' இவர் பேசி முடிக்குமுன் வில்க்கின்ஸன், பக்கத்திலிருந்த பாறையில் தாவி, பனிச்சிக-

ரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார். ஜேக் ஆல்பர்ட்ஸ னும் துணிந்தவர்; அவரைப் பின்பற்ற முயற்சிக்கையில், கோஷ்டித் தலைவர் தடுத்து, "இருட்டி விட்டது; அங்கு போய்த் திரும்புவதென்றால் காம்புக்குப் போய்ச் சேர முடியாது" என்றார்.

'அந்த மனிதன் தனியாகப் போகிறான்; அவனைச் சாக அனுப்புவதா?' என்று கோபித்துக் கொண்டார் ஆல் பர்ட்ஸன். அப்பொழுதுதான் வில்க்கின்ஸன் போனது கோஷ்டித் தலைவருக்குத் தெரிந்தது.

வேறு வழியின்றி, 'அடையாளத்திற்குத் தீ வளர்த்து வைக்கிறோம்; சீக்கிரம் வாருங்கள்' என்று சொல்லிவிட்டுக் கோஷ்டியை அழைத்துச் சென்றார் தலைவர்.

ஜேக் ஆல்பர்ட்ஸனும் பாறைகளில் தாவித், தாவி வில்க்கின்ஸனைத் தொடர்ந்து சென்றார். பனிப்பாறை நெட்ட நெடுகலாக செங்குத்தாக இருந்ததால் அவர்கள் நின்ற இடத்திலிருந்து பார்க்கும்பொழுது உச்சி தெரியாது. இரண்டு பாறைகளின் இடுக்கு. அதைத் தாண்டி எதிரில் நீட்டிக்கொண்டிருக்கும் உறைபனிக் கட்டிமீது கால் வழுக்காது எட்டி வைத்து நின்று கொண்டால், அதன் வழியாகவே பனிச் சிகரத்தின் உச்சியை அடைய முடியும். ஜேக் ஆல்ப்பர்ட்ஸனும், வில்க்கின்ஸனும் ஒருவர் பின் ஒருவராக இடுக்கு வழியாக நுழைந்தனர். அந்த இடுக்குக்கு அப்புறம் பாதாளம். ஒரே குதியில்தான் பனிப்பாறைமீது குதிக்க வேண்டும். வில்க்கின்ஸன் மூச் செடுத்துத் தாவினார். கால் வழுக்கப் பார்த்தது. நல்ல காலம் ஐஸ் கோடரியை ஊன்றிக் கொண்டார், "நாரோ சேவ்" என்று சொல்லிக்கொண்டு. (மயிரிழை தவறினல்......என்று அர்த்தம்.)

ஜேக் பின் தொடர்ந்தார்.

இருவரும் பனித்தளத்தின்மீது வளைந்து செல்லும் பாதையில் நடக்கலாயினர். பனிக்கட்டிக் கிடையில் செங்குத்தாகக் கருங்கல் லிங்கம்போல் செதுக்கி யிருந்தது, அதன் தலையில் காஷாய வஸ்திர மூட்டை !

ஜேக், அதை எடுத்துப் பிரிக்கையில், "வில்க்கின் ஸன் ! இங்கே பாரும்!" என்று கூவினர்.

வில்க்கின்ஸன் திரும்பிப் பார்த்தார். செங்குத்தாக சுவர்போல் நிற்கும் உறை பனிக்கட்டிக்குள் மனித உருவம்......டாக்டர் விசுவநாத்! பத்மாசன மிட்டு நிஷ்டையில் உட்கார்ந்த பாவனையில்.

"அய்யோ பாவம், இவருக்கு இந்த முடிவா? பெரிய டாக்டர்," என்று தலையைக் குனிந்து வணங்கினர்.

*பின்பு மூட்டையைப் பிரித்தார். அதில் ஒரு தோல்ப் பர்ஸ்...டைரி அதைத் திறந்ததும்...*

"நண்பன் வில்க்கின்ஸனுக்கு,

நீ இங்கு வருவாய் என்று எனக்குத் தெரியும். நான் சாகவில்லை ; நீ என்னை எந்த நிலையில் பார்த்தாலும் சாக வில்லை என்று நம்பு. நமது உயிர் நூல் சாஸ்திரங்களைக் கிழித்தெறிந்து விட்டு வேறுமாதிரியாக எழுத வேண்டும். அஸ்திவாரமே தப்பு.

இப்பொழுது வெளியில் சொல்லாதே. நீ பயித்தியக் காரனக்கப் படுவாய்......அந்தச் சாமியார் லேசான ஆசாமி யல்ல......" என்றிருந்தது. மூட்டையைக் கட்டிப் பழயபடி வைத்துவிட்டு 'ஜேக் திரும்புவோமா?' என்ருர் டாக்டர் வில்க்கின்ஸன்.

"பின் வேறு என்ன செய்வது?" என்ருர் ஜேக்.

# நாசகாரக் கும்பல்

## 1

டாக்டர் விசுவநாதபிள்ளை (வெறும் சென்னை எல். எம். பி. தான்) சென்ற முப்பது முப்பத்தைந்து வருஷமாக ஆந்திர ஜில்லா வாசிகளிடை யமன் பட்டியல் தயாரித்துவிட்டு, பென்ஷன் பெற்று, திருச்செந்தூர் ஜில்லா போர்டு ரஸ்தாவில், பாளையங்கோட்டைக்கு எட்டாவது கல்லில் இருக்கும் அழகியநம்பியாபுரம் என்ற கிராமத்தில் குடியேறினர். (எனது திருநெல்வேலி நண்பர்கள் அழகிய நம்பியாபுரத்தைத் தேடி ஜில்லாப் படத்துடன் மோதி மூளையை வரள வைத்துக்கொள்ள வேண்டாம். அதில் இல்லை.)

ஏறக்குறைய அதே சமயத்தில்தான், குடிமகன் மருதப்பனும், இலங்கைத் தோட்டத் துரைகளுக்கு க்ஷவரகனக இருந்து, படிப்படியாகக் கொழும்பு கோட்டைத் தெருக்களில் ஸலூன் வைக்கும் அதிர்ஷ்டமடைந்து, அதில் ஒரு பத்து வருஷ லாபத்தாலும் அங்கு சிறிது மனனம் செய்துகொண்ட 'வாகட சாஸ்திரம்' 'போகர் இரு நூறு', 'கோரக்கர் மூலிகைச் சிந்தாமணி'

இவற்றின் பரிச்சயத்தாலும் உயர் திரு, மருதப்ப மருத்துவரைாகி, அழகிய நம்பியாபுரத்தில் வந்து குடியேறினன்.

இவ்விருவரும் இவ்வூருக்கு ஒரே சமயத்தில் படையெடுத்தது தற்செயலாக ஏற்பட்ட சம்பவம். ஆனல், அழகியநம்பியா புரத்தில் இவர்கள் வருகைக் கப்புறம் ஒரு மறைமுகமான மாறுதல் ஏற்பட்டது.

ஸ்ரீ. விசுவநாத பிள்ளை சாதாரண வேளாளர் வகுப்பில் பிறந்து, வைத்தியத் தொழில் நல்ல லாபம் தரும் என்ற நம்பிக்கையில், வாலிப காலத்தில் அதில் ஈடுபட்டார். அந்தக்காலத்தில் வைத்தியக்கல்வி படிக்க வருகிறவர்களுக்கு 'ஸ்டைப்பன்ட்' (உபகாரச் சம்பளம்) கொடுத்ததும் இவருக்கு இந்தத் தொழிலில் ஆசை விழ ஒரு தூண்டுகோல் என்று சொல்லவேண்டும். மேலும், அக்காலத்தில் சர்க்கார் உத்தியோகம் கைமேலே. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் வெள்ளைக்கார வைத்திய சாஸ்திரம் இவ்வளவு பிரமாத அபிவிருத்தி அடையவில்லை. உளுத்துப்போன அந்த 'மெடீரியா மெடிகா'வும் சீமையிலிருந்து தளும்பி வழிந்த வைத்திய சாஸ்திரமுமே இந்திய விதேசி வைத்திய சாலை 'வடிகால்களில்' ஓடின. ஆகையால், பாஸ் செய்வதற்கும், உத்தியோகம் பார்ப்பதற்கும் அவ்வளவாகச் சிரமமில்லாதிருந்தது. மேலும் வெள்ளைக்காரர்கள் தங்கள் வைத்திய சாஸ்திரத்தைப் பிரசாரம் செய்வதிலேயே ஊக்கங் கொண்டிருந்தனர்.

ஸ்ரீ. விசுவநாத பிள்ளை படித்துத் தேறி, பணம் சம்பாதித்தது ஒரு பெரிய வசன காவியம்; அதற்கு இங்கு இடமில்லை. ஆனல், அந்தப் 'பிணமறுக்கும் தொழில்' அவரை நாஸ்திகராக்கி விடவில்லை. அவருக்கு 'மெடீரியா மெடிகா'வில் எவ்வளவு அபார நம்பிக்கையோ,

அவ்வளவு, சைவ சித்தாந்த நூல்களிலும் உண்டு. சிவ ஞான போதச் சிற்றுரையும் 'ஸ்டெதாஸகோப்'பும், உத்தி யோக காலத்தில் அபேதமாக இடம்பெற்றன. மேலும் திருநீறு முதலிய புறச் சின்னங்களின் உபயோகத்தை யும் அவர் நன்கறிந்தவர்.

ஸ்ரீ. விசுவநாத பிள்ளை பொதுவாக நல்ல மனுஷ்யர். நாலு பெயரிடம் சுமுகமாகப் பேசிப் பழகக் கூடியவர். எடுப்பு, மாஜி சர்க்கார் உத்தியோகஸ்தர் என்ற மிடுக்கு, ஒன்றும் கிடையாது.

பிள்ளையவர்களின் குடும்பம் விசாலமானதன்று. பெரிய கட்டுக்கோப்பில் தம் வம்சம் விருத்தியாகி லோகத்தின் அஷ்ட திக்கிலும் சென்று ஜயக்கொடி நாட்ட வேண்டும் என்று ஆசை கொள்ளாதவர் என் பதை அவருடைய ஏகபுத்திரன் மிஸ்டர் கிருஷ்ணசாமி நிரூபித்தான். ஸ்ரீமதி விசுவநாத பிள்ளை—அதாவது 'சாலாச்சியம்மா' (விசாலாட்சியம்மாள்), நிரந்தரமாக, பிள்ளையவர்களின் சலித்துப்போன வைத்தியத்திற்கும் மீறிய வயிற்று சம்பந்தமான வியாதி உடையவள் என் பதை மத்தியானத்தில் மட்டிலும் அருந்தும் கேப்பைக் கஞ்சி எடுத்துக் காட்டுகிறது. சாலாச்சியம்மாள், பழைய காலத்து வேளாளக்குடும்ப நாகரிகத்து மோஸ்தர்படி, பின் கொசுவம் வைத்துக் கட்டிய உடையுடனும், கழுத்து காதணிகளுடனும் வீடு நிறைந்து காட்சி யளிப்பாள்.

மிஸ்டர் கிருஷ்ணசாமி அப்பாவின் வற்புறுத்தலுக் காகப் பட்டணத்தில், வைத்தியப் படிப்பில் தகப்பனார் சென்ற பாதையில் நம்பிக்கைகொள்ள முயலுகிறான்.

உயர் திரு. மருதப்ப மருத்துவனார் வாழ்க்கை இதே வீதியில் செல்லவில்லை. மேடு பள்ளங்களைக் கண்டது.

தலை நரைக்கும்வரை உழைப்பில் காய்த்துப்போன கை, காசு பணத்தை நிறையக் காணவில்லை.

அநுபவத்தின் கொடூரமான அல்லது இன்பகரமான சாயை விழாத, நம்பிக்கையும் நேசப்பான்மையும் நிறைந்த வாலிபப் பருவத்தில் குடிமகன் மருதப்பன் தூத்துக்குடியில் கொழும்புக்குக் கப்பலேறினன். திருநெல்வேலித் தாழ்த்தப்பட்ட வகுப்புக்களிடை, கொழும்பு என்றால் இலங்கையின் ரப்பர், தேயிலைத் தோட்டங்கள் என்று தான் பொருள். உயர்ந்த வேளாள வகுப்புக்களிடையே தான் கோட்டைப்பகுதி மண்டி வியாபாரம் என்ற அர்த்தம். மருதப்பன் நம்பிக்கையும் மேற்சொன்ன விதத்தில் தான்.

நூரளைத் தோட்டத் துரைகளுக்கும், உயர்தரத் தோட்ட உத்தியோகஸ்தர்களுக்கும் க்ஷவரத் தொழில் செய்து, கைநிறையக் கொடுத்த பக்ஷிஸ், சம்பளம், உணவு இவற்றுடன், இடையிடையே தொல்லைப்படுத்திய மலைக்காய்ச்சலும் பெற்று, கடைசியாகத் தன் முப்பதாவது வயதில் கொழும்பில் ஸலூன் வைத்தான். அந்தக் காலத்தில் ஸலூன் தொழிலில் அவ்வளவு போட்டி கிடையாது. இந்தியாக்காரர்கள் அவனுக்கு ஆதரவு அளித்தனர். தொழில் வளர்ந்தது. எப்பொழுதோ ஒரு முறை செய்த அவனுடைய இந்தியப் படையெடுப்பும் கலியாணமும் இடையிடையே நடைபெற்ற சம்பவங்கள்.

ஸலூன் முயற்சியில் நல்ல பலன் ஏற்பட்டதோடு சித்த வைத்திய சாஸ்திரத்தில் சிறிதளவு பரிச்சயம் பெற்றுக்கொள்ள அவகாசமும் கிடைத்தது. இதனுடன் சமீபகாலமாக, இலங்கை மருத்துவகுல அன்பர்களின் சர்ச்சைகளின் மூலஸ்தானமாக விளங்கும், இலங்கைத்

தினசரி ஒன்றும் அவன் மன விசாலத்திற்கு உற்ற துணை யாக இருந்தது.

மருத்துவனுர், தம் ஐம்பதாவது வயதில், தாய் நாடு திரும்பும் இலங்கைக் குடியேற்ற விருதுகளுடன், திருநெல்வேலி ரயில்வே ஸ்டேஷனில் இறங்கிய பொழுது, கையில் ரொக்கமாக ரூபாய் ஐயாயிரமும் மேற்கொண்டு அழகிய நம்பியாபுரத்தில் மூன்று கோட்டை நன்செய்யும், கொழும்பு ஸலூனில் வாரிசாக அவர் புத்திரனும் உண்டு.

அழகியநம்பியா புரத்திற்கு பஸ் வந்துவிட்டது என்பதற்கு ரஸ்தாவின் இடப்பக்கத்துப் புளியமரத்தடியில் இருக்கும் எட்டாவது மைல் கல், அதற்குப் பக்கத்தில் உள்ள வயிரவன் பிள்ளை வெற்றிலை பாக்குக் கடை, டாக்டர் விசுவநாத பிள்ளையின் நந்தவனம் என்ற புன்செய்த் தோப்பின் மூங்கில் கேட், இவை எல்லாவற்றிற்கும் எதிராக இருக்கும் மருதப்ப மருத்துவரின் இரண்டடுக்குக் காறை வீடு—யாவும் பறை சாற்றினுற்போல் அறிவிக்கும்.

ரஸ்தாவில் இரு புறமும் மிகவும் நெருக்கமாக வளர்ந்த புளியமரங்கள்; பஸ் நிற்கும் ஸ்தானம், எப்போதோ ஒரு காலத்தில் நிறுத்தி வைக்கப் பட்ட சுமை தாங்கிக் கல்; அதன் குறுக்குக் கல் யதாஸ்தானத்தை விட்டுக் கீழே விழுந்து எத்தனை காலமாயிற்றே! பொதுவாக, நம்மில் பலர் தம்மை எந்த ஹோதாவில் ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிருர்களோ, அதே உரிமையில் அதற்குச் சுமைதாங்கி என்ற பெயர் கிடைத்திருக்கிறது.

நேரம் நல்ல உச்சி வெய்யில். ஆனாலும், சாலையில் இம்மிகூடச் சூரிய வெளிச்சம் கிடையாது. பலசரக்குக் கடைச் சுப்புப்பிள்ளை பட்டறையில் உட்கார்ந்து, சுடலை

மாடன் வில்லுப் பாட்டுப் புஸ்தகம் ஒன்றை ரஸமாக உரக்கப்பாடி, கடைச் சாய்ப்பின் கீழ் துண்டை விரித்து முழங்காலைக் கட்டி உட்கார்ந்திருக்கும் இரண்டொரு தேவமாரை (மறவர்) மகிழ்வித்துக் கொண்டிருக்கிறார். தம்பலத்தால் வாயில் எச்சில் ஊற்று நிறைய நிறைய, வாசிப்புக்கு இடையூறு ஏற்படாதபடியும், கீழே உட்கார்ந்திருப்பவர்மீது சிறிதும் தெறிக்காதபடியும் லாகவமாகத் தலையை வெளியே நீட்டி அவர் துப்பும்போது, கடையின் பக்கத்துச் சுவரில் துப்பாமலிருப்பதற்கு நீண்டநாள் அநுபவம் மட்டும் போதாது; அதற்குத் தனித் திறமையும் வேண்டும். ஆனால் சுப்புப் பிள்ளையின் தனித் திறமை கேட்டிருக்கும் மறவர் கண்களில் படவில்லை. உலகத்தில் புகழையும் பெருமையையும் சமாதி கட்டித்தானே வழிபடுகிறார்கள்! அழகிய நம்பியாபுர மறவர்களுக்கும் இந்தத் தத்துவ இரகசியம் தெரிந்திருந்தது என்றால், அவர்களைப் பற்றி மனிதர்கள் என்று நம்பிக்கை கொள்ளாமல் வேறு என்ன செய்வது?

**"மலையாளம் போனியானு, ஏ சுடலே!**
**நீ மாறி வரப்போரதில்லே!——"**

என்று இழுத்தார் பிள்ளை.

"ஆமாமிய்யா! மலையாளத்திலே அந்தக் காலந் தொட்டே கொறளி வேலைக்காரனுவ இருக்கானுவளா?" என்றான் பலவேசத்தேவன் என்ற அநுபவமில்லாத இளங்காளை. அவனுடைய முறுக்கேறிய சதை அவன் வேலை செய்கையில் உருண்டு நெளிவதைச் சாப்பாடில்லாமலே பார்த்துக் கொண்டிருக்கலாம். அவன் தலையாரித் தேவனின் மகன்.

"நீ என்னலே சொல்லுதே? அந்தக் காலத்துலே தான் இந்த வித்தை பெரவலம். சொடலையையே சிமிளிலே வச்சு அடச்சுப்பிட்டானுவன்னு பார்த்துக்

கிடேன்!" என்றான் வேலாண்டி. அவன் ஒரு கொண்டையன் கோட்டையான் (மறவர்களுக்குள் ஒரு கிளை). வயது விவேகத்தைக் குறித்து, நரைத்த தலை அந்தஸ்தைக் கொடுத்தது ; ஆனால் உடல் கட்டு அநுபவமற்ற இளங் காளைகளின் கட்டு மாறாமல் இருந்தது. வாரத்திற்கு நிலத்தைக் குத்தகை எடுத்து, அதில் ஜீவிக்க முயலும் நம்பிக்கையின் அவதாரமான தமிழ் நாட்டு விவசாயிகளில் அவன் ஒருவன். இடுப்பில் வெட்டரிவாள் ஒன்று வைத்திருப்பான். அதன் உபயோகம் விறகு தறிப்பது மட்டுமல்ல என்று தெரிந்தவர்கள் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் நாணயஸ்தன்; பொய் சொல்லுவது மறக் குலத்தோர்க்கு அடுக்காது என்று பழக்கத்திலும் அப்படியே நடப்பவன்.

இந்த இடைப் பேச்சைக்கேட்ட சுப்புப்பிள்ளை, கண்ணில் போட்டிருந்த பித்தளைக் கண்ணாடியை நெற்றிக்கு உயர்த்தி, சிறிது அண்ணாந்து பார்த்து, " அட்டமா சித்தியும் அங்கேயிருந்துதான் வந்திருக்கிறது. புராணத்திலேயே தான் சொல்லி யிருக்கே!" என்று ஒரு போடு போட்டார்.

இப்படிப்பட்ட விஷயங்களில் சுப்புப் பிள்ளையின் தீர்ப்புக்கு அப்பீலே கிடையாது ; ஏனெனில், பெரும்பாலும் அழகிய நம்பியாபுர வாசிகளில் பலர் அவரிடமே குட்டுப்பட்டுச் சுவடிப் பாடம் கற்றிருக்கின்றனர். பல வேசமும் இதற்கு விதிவிலக்கல்ல. இப்பொழுது அவன் கோணல் மாணலாகக் கையெழுத்துப் போடுவதெல்லாம் அவர் புண்ணியத்தில் தான்.

" நம்மவூர்லே இருந்தானே கள்ளப்பிரான் பிள்ளை, கட்டேலே போவான், அவன் வேலெ மானத்தைப் பாத்திரச் சாமான் விக்கிறவன் தடுக்காட்டி... நானே நேரிலே கண்டேனே ! நம்ம வைத்தியர்வாளுக்குந்தான் தெரி

யும் !" என்று தலையை எதிர் வாடையை நோக்கி நிமிர்த்தி ஆட்டினார் சுப்புப் பிள்ளை.

சம்பத்துக் காரணமாக ஜாதி வித்தியாச மனப்பான்மையைச் சிறிது தளர்த்தி, ஒரு விதத்திலும் பட்டுக்கொள்ளாமல், 'வைத்தியர்வாள்' என்று மருதப்ப மருத்துவரை அழைப்பது அவரது சமீபத்திய சம்பிரதாயம்.

'வைத்தியர்வாள்' இச்சந்தர்ப்பத்தில் வீட்டு முற்றத்தில் ஏதோ பச்சிலைகளை ஸ்புடமிட்டு முகம் வியர்க்க ஊதிக் கருக்கிக் கொண்டிருந்தார். ஆனால் அவரது பாம்புச் செவியில் சம்பாஷணை அரை குறையாக விழுந்தது. முகத்தைத் துடைத்துக் கொண்டே நிமிர்ந்து மருத்துவனார், "பிள்ளையவாள், என்ன சொல்லுதிஹ ?" என்று அங்கிருந்தே குரல் கொடுத்தார்.

"என்ன ! நம்ம கள்ளப் பிரான்பிள்ளை இருந்தானே ......................அவனைத்தான் பத்திச் சொல்லிக்கிட்டு இருந்தேன்........அவனைப் பத்தித்தான் உங்களுக்கு நல்லாத் தெரியுமே........" என்று கடையிலிருந்தபடி குரலெழுப்பினார்.

உடலைத் துடைத்துக்கொண்டு வேஷ்டியை உதறிக் கட்டிய வண்ணம் கடையை நோக்கி நடக்கலானார் வைத்தியர்.

2

அப்பொழுது தூரத்தில் மோட்டார் ஹார்ன் சப்தம் கேட்டது.

" ஏது மணியும் ஒண்ணாயிட்டுது போலிருக்கே. அன்னா கேக்கது மெயில் பஸ்தானே ! பிள்ளைவாள் தானம் (ஸ்நானம்) பண்ணியாச்சா ? வரியளா,—செல்

னுமா?" என்றார் சாய்ப்புக் கம்பைப் பிடித்து நின்ற வைத்தியர்.

"போகத்தான். ஏலே! ஐயா பலவேசம், கடையெச் சித்தே பாத்துக்கிட மாட்டியா?" என்று பஸ் வரும் திக்கை நோக்கினார். மெயில் பஸ் என்றும் மத்தியானம் ஒரு மணிக்கு அழகியநம்பியா புரத்தைத் தாண்டிச் செல்வது ஒரு விசேஷமான சம்பவம். கடைப்பிள்ளைக்குத் திருநெல்வேலி டவுனிலிருந்து ஏதாவது சாமான் வரும். டாக்டர் விசுவநாத பிள்ளை (வகுப்புவாரிப் பிரதிநிதித் துவம், சைவத்தின் உயர்வு, ஆரியர் சூழ்ச்சி இத்தியாதி விஷயங்களில் நம்பிக்கைகொண்ட ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர் தான், ஆனாலும்....) அவர்களுக்கு 'ஹிந்து' பத்திரிகைகளும்; சமயா சமயங்களில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் வரக்கூடிய தொலைப் பிரயாணிகள் வருவார்கள்.

இரண்டொரு நிமிஷத்தில் பஸ் வந்து ஏக ஆர்ப்பாட்டமாகக் காய்ந்த சருகுகளை வாரி வாரி இறைத்துக் கொண்டு சுமைதாங்கி முன் நின்றது.

பஸ் டாப்பில் இருந்த கடைச்சரக்கை உருட்டித் தள்ள கண்டக்டர் டாப்பில் ஏறினான். டிரைவர்-ஐயா பீடி பற்றவைக்க இறங்கிக் கடைப்பக்கம் வந்தார். இவ்வளவு நேரமாக வாமனாவதாரமெடுத்துக் கால்களைச் சுருட்டிக் கிடந்த பிரயாணிகளில் இரண்டொருவர் கீழே இறங்கினார்கள்.

முன்புறம் க்ஷவரம்; பின்புறம் பின்னல்; ஈய வளையம் இழுத்துத் தோளோடு ஊசலாடும் காது, இடையில் வேஷ்டியாகக் கட்டிய பழைய கிழிந்த கண்டாங்கிச் சேலை—இக்கோலத்தில் இடுப்பில் சாணிக்கூடை ஏந்திய இரண்டொரு பறைச் சிறுமிகள் எட்டி நின்று கார் விநோதத்தைப் பார்த்தனர்.

கடைச் சரக்கை மேலிருந்தபடியே எறிந்த கண்டக்டர், “ஸார், ஷூட்கேஸ் பெட்ஷீட் வேங்கிக்கிடுங்க” என்று குரலெடுத்தான்.

டிரைவர் பக்கத்தில் இருக்கும் 'பஸ் ஒண்ணுங்கிளா' ஸிலிருந்து கையில் வதங்கிப்போன பத்திரிகை ஒன்றைப் பிடித்துக்கொண்டு, ஒரு 'மோஸ்தர்' வாலிபன் நாஸூக்காக இறங்கினன். அவனது “சென்னை பிராட்வே” பாஷன்பிளேட் மூஞ்சியும், விதேசி மோஸ்தர் உடையும் யதாஸ்தானத்தை விட்டகன்ற மூலவர் போன்ற ஒரு விசித்திர சோபையை அவனுக்கு அளித்தன. அந்தக் காட்டுமிராண்டி ரஸ்தாவில் அந்தப் பழைய பசலி பஸ் எப்படியோ அப்படி, லண்டனில் பழசானலும், சென்னையின் நிகழ்காலமான அவனது உடை மோஸ்தர், அந்தக் கி. மு. உலகத்தில் அவனை வருங்கால நாகரிகனக்கியது.

“எடே! தெரஸரய்யா மவன்லா வந்திருக்காவ!” என்று சொல்லிக்கொண்டே ஓடினன் பலவேசம் பெட்டியை இறக்க.

மாஜி உத்தியோகஸ்தர் மகன் என்ருல் கிராமத்தில் எப்பொழுதும் ஓர் அந்தஸ்து உண்டே! அதைக் கொடுத்தனர் கடையில் பொழுது போக்க முயன்ற நபர்கள்.

“அதாரது?” என்று பொதுவாகக் கேட்டான் வேலாண்டி, கையைத் தரையில் ஊன்றி எழுந்திருக்க முயன்றுகொண்டு.

“என்னப்பா இன்னந் தெரியலியா? நம்ம மேலவீட்டு தெரஸர் பிள்ளை இருக்காஹள்லா—அவாள் மகன் மகராச பிள்ளை!—என்னய்யா சௌக்கியமா?” என்று

கடைப் பட்டறையிலிருந்தபடியே விசாரித்தார் சுப்புப் பிள்ளை.

மகராசன் அவர் திசையைப் பார்த்துச் சிரித்தான்.

"என்ன எசமான் சவுக்கியமா,—அங்கே பட்டணத் திலே மளெ உண்டுமா ?—ஐயா, உடம்பு முந்தி பாத்த மாறுதியே இரிக்கியளே ! —" என்றான் வேலாண்டி.

பீடியை இரண்டு தம் இழுத்து எறிந்துவிட்டு வெற்றிலை போட்டுக்கொண்ட டிரைவர், ஸீட்டில் உட்கார்ந்துகொண்டு, 'வண்டி புறப்படப் போகிறது பிரயாணிகள் ஏறிக்கொள்க' என்ற பாவனையில் ஹார்ன் அடித்தான். கண்டக்டர் அப்பொழுதுதான் தனக்கு ஞாபகம் வந்த 'ஹிந்து' பத்திரிகையை அவசர அவசர மாகக் கடைக்கு எடுத்து ஓடினான்.

தங்கள் தேக உபாதையை நீக்கிக்கொள்ளச் சென் றிருந்த பிரயாணிகள் அவசர அவசரமாக ஓடி வந்த னர். அதில் ஒரு முஸ்லிம் அன்பர், பார்வைக்குச் செய லுள்ளவர்போல் முகத்தில் களை இருந்தது.

அவர் முன் ஸீட்டைப் பிடித்துக்கொள்ளும் நோக் கத்துடன் அவசரமாக அதில் குறிவைத்து ஓடி வந்தார்.

இவ்வளவு கூட்டத்தையும் கவலையின்றிக் கவனித் துக்கொண்டிருந்த மருத்துவர், "என்ன மரைக்காயர் வாளா ? ஏது இப்படி ?" என்று முகமலர்ந்து குசலப் பிரச்னம் செய்தார்.

மரைக்காயர்வாள் செவியில், அவர் ஸீட்டைப் பிடித்து மேல் துண்டைப் போட்டு ஏறி உட்காரும்வரை அது ஏறவில்லை. ஏறி உட்கார்ந்து, வெளிக் கம்பியைப் பிடித்து உடலை முறுக்கிக்கொண்டு, தலையணை ஒரு புறம்

சரிய, "வைத்தியர்வாள்! வரவேணும், ஒரு அவசரம் ஒரு நிமிட்!" என்ருர்.

மருதப்ப மருத்துவனர் முகம் மலர்ந்தது. "ஏது மரைக்காயர்வாள், எங்கே இப்படி?" என்று சொல்லிக் கொண்டே பஸ் அருகில் ஓடினர்.

"நம்ம மம்முது கொளும்புக்குப் போரான் இல்லெ; டவுன் இஸ்டேஷன் வரை கொண்டுபோயி வளியனுப்பிப்புட்டு வருதேன். வாவன்ன கோன இருக்காஹள்லா, அவுஹ அளெச்சுக்கிட்டுப் போரதாவச் சொன்னஹ; அதிரியட்டும், நமக்கு ஒரு லேஹியஞ் செஞ்சு தாரதாவ சொன்னிஹள்லா? அதெத்தாங் கொஞ்சம் காபகப்படுத்தலாமிண்டுதான்........இம்பிட்டுத் தான்....நீங்க வண்டியெ விடுங்க—சலாம்!" என்று அவர் பேச இடங்கொடாமல் காரியத்தை முடித்துக் கொண்டார் மாப்பிள்ளை மரைக்காயர்.

"சதி, சதி!" என்று சொல்லிக்கொண்டே பின் தங்கினர் மருத்துவனர். வண்டி புகை யிரைச்சலோடு கிளம்பியது.

"பிள்ளைவாள்! என்ன வாரியளா?" என்று துண்டை உதறிவிட்டுத் தோளில் போட்டுக்கொண்டார் மருத்துவனர்.

"வாரியளா வைக்கச்சண்டா?"என்று முணுமுணுத்துக்கொண்டே பட்டறையை விட்டு இறங்கினர் சுப்புப் பிள்ளை.

இதுவரை பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு சிகரட் பிடித்து நின்றது அலங்காரப் பொம்மை.

"நான் சின்ன எசமாஞ் சாமானெ எடுத்துக்கிட்டுப் போகுதேன், ஐயா, கடயே பார்த்துக்கலே பலவேசம்—

வாங்க எசமான் !" என்று, மேல் துண்டுச் சும்மாட்டில் படுக்கையையும், தோல்பெட்டி ஒன்றையும் தூக்கிக் கொண்டு முன்னே நடந்தான் வேலாண்டி.

வைத்தியரும் கடைக்காரப் பிள்ளையும், டாக்டர் விசுவநாத பிள்ளை தோட்டத்திற்குள், மூங்கில் கதவைத் தள்ளிவிட்டு மறைந்தனர்.

சாலையில் முன்போல உயிரற்ற அமைதி. சுள்ளி பொறுக்கும் சிறுமிகள்கூட மறைந்து விட்டனர்.

3

**டா**க்டர் விசுவநாத பிள்ளையின் தோட்டம், வெய்யிலுக்கு உகந்தது. வியர்க்க விருவிருக்கச் சுற்றி யலைகிறவர்களுக்கு வேப்ப நிழலுக்கும், எலுமிச்சைக் காட்டுக்கும் மத்தியில் கட்டப்பட்டிருக்கும் சவுக்கை பூலோக சுவர்க்கம். சாப்பாட்டு நேரங்களைத் தவிர மற் றப் பொழுதைப் பிள்ளையவர்கள் சவுக்கையிலேயே மெய் கண்ட சிவாச்சாரியார் உறவிலேயே கழிப்பார். மத்தி யானப் பொழுதில் 'ஹிந்துப்' பத்திரிகையோடு சம்பந்தம்.

இருபக்கமும் நந்தியாவட்டையும் அரளியும் செறிந்த பாதை வழியில், வைத்தியருடன் சென்ற கடைக்காரப் பிள்ளை, "ஐயா! என்ன இருக்கியளா? மஹாராசன் வந்திருக்கான் போலிருக்கே !" என்று குரல் கொடுத்தார்.

சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த பிள்ளை எழுந்து, குனிந்த வண்ணம் மூக்குக் கண்ணாடியின் மேல்வழியாகப் பார்வையைச் செலுத்தி, "லீவு—வாரதாக எழுதி யிருந் தான்,—எங்கே ?—" என்று கேட்டுக்கொண்டே அந்தஸ் தாக எழுந்திருந்தார்.

"வேலாண்டி வீட்டுக்கு அளச்சுக்கிட்டுப் போனுன். இந்தாருங்க உங்க பேப்பர் !....சண்டை எப்பிடியிருக்கு ?" என்று பதில் எதிர்பார்க்காமலே மருத்துவரைத்தொடர்ந்தார் பிள்ளை.

சிறிது நேரத்தில் பிள்ளை மூங்கில் கதவை அடைத்துக்கொண்டு போகும் சப்தம் கேட்டது.

விசுவநாத பிள்ளை தோட்டத்துக் கமலைக் கிணறு குளிக்க மிகவும் வசதியுள்ளது. கல் தொட்டியில் தண்ணீரை இரைத்து விட்டுவிட்டு நாள் பூராவும் குளித்துக் கொண்டிருக்கலாம்.

சுப்புப் பிள்ளை தலையில் துண்டைக் கட்டிக்கொண்டு துலாக் கல்லில் காலை வைத்து நின்று, வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டார்.

மருத்துவர், தொட்டியில் பாதியளவு கிடந்த தண்ணீரைத் திறந்துவிட்டுத் தொட்டியைக் கழுவ ஆரம்தார்.

"ஐயா, ஒங்ககிட்ட ஒரு சமுசாரமிலா கேக்கணுமின்னு இருக்கேன்.......நம்ம கொளத்தடி வயவிருக்கே முக்குருணி வீசம், அது வெலைக்கி வந்திருக்கதாவப் பேச்சு ஊசலாடுது ; அதான் நம்ம பண்ணையப்ப பிள்ளைவாள் வரப்புக்கு மேக்கே இருக்கே ; அதான்... நம்ம மூக்கம் பய அண்ணைக்கு வந்தான். ஒரு மாதிரி பேசருன். வாங்கிப்போட்டா நம்மது ஒரு வளைவா அமஞ்சு போகுதேன்னு நெனைச்சென்—நீங்க என்ன சொல்லுதிய ?"

"உஸ்" என்றபடி முதல் வாளித் தண்ணீரைத் தொட்டியில் ஊற்றிவிட்டு, கிணற்றுக்குள் மறுபடியும் வாளியை இறக்கினுர் சுப்புப் பிள்ளை. வாளியில் தண்ணீர் நிறைந்தது. நிமிர்ந்து வைத்தியரைப் பார்த்தார்.

"வே! ஓமக்கு என்னத்துக்கு இந்தப் பெரிய எடத்துப் பொல்லாப்பு? அது பெரிய எடத்துக் காரியம்.. மூக்கம்பய படுத்பாட்டெப் பாக்கலியா! பண்ணையார் வாள் தான் கண்லே வெரலெ விட்டு ஆட்ராகளே! ஒரு வேளை அது மேலே அவுகளுக்குக் கண்ணுருக்கும்—சவத்தெ விட்டுத்தள்ளும்!"

"என்னய்யா, அவுகளுக்குப் பணமிருந்தா அவுஹ மட்டோடே; அவுக பண்ணையார்ன்ன கொடிகட்டிப் பறக்குதா? அதெத்தான் பார்த்து விட்ரணும்லா! நான் அதுக்கு அஞ்சுனவனில்லெ.. நாளெக்கே முடிக்கேன்—என்னதான் வருது பாப்பமே!" என்று படபடத்தார் மருதப்பனர்.

"என்னமோ நாஞ் சொல்லுதெதச் சொன்னேன் உம்ம இஷ்டம்" என்றார் பிள்ளை.

## 4

அன்று மாலை; பொழுது மயங்கிவிட்டது. மேல் வானத்துச் சிவப்புச் சோதியும், பகல் முழுவதும் அடங்கிக்கிடந்து மாலையில் 'பரப்பரப்' என்று ஓலை மடல்களில் சலசலக்கும் காற்றுந்தான் சூரியன் வேலை ஓய்ந்ததைக் குறிக்கின்றன.

குளக்கரைக்கு (ஏரிக்கரை) மேல் போகும் ரஸ்தாவில், முண்டாசு கட்டிக்கொண்டு, கையில் இரண்டொரு பனைமடல்களைப் பிடித்தவண்ணம் நடந்து வருகிறார் சுப்புப் பிள்ளை.

குளத்துக்குக் கீழ்புறமிருந்து ரஸ்தாவுக்கு ஏறும் இரட்டை மாட்டு வண்டித் தடத்தின் வழியாக, வண்டிக்காரனுடைய தடபுடல் மிடுக்குகளுடன், மாட்டுச் சலங்கைகள் கலந்து புரள, குத்துக்கல்லில் சக்கரம்

உராயும் சப்தத்துடன் ஒரு இரட்டைமாட்டு வண்டி மேட்டிலிருந்து ரஸ்தாவில் ஏறிற்று.

மங்கிய இருளானாலும், தொப்ளான் குரல், பண்ணையார் வண்டிதான் என்பதை நிச்சயப்படுத்தியது.

சாலையில் ஒதுங்கி நின்ற சுப்புப்பிள்ளை, "என்ன அண்ணாச்சி, இந்த இருட்லெ எங்கே போயிட்டு வாரிய?" என்று குரல் கொடுத்தார்.

வண்டியுள் திண்டில் சாய்ந்திருந்த பண்ணையார் சிதம்பரம் பிள்ளை, "ஏடெ வண்டியை நிறுத்திக்க," என்று உத்தரவிட, வண்டி சற்று தூரம் சென்று நின்றது.

பிள்ளையவர்கள், உள்ளிருந்த செருப்பை ரஸ்தாவில் போட்டுவிட்டு, மெதுவாக அதில் காலை வைத்து இறங்கினார்.

"கீளநத்தம் மேயன்ன இருக்காஹள்லா......."

"ஆமாம் நம்ம நாவன்ன கோனவோட மச்சினப் பிள்ளை......"

"அவுஹதான்......அவுஹளொட சமுசாரத்தோட ஒடப்பிறந்தாளெ மருந்தூர்லே குடுத்திருந்தது—அவ 'செல்லா' யிப்போன...பதினறு, போயிட்டு வாரேன்!"

"மதினி போகலியா......?"

"அவ வராமெ இருப்பாளா; கூடத்தான் வந்தா; அங்கே ஆள் சகாயம் ஒண்ணுமில்லெ—இருந்துட்டு வாரனேன்ன....விட்டுட்டு வந்திருக்கேன்; இப்போ அவ இங்கே சும்மதானெ இருக்கா......." என்றார்.

"ஆமாம், அதுக்கென்ன!.......வயசென்ன இருக்கும்?" என்றார் சுப்புப்பிள்ளை மீண்டும்.

"வயசு அப்படி ஒண்ணும் ஆகலெ;—முப்பது இருக்கும் !" என்றார்.

"புள்ளெக ஏதும் உண்டுமா?....சரி, அதிருக்கட்டும் அண்ணாச்சி, ஒங்ககிட்ட ஒரு சமுசாரம்லா சொல்லணும்னு நெனச்சேன். ஏங் காதுலே ஒரு சொல் விழுந்தது. ஒங்களுக்கு அதெத் தெரிவியாமே இருந்தா, ஞாயமில்லே !" என்றார்.

பணத்திற்கு ஏதோ அடிபோடுகிறாரோ என்று பயந்த பண்ணையார், " ஏது, அனுட்டானமாச்சா" என்று கேட்டுக்கொண்டே குளத்தினுள் இறங்கினார்.

கரைச் சரிவில் செருப்பை விட்டுவிட்டுத் தண்ணீருள் இறங்கிய பண்ணையார், பலத்த உறுமல்கள், ஓங்காரங்கள் முழங்க, கால் முகம் கழுவ ஆரம்பித்தார்.

முன்பே தம் மாலைப் பூஜை விவகாரங்களை ஒரு மாதிரி முடிவுகட்டிய சுப்புப் பிள்ளை, வேஷ்டி துவைக்கும் கல்லில் அமைதியாக உட்கார்ந்து காரியம் முடியட்டும் என்று எதிர்பார்த்திருந்தார்.

திருநீறிட்டு, திருமுருகாற்றுப் படையையும் திருவாசகத்தில் இரண்டொரு செய்யுட்களையும் மனனம் செய்துவிட்டு, "சிவா!" என்ற குரலெழுப்பிக் கரையேறினார் பண்ணையார்.

"நம்ம மருதப்பன் இருக்கான் இல்லியா, பய கொளும்புலே ரெண்டு காசு சம்பாரிச்சிட்டான்னு மண்டெக் கருவம் தலெ சுத்தியாடுது. இண்ணக்கி புதிய தெரஸா பிள்ளெவாள் கெணத்துலே குளிச்சுக்கிட்டுருக்கப்பச் சொல்லுதான், 'பண்ணயப் பணம்ணு அவுகமட்டோட, ஊரெல்லாம் என்ன பாவட்டா கட்டிப் பறக்குதா?' என்று. உங்களெ ஒரு கை பாத்துப்பிட்டுத்தான் விடுவானும்; பாருங்க ஊரு போரபோக்கை!"

"சவம் கொலேச்சா கொலேச்சுட்டுப் போகுது! அவர் இப்ப மருத்துவர்லா! அப்படித்தான் இருக்கும்,—எதுக் காம் இவ்வளவும்?"

"ஓங்க வயக்காட்டுப் பக்கம் முக்குருணி வீசம் இருக் குல்லா,—நம்ப மூக்கன் பய நெலம், அதுக்குத்தான் இம் புட்டும். வாங்கப்போரேன்னு வீரியம் பேசுதான்."

"மூக்கப்பய நெலமா?...எங்கிட்டல்லா கால்லெ விழுந்து கெஞ்சிட்டுப் போனுன்; அந்த நன்னி கெட்ட நாய்க்கு ஒதவப்படா துன்னுதான், வெரட்டினேன். அவன் கால்லெபோய் விளுந்தாலுக்கும்! அதுலெ என்ன வீராப்பு?"

"ஒனக்கு எதுக்குடா அந்த நெலம், அதெ வாங்குத துலெ பிள்ளேவாளுக்குத்தானே சௌகரியம்னேன். அவ் வளவுதான். இந்த வூரு புள்ளெமாரே அப்படித்தானும்; எப்பவும் அடாபிடியாம்; அவன்கிட்ட காரியம் நடக்கா தாம்!"

"அப்பிடியா சேதி! ஏலே தொப்பளான், நாங்க நடந்து வருதோம்; வண்டியைக் கொண்டு போய் அவுத் துப் போட்டுப்புட்டு, எந்த ராத்திரியும் மூக்கன் பயலே கையோடே புடிச்சா!"

"நாம வாங்குதாப்லியே காம்பிச்சுக்கப்படாது; தெரஸர் பிள்ளேவாள் தான் வேணும்னுஹள்யா—அவுக பேரச் சொல்லி வைக்கது."

"அதெதுக்கு? கூட நாலு காசெ வீசினு போகுது. அந்த நாய்கிட்டெ பொய்யெதுக்கு?"

"இல்லெ அண்ணச்சி, உங்களுக்குத் தெரியாது; நான் சொல்லுதைக் கேளுங்க!"

"ராத்திரி கடை யடச்சம் பொரவு இப்படி வீட்டுக் குத்தான் வாருங்களேன், பேசிக்கிடலாம்!"

## 5

அப்பா! அம்மைக்கு என்ன உடம்பு அப்படியே இருக்கே; நீங்க கெவுனிக்கதிலே போல்ருக்கு!" என்றான் மகராஜன்.

எதிரிலிருந்த ஹரிக்கன் லைட்மீது ஒரு விட்டில் வந்து மோதியது. சிறிது மங்க ஆரம்பித்த திரியைத் தூண்டினான்.

"நம்ம கையிலே என்ன இருக்கு? இருவது வருஷமா குடுக்காத மருந்தா?" என்று மூக்குக் கண்ணாடியைக் கழற்றி விட்டுக் கண்களை நிமிண்டிய வண்ணம் கூறினார் விசுவநாத பிள்ளை.

"நீங்கள் பென்ஷன் வாங்கினதோட, வைத்தியமும் உங்ககிட்ட பென்ஷன் வாங்கிட்டுதா?—நீங்களே இப்பிடிப் பேசினா?"

"பேசுரதென்ன! உள்ளதத்தான் சொன்னேன். குடல் பலகீனப்பட்டுப் போச்சே! எது குடுத்தாலுந்தான் ஒடலோட ஒட்டமாட்டேங்குதே!"

"நான் ஒரு முறையைப் பிரயோகம் பண்ணிப் பார்க்கட்டுமா? இயற்கை வைத்தியம். முதல்லெ கொஞ்சம் பட்னி இருக்கணும்; அப்பொ ஒரு 'கிரைஸிஸ்' (வியாதி நிலையில் நெருக்கடி, கவலைக்கிடமான நிலை) ஏற்படும். அப்புறம் சிகிச்சையை ஆரம்பித்தால் பலனுண்டு."

"என்னடா நீ மெடிக்கல் ஸ்கூல்லெதானெ படிக்கிறே!—இயற்கை வைத்தியம் எங்கெ வந்துது? வீணாக் காலத்தைக் கழிச்சு பெயிலாப் போகாதே!"

"அதுக்கும் படிக்கத்தான் செய்யரேன். இந்த முறையிலெ எத்தனையோ பேருக்கு உடம்பு குணமாயிருக்கிறதே! நானே செய்திருக்கிறேனே!"

"சரி, பாரேன்! நாஞ வேண்டா முங்கேன்?"

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் சவுக்கைக்கு வெளியில், செருப்புச் சப்தம் கேட்டது. தொப்ளான் ஹரிக்கன் லைட்டோடு ஒதுங்கி நிற்க, பண்ணையார் வாளும் சுப்புப்பிள்ளையும், உள் வெளிச்சத்தில் பிரசன்னமாயினர்.

"அட, பண்ணையார்வாளா? ஏது இந்த இருட்லெ? இந்த நாக்காலியிலே உட்காரணும்; சுப்புபிள்ளை, நீங்க இந்த பெஞ்சிலே இப்டி இரியும். ஏது அகாலத்திலே?" என்று தடபுடல் காட்டி எழுந்து நின்றுர் விசுவநாத பிள்ளை.

"விசேசமென்ஞ! இப்படி வந்தேன்! ஒங்களெ எட்டிப்பார்த்துட்டுப் போகலாமெண்ணுதான் நொளெஞ்சேன். ஏது மாப்ளெ எப்ப வந்தாப்லெ? ரசாவா?" என்றுர் பண்ணையார். மகராஜனை மாப்பிள்ளை என்றழைப்பதில் அவருக்குப் பரமதிருப்தி.

"ஆமாம் கோடை அடைப்பு; மதியந்தான் வந்தான்; ராசா, நீதான் பிள்ளைவாள் கடையிலே போயி ஒரு பொகயிலெத் தடை வாங்கிட்டு வா" என்று வருகிறவர்களுக்காகத் தாம்பாளத்தில் வைத்திருக்கும் வெற்றிலையை அடுக்கிப் பண்ணையார் முன்பு வைத்தார்.

"நான் அப்பமே கடையடைச்சிட்டனே....!"

"எனக்கா இந்தச் சிருமம்? கடைப் போயிலெண்ணுத்தான் நமக்கு ஆகாதே. ஏலே தொப்ளான், செல்லத்தை வைய்யேன்லே! என்னலே முளிக்கே!" என்று சுப்பு-சிதம்பரம் பிள்ளை ஏக காலத்தில் பேசினர்கள்.

வெளியே புறப்பட்ட மகராஜன் மறுபடியும் தூணில் சாய்ந்து உட்கார்ந்தான்.

"சவுக்கேலயெ காத்தைக் காணமே, ஊருக்குள்ள பின்ன ஏன் வெந்து நீருகாது! அண்ணுச்சி இந்த வருசம் காய்ப்பு எப்படி?" என்று தலையை இருட்டில் நீட்டி எச்சிலைத் துப்பிக்கொண்டே கேட்டார் சிதம்பரம் பிள்ளை.

"காய்ப்பென்ன, பிரமாதமா ஒண்ணுமில்லெ—ஏதோ வீணுக் காயிர கெணத்துத் தண்ணி வேரடியிலே பாயிது......"

"இல்லெ, ஒரு பத்து முப்பது ரோசாக் கம்பு வச்சுத் தளுக்க வச்சா பிரயோசனமுண்டு—ஒரு பயலைப் போட்டாப் போகுது—" என்ருர் சிதம்பரம் பிள்ளை.

பேச்சில் சோர்வு தட்ட அவர் சுப்புப் பிள்ளையைப் பார்த்தார்.

"தெரவஸ் பிள்ளைவாள், ஒங்ககிட்ட ஒரு விசயமா கலந்துகிட்டுப் போகலாமுண்ணு வந்தேன்—ஐயாவும் வந்தாஹ—ஊர் விசயம்—தலை தெறிச்சுப்போய் அலயரான்கள் சில பயஹ—இப்பிடி வாருங்க......" என்று, எழுந்து விசுவநாத பிள்ளையை வெளியில் அழைத்துக் கொண்டு போனுர் சுப்புப் பிள்ளை.

"ஆமாம், ஆமாம், சரிதான்......வாங்குதவன்பாடு குடுக்கவன்பாடு, நமக்கென்ன?......அப்படியா! பிள்ளைவாளுக்கு எடையிலேயா வந்து விளுந்தான்......அப்பமே எனக்குத் தெரியுமே...காறை வீடு கட்டினு கண்ணவிஞ்சா போகும்?..." என்ற விசுவநாத பிள்ளையின் பேச்சுக்கள் இடைவிட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக விழுந்தன.

இருவரும் சில நிமிஷங்கழித்துச் சவுக்கைக்குள் ஏறினர்.

"என்ன!........" என்று சிரித்தார் பண்ணையப் பிள்ளை.

"இதுக்கு நீங்க எதுக்கு வரணும்? சொல்லிவிட்டா நான் வரமாட்டனு?...ராசா, நீ வீட்டுக்குப் போயி, கண்ணுடி அலமாரியிலே சாவிக் கொத்தை வச்சிட்டு வந்துட்டேன்......எடுத்தா......அப்பிடியே அம்மைக்கி அந்த டானிக்கை எடுத்துக் குடு......எல்லாம் நாளேலேயிருந்து ஒன் வயித்தியத்தெப் பார்க்கலாம்..." என, மேல் வேஷ்டியை எடுத்து உதறிப் போட்டுக்கொண்டு வெளியேறினுன் மகராஜன்.

"வீட்டுலே உடம்புக்கு எப்படி இருக்கு—தாவளேயா? ......நம்ம மாப்ளேக்கி இன்னம் எத்தனே வருசம் படிப்பாம்?......கால காலத்லெ கல்யாணத்தெ கிலியாணத்தெ முடிச்சுப்போட வேண்டாமா?......

"நானும் அப்பிடித்தான் நெனச்சேன். அடுத்த வருசத்தோட படிப்பு முடியிது...வார தை மாசம் நடத்திப் போட்டுறும்னு உத்தேசம். மூக்கம் பயலெ எங்கே இன்னம் காணம்?..." என்று வெளிக்குரலே எதிர்பார்த்துத் தலேயைச் சாய்த்தபடி கேட்டார்.

"சவத்துப்பய இப்பம் வருவான்...ராத்திரி பத்திரத்தை எழுதி முடிச்சுக்கிடுவோம். காலெலே டவுனுக்குப் போயி ரிஸ்தர் பண்ணிப் போடுதது. கூச்சல் ஓஞ்சப்பரம் பத்திரத்தெ எம்பேருக்கு மாத்திக்கலாம்......

"அது அவாளுக்குத் தெரியாதா?—காரியம் முடிஞ்சாப் போதும்..." என்ருர் சுப்புப் பிள்ளே.

## 6

நாலேந்து நாள் கழிந்து ஒரு நாள் மத்தியானம் நல்ல உச்சி வெயில் 'சுள்' என்று முதுகுத் தோலே உரிக்கிறது.

வயல் காட்டு வரப்புக்களில் படர்ந்து கிடக்கும், அவருக்கு மட்டும் தெரிந்த, சில மூலிகைப் பச்சிலைகளைக் கை நிறையப் பிடுங்கி வைத்துக்கொண்டு, குளக்கரை மேல் போகும் ரஸ்தாவில் ஏறி, மறுபுறம் செங்குத்தாக இறங்கும் கல்லடுக்கிய சரிவு வழியாக இறங்கி, மருத்துவ மருதப்பனார் பச்சிலைகளைக் குளத்திலிட்டு அலச ஆரம்பித்தார். தலையில் முக்காடாக அணிந்திருந்த துணி, விலகி விலகிக் குனிந்து வேலை செய்வதற்கு இடைஞ்சல் கொடுத்ததால், நிமிர்ந்து நின்று தலையில் கிடந்த துண்டை எடுத்து இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு, மறுபடியும் குனிந்தார்.

"வைத்தியரய்யா; என்ன, தெரஸர் பிள்ளைவாள் ராவோட ராவா மூக்கன் நெலத்தைக் கொத்திக்கிட்டுப் போயிட்டாகளாமே!" என்ற குரல் மருத மரக்கிளை ஒன்றிலிருந்து கேட்டது.

அண்ணாந்து பார்த்தார். மருதக் கிளை ஒன்றிலிருந்து கீழே நிற்கும் ஆடுகளுக்குக் குழை வெட்டிப் போட்டுக் கொண்டிருந்தான் வேலாண்டி.

"ஊர் வெள்ளாளன்மாரு கூடிக்கிட்டா என்ன? ஆனைக்கு ஒரு காலம்னா பூனைக்கும் ஒரு காலம் வரும். பண்ணையப் பிள்ளைவாளுக்கு அந்த நெலம் வந்துதான் நெரயணுமாக்கும்; வாங்கின ஒரே வளவாப் போயிடுமேன்னு நெனச்சேன். சவத்துக்குப் பொறந்த பயஹ பேச்செத்தன்ளு!"

"ஆமாம் மூக்கம் பய கொளும்புக்கில்லா போயிட்டானும்...அந்தப் பயலுக்கு என்ன அவசரம் இப்பிடி அள்ளிக் கிட்டுப் போவுது..."

"மூந்தி தொலஞ்சுட்டுப் போகுது. அண்ணைக்கி வந்து மூக்காலெ அளுதானேன்னு பார்த்தேன்...ஊர்லெ

தேவமாருன்னு பேர் வச்சுக்கிட்டு பூனையாட்டம் ஒண்டிக் கெடந்தா, என்னதான் நடக்காது...புள்ளேமாருக்குன்னு தான் இந்த வூரா...அப்போ நாங்க போயிருதோம்...... அதெத்தான் அத்துப் பேசட்டுமெ...என்னடே தொப் ளான், எங்கே அவசரம்?" என்ருர் வைத்தியர்.

தலே தெறிக்க ஓடிவந்த தொப்ளான், "நீங்க இங் கியா இரிக்கிய, தெரஸரய்யா சமுசாரத்துக்குத் தடபுட லாக் கெடக்கு, ஒங்களெ சித்த சத்தங்காட்டச் சொன் ஞவ—டவுன் பஸ்ஸு போயிட்டுதா? பார்த்தியளா?" என்று பஸ் எதிர்பார்க்கப்பட்ட திசையை வெறிக்கப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"அதுவும் அப்பிடியா! காத்தெக் கட்டிப் போட முடி யுமா? வேலாண்டி, நான் அப்பம் ஒரு சேதி சொன்னனே பாத்தியா—பாத்துக்கோ......".

ஈரம் சொட்டும் பச்சிலே முடிப்போடு குறுக்குப் பாதை வழியாக ஊரை நோக்கி நடந்தார் மருத்துவர்.

"என்னடே! தொப்ளான்,—நீ எங்கலே போரே...?"

"நான் ஒர்ணையும் போகலே...பட்டணத்து எசமான் பெரிய டாக்குட்டரெக் கூப்பிட டவுனுக்குப் போராவ..."

"என்னடே பஸ் வந்துதா?" என்று கொண்டே 'மெட்ராஸ்' மெருகிழந்து, கவலே தேங்கிய முகத்துடன் வந்தான் மகராஜன்.

"இல்லெ எசமான், ஒண்ணேயும் காங்கலியே!" என்ருன் தொப்பளான்.

## 7

நேற்றிரவு பன்னிரண்டு மணி சுமாருக்கு ஸ்ரீமதி விசுவநாத பிள்ளே—அதாவது 'சாலாச்சி ஆச்சி'—இறந்து

போனுள். கிராமம் என்ருல் கேட்கவா வேண்டும், இழவு வீட்டுச் சம்பிரமத்தை? அப்பொழுது பிடித்து ஓயாது ஒழியாது அழுகையும் கூச்சலும்.

வெளியே விசுவநாத பிள்ளை தலை குனிந்த வண்ணம் பெஞ்சியில் உட்கார்ந்திருக்கிருர். மகராஜன் தூணில் சாய்ந்து தலை குனிந்த வண்ணம் நகத்தை நிமிண்டிக் கொண்டிருக்கிருன். வெளிப் பெஞ்சியில், பண்ணையார் சிதம்பரம் பிள்ளை, தமது ஓயாத வெற்றிலைத் துவம்சத்துடன் துஷ்டிக்கு வருகிறவர்களோடு பேசியும், சிற்ருள்களையும் சுப்புப் பிள்ளையையும் வேலை ஏவிக்கொண்டும் இருக்கிருர்......

*சாலச்சி யம்மையின் தேகம் பலஹீனப்பட்டுப்போயிருந்தாலும், மக்ராஜனது இயற்கை சிகிச்சை பிரயோகிக்கப்பட்டிராவிட்டால், இவ்வளவு சீக்கிரத்தில் விழுந்து விட்டிருக்காது.*

கிரைஸிஸை' எதிர்பார்த்துப் பூர்வாங்க சிகிச்சை நடத்தினன் மகராஜன். வியாதியே 'அன்னத்துவேஷமாக' இருக்கையில் பட்டினி முறை உடலை ஒரே யடியாகத் தளர்த்திவிட்டது. இரண்டே நாள் உபவாசம், நாடியையும் அரைகுறை யாக்கியது.

அந்த நிலையில்தான் மருதப்ப மருத்துவனுர் அழைக்கப்பட்டார். கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "இன்னும் நாற்பத்தெட்டு நாழிகை கழித்துத்தான் ஏதும் சொல்ல முடியும்; அதுவரை உடம்பில் சூடுவிடாமல் தவிட்டு 'ஒத்தடம்' கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்," என்று அபிப்பிராயம் சொல்லிவிட்டு வெளியேறினுர். இரவு எட்டு மணிக்கு வந்த டாக்டர் கொடுத்த இரண்டு 'இஞ்செக்ஷன்கள்' சுமார் ஒரு மணிநேரம் கவலைக்கிடமான தெளிவை உண்டாக்கியது. 'மகனுக்குப்

புண்ணையப் பிள்ளை மகளை முடிச்சுவைக்கப் பார்க்கக் கொடுத்து வைக்கலியே' என்ற ஏக்கத்தோடு ஆவி பிரிந்தது......

"ஏலே தொப்ளான், என்னலெ இன்னங் குடி மகனைக் காணலெ, போனியா—?" என்று அதட்டினர் பிள்ளை.

"வூட்லெதான் இருந்தாரு; 'நீ போ, இதாவாரேன்'னு சொன்னரு!" என்றான் தொப்ளான்.

"என்ன இன்னமா வாரான்—இரண்டு மணி நேரமாச்சே நீபோய் இன்னொரு சத்தங் குடு..."

இரண்டு தென்னங் கீற்றுகளை இழுத்து வந்து தொப்பென்று போட்ட பலவேசம், "மாடசாமியத்தானெ கேக்கிய? அவன் வைத்யரு வீட்டெப் பாத்துப் போகுறதெக் கண்டேன்!" என்றான்.

"நீதான் போயி அவனெ இப்படிக் கையோட கூட்டியா......நேரம் என்ன ஆகுது பாரு..." என்றா சிதம்பரம் பிள்ளை.

"ஆகட்டும், எசமான்.!" என்று சென்றான் பலவேசம்.

கால் மணி கழித்து, தனியாகவே திரும்பி வந்தான் பலவேசம். ஆனல் ஓடி வந்தான்.

"எசமான், நான் போனேன். வெளிலே மருதப்பன் நிண்ணுக்கிட்டிருந்தான். 'இனிமே, குடிமகன் இந்த வேலைக்கு வரமாட்டான்; அவன் தொழில் இதில்லெ; இனிமேச் செய்ய முடியாதாம்னு போய்ச் சொல்லு'ன்னு சொல்லிப்பிட்டாரு!" என்றான் பலவேசம்.

"மாடசாமியா அப்படிச் சொன்னான்?" என்று தென்னங்கீற்றைத் தடுக்காக முடைந்துகொண்டிருந்த சுப்புப் பிள்ளை எழுந்தார்.

"இல்லெ, மருதப்பன்தான் சொன்னான்."

"அவன் சொன்னான், இவன் கேட்டுக்கிட்டு வந்தானும். நீ சாதி மறவனலே!—அப்படியே அலகிலே ரெண்டு குடுத்துக் கூட்டியாராமே! என்ன வேலாண்டி, நீ என்ன சும்மா நிக்கே? ரெண்டு சிறுக்கி மகன்களையும் பின் கட்டு மாருக் கட்டிக் கொண்டா—முதுகுத் தொலியே உறிச்சுப்பிடரேன்!" என்று கர்ஜித்தார் சிதம்பரம் பிள்ளை.

"என்னண்ணச்சி, நாலு காசுக்குப் பால்மாற்றுன் போலே—விசிறி எறிஞ்சாப் போகுது..." என்று சமாதனம் செய்ய வந்தார் விசுவநாத பிள்ளை.

"ஒங்கிளுக்கு ஊரு வளமே தெரியாது; அம்பட்டப் பயலா காரியமாத் தெரியலியே! எலே, நீ புளிய மிளார் நல்ல பொடுசாப்பாத்துப் பறிச்சுக்கிட்டு வாலே, தொப்ளான்!" என்று மறுபடியும் கர்ஜித்தார் சிதம்பரம் பிள்ளை.

கால்மணிக்கூறு கழிவதற்கு முன் சிதம்பரம் பிள்ளை சுக்ரீவாக்ஞையின் பலன் ஏக இரைச்சலோடு விசுவநாத பிள்ளை வீடு நோக்கி வந்தது.

மேல் துண்டை வைத்துப் பின்கட்டு மாருக மருதப்பனையும், மாடசாமியையும் கட்டிக் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளிக்கொண்டே வந்தான் வேலாண்டி.

"திரும்பினியா, பாளெ யறுவாளெக்கொண்டு தலையைச் சீவிப்புடுவேன்—நடலே! என்ன முளிக்கே!" என்ற அதிகாரத் தொனி, பின்னல் வயிற்றிலடித்துக் கொண்டு ஓலமிட்டு வரும் நாவிதக் குடும்பத்தின் இரைச்சலுக்கு மேல் கேட்டது.

"ரெண்டு பயல்களையும் அந்தத் தூணோடு வச்சுக் கட்டு!—என்னலே மாடசாமி, சோலியப் பாக்கியா இன்னமும் வேணுமா?" என்றார் சிதம்பரம் பிள்ளை.

"முடியாதையா!" என்று முணு முணுத்தான் மாடசாமி.

உள்ளே அழுதுகொண்டிருந்த பெண்களும் ரகளை பார்க்க வந்துவிட்டனர்.

"மிளாரே எங்கடா?" என்று ஒன்றை வாங்கி முழங் காலிலும் முதுகிலும் மாறி மாறிப் பிரயோகித்தார். அவன் வலி பொறுக்க மாட்டாமல் குய்யோ முறையோ வென்று கத்த ஆரம்பித்தான்.

அவன் மனைவி போட்ட ஓலத்தால் மருதப்பன் தூண்டுதல் என்பதும் எல்லோருக்கும் வெளியாயிற்று.

"பிள்ளெமாருன்னு என்ன கொம்பு மொளச்சிருக்கா, —பிரிட்டிஷ் ராச்சியமா என்ன? ரொம்ப உறுக்கிரஹளே! மனிசனைக் கட்டிப்போட்டு அடிக்கதுன்னு நாய அநியாயமில்லியா,—இண்ணைக்கி சிரிக்கிரவுஹ நாளைக்கி வாரதையும் நினைச்சுப் பார்க்கணும்?" என்றான் மருதப்பன்.

"நாசுவப் பயலா காரியமாத் தெரியலெயே; வேலாண்டி அவன் மொளியை (முழங்காலை)ப் பேத்துக் கையிலெ குடு! அவனுக்குக் குடுக்கிற கொடைலே இவன் சங்கெத் தூக்கணும்; என்ன பாத்துக்கிட்டு நிக்கே?"

வேலாண்டி கையிலிருந்த குறுந்தடியை ஓங்கி முழங்கால் குதிரையில் ஒரு போடு போட்டான். "ஐயோ அம்மா! என்னியப் போட்டுக் கொல்ராண்டோ! ஊர்லே நாயமில்லியா! நீதியில்லியா!" என்று கதறினார் வைத்தியர்.

விசுவநாத பிள்ளை ஓடியே வந்து வேலாண்டியிட மிருந்த குறுந்தடியைப் பிடுங்கிக்கொண்டு, "அண்ணுச்சி, பாக்கச் சகிக்கலே-காரியத்தைப் பாத்துச் செய்யணும். சவத்துப்பய போரான்....அவ அதிட்டம் இப்படி யிருந் தது; அதான் இந்தப் பயல்களுக்கும் இப்படிப் புத்தி போகுது..." என்று ஆரம்பித்தார்.

"எங் கை எப்படி யிருக்குன்னு பார்லே" என்று மறு படியும் ஒரு குத்து விட்டான் வேலாண்டி. மருதப்பன் பல்லில் முன்னிரண்டும் விழுந்து விட்டன.

ரத்தங் கண்டதும் பீதியடித்துப் போன மாடசாமி, கண்களில் நீர் பெருக, சங்கை எடுத்து ஊத ஆரம்பித் தான்.

"சவத்தெ அவுத்து விடுடா! இந்தத் தெசேலே தலைவச்சுப் படுத்தா மாறுகால் மாறுகை வாங்கிப் போடு வேன், ஓடிப்போ நாயே!" என்று கர்ஜித்தார் சிதம்பரம் பிள்ளை. அவிழ்த்துவிடப்பட்ட மருதப்பனும், மனைவியின் கைத்தாங்கலில், நொண்டிக் கொண்டே தூரத்தில் சென்று, ஒருபிடி மண் எடுத்து வானத்தில் எறிந்து, "இப் பிடி சுட்ட மண்ணாப் போகணும்! என் வயிரெறியிராப்லே போகணும்!" என்று ஏசல் அழுகையுடனே கூவி விட்டுச் சென்றான்.

அப்படியும் இப்படியுமாகப் பிரேத சம்ஸ்காரம் முடிந்து திரும்ப மணி நான்காகி விட்டது.

மாடசாமி முதுகுவலிக்குக் காரணமே வைத்தியர் மருதப்பன் அவனுக்கு முன்பு கொடுத்திருந்த சிறு கடன் தான் என்றும், 'அதைத் திருப்பிக் கொடு அல்லது, இந்த வேலை செய்' என்று போதிக்கப்பட்டது என்றும் சிதம் பரம் பிள்ளைக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அதையெல் லாம் பொருட்படுத்தவில்லை.

"போலீஸுக்கு கீலீஸுக்கு எட்டுச்சுன்னு அவன் தலை அவன் கழுத்திலே இருக்காது!" என்று மருதப்பனுக்கு வேலாண்டி மூலம் எச்சரித்தனுப்பிவிட்டு, விசுவநாத பிள்ளைக்குத் தக்க சமாதானங்கள் சொல்ல ஆரம்பித்தார்.

மனைவியை யிழந்தது, தெருக்கூத்தாகக் கிரியை நடந்தது, உத்தியோக காலத்தில் சர்க்காரின் அதிகார எல்லையைத் தெரிந்து கொண்டிருந்தது—எல்லாம் அவரை ஒரே யடியாகப் பீதியடிக்க வைத்துவிட்டன.

பரஸ்பரப் பேச்சில் மனைவியின் கடைசி ஆசையையும் சொல்லி வைத்தார் விசுவநாதபிள்ளை, பேச்சு வாக்கில்.

"நீங்க சொன்னுப்லெ வர்ர தைமாசம் முடிச்சிப்புடுவம்!" என்று அந்தப் பேச்சை முடிவு கட்டினார் பண்ணையார்.

மருதப்பன் அன்று வீட்டுக்குள் சென்று படுத்தவன், மானத்தாலோ, மனக்கொதிப்பாலோ, அல்லது அடி பலத்தாலோ வெளியேறவில்லை.

இரகசியமாக இரண்டாம் பேருக்குத் தெரியாமல் ஸ்ரீவைகுண்டம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் பிராது அனுப்பினான். ஏற்க மறுத்து எச்சரித்து விரட்டப்பட்டான் போன ஆள். ஊரே திரண்டு எதிர்க்கும் பொழுது பணமிருந்து என்ன பயன்? போதாக் குறைக்குத் தாழ்த்தப்பட்ட, கிராமங்களில் அவமானகரமானது என்று கருதப்படும் ஒரு தொழிலைச் செய்யும் ஜாதி! சில சமயத்தில் ஊரையே அழித்துவிடவேண்டும் என்ற நபும்ஸகக் கோபம் அவனைத் தகித்தது. அடுத்த நிமிஷம் ஒரே மலைப்பு!

சம்பவமும், செய்தி பாதி வதந்தி முக்காலாக 'உஸ்-ஆஸ்' என்று பக்கத்தூர்களில் பரந்தது. வேளாளருக்கு

நெஞ்சு விரிந்தது. "சவத்துப் பயல்களைச் சரிக்கட்டிப் பாருங்க, இல்லாட்டா அங்கயெப் போல, மலையாளத்து அம்பட்டனெ குடியேத்திப் போடுவோம்......" என்று மூட்டை கட்டி வந்து இலவச அபிப்பிராயம் சொல்லி, விட்டுச் சென்றனர் பலர்.

மகராஜனுக்கு அழகியநம்பியா புரத்தில் இருப்பே கொள்ளவில்லை. 'எப்பொழுதடா பதினாறு கழியும், சென்னைக்குப் போய் விடுவோம்' என்ற துடிதுடிப்பு.

இப்படி யிருக்கையில் மருதப்பனைக் காணும் என்ற பேச்சுக் கிளம்பியது. இது ஊர்க்காரருக்கே அதிசயத்தை விளைவித்தது. வீடு அடைத்துப் பூட்டிக் கிடந்தது. எங்கு போனான், எப்படிப் போனான் என்பதே ஆச்சரியம்.

சிதம்பரம் பிள்ளை இதைக் காதில் போட்டுக்கொள்ள வில்லை. "சவம் தன்னைப் பயந்து கொளும்புக்கு ஓடியிருக்கும்!" என்று திருப்தி கொண்டார்.

விசுவநாத பிள்ளைக்கு இப்பொழுது சாப்பாட்டுக்குக் கூட வீட்டுக்குப் போவதென்றால் வேம்பாகிவிட்டது. மகராஜனே சமயா சமயங்களில் சாப்பாடு கொண்டுவந்து விடுவான். "அப்பாவைத் தனியாக இங்கே விட்டுவிட்டுப் போவதா, அவரும் உடன் வந்தால் என்ன?" என்று நினைத்தான். ஆனால் சவுக்கை மோகம் கொண்ட பிள்ளையவர்கள் மறுத்துவிட்டார்கள். பிள்ளையும் பண்ணையாரும் அன்னி யோன்னியம். பிரிந்து காண்பது துர்லபம். அப்படி ஒட்டிக் கொண்டனர். சிதம்பரம் பிள்ளையின் முரட்டுத் தைரியத்தில் டாக்டருக்கு நிலைதளராத நம்பிக்கை. டாக்டரின் குருட்டுக் குழந்தைத் தன்மையில் அவருக்கு ஒரு முரடனின் பிரேமை. சுப்புப் பிள்ளைக்கு நினைப்பு புது மாதிரியாக ஓடியது. இவ்வளவு கோளாறுக்கும் அந்த நிலந்தான் காரணம் என்ற உண்மை

யைக் கண்டுபிடித்து, பிள்ளையவர்கள் காதில் ஓதினர். அதிரடித்துப்போன நெஞ்சில் இது சடக்கென்று வேரூன்றியது. அதனல் அவரை யறியாது, வெளிக்காட்டிக் கொள்ளத் தைரியமற்ற ஒரு பயங்கர வெறுப்பும் உற வாடியது. அதை வைத்தே தன் மகளை இரண்டாந்தாரமாக டாக்டருக்கு முடித்துவிட்டால் என்ன, என்று கோட்டை கட்டினர் சுப்புப்பிள்ளை. சொத்துக்குச் சொத் தாச்சு, இந்த அல்லற் பிழைப்பும் ஒழியும்.

பதினறும் கழிந்தது. சமயம் பார்த்து விதை ஊன்றினர் சுப்புப்பிள்ளை. பயிரிட வேண்டியதுதானே பாக்கி! தானகவே முளைவிடும் என்பதில் சுப்புப்பிள்ளைக்கு அபார நம்பிக்கை.

அடுக்களைத் தாலி கட்டவைத்தால் போகிறது!

## 8

பதினறு முடிந்து ஐந்தாவது நாள் விடியற்காலம் மூன்றரைமணி. முண்டிதமான தலையுடன் பஸ்ஸை எதிர் பார்த்து நிற்கிருன் மகராஜன். கூடவே தகப்பனரும், பண்ணையப் பிள்ளையும், சுப்புப் பிள்ளையும் நிற்கின்றனர்.

பஸ் வந்து நின்றது. இருட்டில் ஒருவர் இறங்கினர்.

மகராஜன் ஏறினன்; சாமான்களும் ஏற்றப்பட்டன. வண்டி புறப்பட்டது.

"போனதும் லெட்டர் போடு" என்ருர் விசுவநாத பிள்ளை.

"என்ன தெரஸர் பிள்ளையா? யாரு போராஹ?" என்றது அந்தப் புதிய குரல்.

"மரைக்காயர்வாள்! ஏது இப்படி!"

"பண்ணையார்வாளெப் பார்க்க வந்தேன்; அண்ணு அவுஹளே நிக்காஹளே! நீங்க மூக்கன்கிட்ட வாங்கினீஹளா யில்லா, அந்த நெலத்தை எனக்கு முன்னுலேயே அடமானம் வச்சிருந்தான்—சமுசாரத்தைச் சொல்லிப்புட்டுப் போகலாமுண்ணு வந்தேன். நம்ம வைத்தியர் வாளும் அவுஹ பொஞ்சாதியும் நேத்துத்தான் இஸ்லாத்தைத் தளுவினுஹ! இந்த பஸ்லேதான் நம்ம கடெலே மானேசராயிருக்க கொளும்புக்குப் போராஹ!" என்ருர் மரைக் காயர்.

"கோடு இருக்கே, நடத்திப் பார்ப்போமே!" என்ருர் சிதம்பரம் பிள்ளை.

# பொய்க் குதிரை

"வாழ்க்கையே பிடிப்பற்றது; வாழ்வது மாயம்!" என்றெல்லாம் நினைவு ஓடிக்கொண்டிருந்தது விசுவத்திற்கு; ஏனென்றால், அன்று ஆபீஸில் அவனுக்குச் சம்பளம் போடவில்லை. வீட்டிலே, சாமான் கிடையாது; வாடகைக்காரன் நெருக்குகிறான். மனைவி கமலத்தின் துயரந்தேங்கிய முகம் அவன் மனக்கண் முன்பு நின்றது.

பூக்கடைத் தெரு வழியாக நடந்துகொண்டிருக்கிறான். இரவு ஏழு மணியிருக்கும். மின்சார வெளிச்சமும், டிராமின் கணகணப்பும், மோட்டாரின் கிரீச்சலும் அவன் மன இருளுக்குப் பகைப்புலமாக இருந்தன.

ரஸ்தாவின் ஓரமாக உலகத்தின் பரபரப்பிற்கும் போட்டி ஆவேசத்திற்கும் வழிவிட்டு விலகி நடப்பவன் போல நடந்துகொண்டு போகிறான்.

ஜனங்கள் ஏகபோகமாக, இரைச்சலாக இடித்துத் தள்ளிக்கொண்டு செல்லுகிறார்கள். ஏதோ பிரக்ஞையற்றவன் போல நடக்கிறான், வழிவிட்டுக் கொள்ளுகிறான், நடக்கிறான் - எல்லாம் பிரக்ஞையற்று.

ரஸ்தாவில் ஒரு திருப்பம்; சற்று இருள் படர்ந்த வெளிச்சம்; பாதசாரித் திண்ணையிலே, அல்ல அதன்

கீழே ஓர் ஓலைப்பாயின் சுருள்; எதேச்சையாகக் கண்கள் அதன்மீது படுகின்றன. ஓலைப் பாய்ச் சுருளா? ஓர் ஏழைக் குழந்தையின் தொட்டில்; சுருட்டிய பாயில் குழந்தை சுகமாக உறங்கியது. உறக்கமா?—சீச்சீ, என்ன நினைப்பு! அதன் தாயின் கஷ்டம் என்னவோ! கமலத்திற்கு ஒரு குழந்தை இருந்தால்........நினைப்பில் என்ன குதூகலம்....!

சீச்சீ! இன்றும் சம்பளம் போடாவிட்டால் என்ன? நாளைப் போடுகிறான். அந்தக் குழந்தையின் தகப்பனை ஒப்பிட்டால் நாம், ராக்பெல்லர், ஏன், குபேரனல்லவா?

இந்த உற்சாகம் மற்றக் கவலைகளை மறக்கடிக்கிறது. அன்று டிராமிற்குக்கூடச் செலவழிக்காமல் கொண்டு செல்லும் அந்த ஓரணாவை வைத்துக் கொண்டு.........

வழி நடை தெரியவில்லை; திருவல்லிக்கேணி வரை உற்சாகமாக நடக்கிறான்.

கமலா, பாவம் தனியாகக் கொட்டு கொட்டென்று உட்கார்ந்திருப்பாள். நவராத்திரிக் கொலு வைக்கக் கூடாத......என்ன ஜன்மம்......என்ன பிழைப்பு...... அவளுக்கு அந்தச் சிறு சந்தோஷத்தையாவது கொடுக்க முடியாத பேடி......

மௌண்ட் ரோட்டைத்தாண்டி திருவல்லிக்கேணிப் பக்கம் நெருங்கிவிட்டான். வல்லப அக்ரகாரம் கிட்ட வந்துவிட்டது.

வழியிலே ஒரு கூடைக்காரி.

புஷ்பம்!—நல்ல முல்லை. மலரும் பருவம்—கம்மென்ற வாசனை! கமலாவின் தலையில் வைத்தால் அவள் முகத்தில் வரும் புன்சிரிப்பாவது பசியை ஆற்றுமே!

உடனே கூடைக்காரியிடம் வேறு யோசனை யில்லாது புஷ்பத்தை வாங்கிவிடுகிருன். வழி நெடுக அவன் புன்சிரிப்புத்தான் ......அவன் உதட்டில் ஒரு புன் சிரிப்பு......

"கமலா! கமலா!"

"யாரது! நீங்களா?" என்று கதவைத் திறக்கிருள் கமலம். வீடு என்ற ஹோதாவில் இருக்கும் காற்றற்ற சிறு அறையில் மேஜையிலே மங்கிய விளக்கு, துணிமணி சிதறிய கொடி, சுவரோரம் பூராவும் டிரங்குப் பெட்டியும் தட்டு முட்டுச் சாமான்களும், படுக்கையும்.

கமலா சிரித்துக்கொண்டு கதவைத் திறக்கிருள். அந்த மங்கிய வெளிச்சத்தில் அவள் கண்கள் எதையோ எதிர்பார்ப்பவை போல் தோன்றின. அவ்வளவுடனும் ஒரு மகிழ்ச்சி யிருந்தது. மகிழ்ச்சியைவிட எதிர்பார்த்த ஆசை அதிகம்.

"கமலா! உனக்கு ஒன்று கொண்டுவந்திருக்கிறேன், என்ன, சொல் பார்ப்போம்!" என்றுகொண்டே கொடிப் பக்கம் திரும்பிச் சட்டையைக் கழற்றினன்...

கமலத்தின் முகத்தில் ஒரு சமாதானம், மகிழ்ச்சி பொங்கியது.

விசுவம் அதைக் கவனிக்கவில்லை. அவசர அவசர மாக, "கமலா, இன்று சம்பளம் போடவில்லை. அதற் கென்ன நாளைப் போடுவார்கள். நான் உனக்கு என்ன கொண்டு வந்திருக்கிறேன், தெரியுமா?" என்ருன். குரல், அவன் மனத்திலிருந்த கஷ்டத்தைப் பொருட் படுத்தாத மாதிரி பாவனை செய்து தோற்றியது.

"என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று தளர்ந்த குரலில் கேட்டாள்.

" இதோ பார் !" என்று அவள் பின்புறமிருந்து கொண்டு, அவளுக்குச் சிரிக்கும் முல்லையைக் காண்பித்துவிட்டு, அவள் தலையில் சூட்டி, அவள் தோள்களைப் பிடித்து உடலைத் திருப்பிய வண்ணம் முத்தமிட எத்தனித்தான்.

கமலாவின் கண்களில் கண்ணீர் பொங்கியது. முகத்தை அவன் மார்பில் மறைத்துக்கொண்டு பொருமி, விம்மி விம்மி அழுதாள்.

விசுவத்தின் மனத்தில் கதையைக் கொண்டடித்தது போல் ஓர் உணர்ச்சி ! கண்களில் என்ன கோழைத்தனம்!

" அசடே ! அசடே ! இன்றைக்கு இல்லாவிட்டால் நாளைக்கு வருகிறது. அதற்காக அழுவாளோ ! மண்டூக்ம் !" என்றான் விசுவம்.

" அதற்காக இல்லை !" என்றாள் கமலம். அவள் கண்கள் அவன் கண்களைச் சந்தித்தன. கண்களிலே ஒரு பரிதாபம், ஏக்கம், மகிழ்ச்சி கலந்திருந்தது.

" பின் எதற்கு ?"

" தோணித்து ; அழுதேன். என்னமோ அப்படி வந்தது !" என்று அவன் அதரத்தில் முத்தமிட்டாள். முத்தம் அந்த மலர்ந்த முல்லையின் ஸ்பரிசம் போலும், கனவின் நிலவுபோலும் மென்மையாக இருந்தது.

விசுவம் அவளை அணைத்து, முகத்திலும் அதரத்திலும் முத்தமிட்டான். சோர்ந்தவள் போல் அவன் தோள்களில் சாய்ந்த அவள் மெதுவாகக் கையை நீக்கி விலக்கிவிட்டு, " சாயங்காலம் உங்கள் நண்பர் அம்பியும் லட்சுமியும் வந்திருந்தார்கள் " என்றாள்.

" என்ன விசேஷம் ?"

இன்றைக்குக் கொலுவுக்கு என்னைக் கூப்பிட வந்தாள். உங்களையும் நேரே வந்து அழைக்க அவரும் வந்திருந்தார். கட்டாயம் வரவேண்டுமாம் !"

"கொலுவில் நான் எதற்கு?" என்று சிரித்தான் விசுவம்.

"அதுமட்டுமில்லையாம், இன்னிக்கு ஒரு விருந்தாம். எல்லா நண்பர்களையும் கூப்பிட்டிருக்காளாம். அவசியம் வரணும் என்று சொன்னார்கள் !" என்றாள் கமலம்.

இப்படியாவது அவளை அழைத்துச் சென்று சற்று அவளுக்குக் களிப்பூட்டலாமே என்று நினைத்தான் விசுவம்.

"கமலா, நீயும் புறப்படேன், போகலாம்!" என்றான்.

கமலம் தயங்கினாள்.

"சீ, அசடு! முகத்தைக் கழுவிவிட்டு அந்தச் சுதேசிப் புடவை வாங்கினோமே,—அதுதான் வெளுப்பாகி வந்திருக்கிறதே! அதை எடுத்துக் கட்டிக்கொள். நானும் புறப்படுகிறேன்" என்று துரிதப்படுத்தினான் விசுவம்.

அவளும் அவன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய முகத்தைக் கழுவி, சிறு குங்குமப் பொட்டிட்டுக்கொண்டு தயாரானாள்.

"கமலா! இங்கே வா !" என்று அவளை மடிமீதிருத்திக்கொண்டு, "கண்ணாடியில் பார் !" என்று சிரித்தான்.

"போங்கள் உடை கசங்கிவிட்டால்?" ...என்று எழுந்திருக்க முயன்றாள். அவள் எவ்வளவு விடுவித்துக் கொள்ள முயன்றும் அவன் அவள் அதரங்களை முத்தமிட்டு விட்டான்.

"பாருங்க! கசங்கிவிட்டதே!" என்றுள் கமலம்.

இருவருக்கும் கண்ணுடியில் சிறு பாகத்தைத் தவிர மற்றதெல்லாம் வெறும் பலகை என்பது ஞாபகத்தி லில்லை.

அம்பி விசுவத்தின் பால்ய தோழன். இருவரும் ஒன்றுகப் படித்தவர்கள். ஆனல் அம்பி பணக்காரன். சம் பாதிக்க வேண்டிய அவசிய மில்லை. அவனும் அவன் மனைவி லட்சுமியும் வாழ்க்கை என்பது இன்ப மயமான மோட்சம் என்றுதான் அறிந்தவர்கள். அம்பிக்கும் லட் சுமிக்கும், விசுவமும் கமலமும் வராத விசேஷம் விசேஷ மில்லை.

அன்று ஒரு விருந்து நடத்தவேண்டுமென்று தோன் றியது அம்பிக்கு. அத்துடன் நவராத்திரிக் கொலுவும் சேர்ந்துவிட்டால் கேட்பானேன்!

வீட்டு உள் ஹாலில் பொம்மைகள், விக்ரகங்கள் வைத்துக் கொலு அடுக்கி யிருக்கிறது. லட்சுமியும் அவள் தோழிகளும் கம்பளத்தில் உட்கார்ந்து சிரித்துப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

கிராமபோனில், முசிரி இவர்களுடைய மனத்தைக் கவர முயற்சித்தும் முடியவில்லை. ஆனல், வெறுப்புத் தோன்றுமல் பாட அவர் கிராமபோன் ப்ளேட்டாக மாறி னுல்தான் முடியும். அது அங்கு நடந்துகொண்டிருக் கிறது.

"அதோ, கமலா வந்துவிட்டாள்!" என்று எழுந்து ஓடினுள் லட்சுமி.

"வாருங்கோ!" என்று சிரித்துக் கொண்டு கமலத் தின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு உள்ளே செல்ல முயன்ருள்.

"அம்பி எங்கே ?" என்முன் விசுவம்.

"அவர் மச்சில்லெ இருக்கார் !" என்று கூறிவிட்டு உள்ளே இழுத்துச் சென்று விட்டாள் லட்சுமி.

"அதார் விசுவமா ? வாடா ! ஏண்டா இவ்வளவு நேரம் ? யூஸ்லெஸ் பெல்லோ ! அப்படி என்ன ஆபீஸ் கேடு ? வா உயர !" என்று கத்தினன் அம்பி.

மெத்தை வராந்தாவில் நாலைந்து நாற்காலிகளி டையே பெரிய ஜமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. இரண்டிலும் நண்பர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அம்பி மட்டும், ஒரு குழந்தையைத் தோளில் சாத்திய வண்ணம், நடந்துகொண்டு அத்துடன் விளையாடிக் கொண்டிருந்தான். விசுவம் உயர வந்ததும், "அந்தப் பயலை இங்குக் கொண்டு வா !" என்ற வண்ணம் நெருங் கினன்.

குழந்தை அந்தப் பாதி இருளில் அடையாளம் தெரியாததால் அம்பியைப் பிடித்துக் கொண்டு கத்த ஆரம்பித்தது.

"அடே, திரும்பிப் பாரடா, விஸ்வ மாமா வந்திருக் கார் ! அழலாமோ ? பிஸ்கோத்து வாங்கித் தருவார். அன் னிக்கித் தரலே ! ஏண்டா, வாங்கித் தருவாயோ இல்லை யோடா ?" என்று குழந்தையைச் சமாதானப்படுத்தினன்.

விசுவத்திற்கு குழந்தைக்கு ஏதாவது வாங்கிக் கொடுத்தாகவேண்டும் என்று பட்டது.

"மாமா, பிஸ்கோத்து !" என்றது குழந்தை.

விசுவம் மனத்தில் ஏற்பட்ட நினைவை மறைத்துக் கொண்டு, கையிலிருந்த சாவிக் கொத்தை எடுத்துக் குலுக்கி, வேறு விளையாட்டில் அதன் மனதைத் திருப் பினன்.

அதற்குள் கீழேயிருந்து வீணையின் தொனி கேட்க ஆரம்பித்தது. பிறகு கமலத்தின் குரல்—'சாந்தமுலேக' என்ற தியாகராஜ கீர்த்தனம்.

"அடே, உன் 'ஒய்ப்' (மனைவி) பாடுகிறாள்டா! கேளு!" என்று கத்திக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தான் அம்பி.

திடீரென்று பாட்டு பாதியில் நின்றது. "அம்மாமி கொஞ்சம் ஜலம்" என்ற தனது மனைவியின் குரல் விசுவத்தின் காதில் மட்டும் விழுந்தது. மத்தியானம் என்ன சாப்பிட்டாளோ?

"டேய் விசுவம்! நீ அந்தக் கீர்த்தனத்தை முடி!" என்றான் அம்பி.

"உனக்கு வேலை யில்லை!"

"ஸார்! இந்தப் பயல் நல்லாப் பாடுவான் ஸார்! நீங்க தான் கேளுங்கோ! இல்லாவிட்டால் நான் பாட ஆரம்பித்து விடுவேன்!" என்றான் அம்பி. அம்பியின் சங்கீத ஞானத்திலும் குரல் இனிமையிலும் அவன் நண்பர்களுக்கெல்லாம் பயம். ஏன்? கேட்கத் துர்ப்பாக்கியம் பெற்ற எல்லோருக்கும் அப்படித்தான்.

விசுவத்திற்கு மனத்தில் குதூகலம் இல்லை. உடலில் சோர்வு. ஆனால் அவன் கேட்டதற்குத் தான் கடமைப் பட்டவன் போலிருந்தது. ஏன் வந்தோம் என்ற நினைப்பு. கமலம் என்ன நிலையில் இருக்கிறாளோ?

"பாடடா!"

விசுவம் அந்தக் கீர்த்தனத்தை எடுத்துப்பாட ஆரம்பித்தான். அதைக் கீழேயிருந்த பெண்கள் கேட்டு விட்டார்கள். உடனே கமலத்தை, 'இன்னொரு பாட்டு,

இன்னொரு பாட்டு' என்றார்கள். அம்பியும் இவனைச் சும்மா விடவில்லை. கமலம் தனது கணவர் குரலைக்கேட்டவுடன், அவர் மனத்திற்குச் சாந்தியும் சந்தோஷமும் அளிக்கிறதென்று, இவர்களுக்காக அல்லாமல், அவருக்காகப் பாடினாள். எப்படியிருந்தாலும் மனித தேகந் தானே! ஆனால், களைப்பைக் காண்பிக்கவும் முடியவில்லை. மரியாதைக் குறைவல்லவா?

அம்பி கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, "நேரமாகிவிட்டதே! எனக்காக இல்லாவிட்டாலும் உன் நண்பர்களுக்காகவாவது கொஞ்சம் போஜனத்தைப் பற்றிக் கிருபை செய்யக்கூடாதா?" என்றான்.

உடனே மங்களம் பாடி முடித்துவிட்டு, மற்றப் பெண்கள் எல்லாரும், ஏதேதோ சாக்குகளுடன் தாம்பூலம் வாங்கிக்கொண்டு புறப்பட்டு விட்டனர். லட்சுமியும் கமலமும் தவிர வேறு பெண்கள் இல்லை. கமலத்திற்கு என்னவோ அங்கு அன்று சாப்பிட மனமில்லை. ஆனால் கணவர் என்ன சொல்லுவாரோ?

ஐந்தாறு இலை போட்டு இருவரும் பரிமாறினார்கள். அம்பியும் அவன் நண்பர்களும் சாப்பிட வந்து உட்கார்ந்தார்கள்.

"கமலா! நீ நெய்யைப் பரிமாறு. நான் பப்படத்தைப் போடுகிறேன்!" என்றாள் லட்சுமி.

"நான் எதற்கு?" என்றாள் கமலம்.

"இதென்ன கூச்சம்! எடுத்துக்கொண்டு......" என்று அவள் கையில் நெய்க் கிண்ணத்தைக் கொடுத்துவிட்டு, பப்படத்தை எடுத்துக்கொண்டுவர உள்கட்டிற்குச் சென்றாள் லட்சுமி.

கமலம் கூசிக் கூசிப் பரிமாறிக்கொண்டு சென்ருள். அம்பிக்கும் பரிமாறியாய்விட்டது. வரிசையாக அவர்கள் நண்பர்களுக்குப் பரிமாறிக்கொண்டு அந்தக் கோடியில் உட்கார்ந்திருந்த விசுவத்திடம் சென்ருள்.

அம்பி உடனே சிரித்துக்கொண்டு, "ஊரார் வீட்டு நெய்யே! என் பெண்டாட்டி கையே" என்று பாட ஆரம்பித்தான்.

"அந்தப் பழமொழி பொய்த்துப் போகாமல் ஊற்றுங்கள்!" என்று உரக்கச் சிரித்தான்.

கமலத்தின் மண்டையில் பின்புறத்திலிருந்து யாரோ அடித்த மாதிரி இருந்தன இந்த வார்த்தைகள். அவள் கைகள் நடுங்கின! இருவர் கண்களும் கலந்தன. கை நடுக்கத்தில் விழுந்த இரண்டு துளிகளுடன் ஒரு கண்ணீர்த் துளியும் கலந்தது. கமலம் ஜாடையாகச் சமாளித்துக்கொண்டாள். மற்றவர்கள் கவனிக்கவில்லை. எப்படி முடியும்?

இதற்குள் லட்சுமி பப்படத்தை எடுத்துக்கொண்டு வந்தாள்.

"என்னடா விசுவம், சுத்த அசடாகை இருக்கிருய். அவளுக்கு ஏதாவது டோலக் கீலக் வாங்கக் கூடாதா? லட்சுமி போட்டிருக்கிருள், பார்த்தாயா? அவள் முகத்திற்குச் சரியாக இருக்கும். ஏண்டி, நீ அந்தப் புடவை என்னமோ வாங்கினயே, அதை அவாளிடம் காண்பி!" என்று அடித்து வெளுத்துக்கொண்டு போனன் அம்பி.

"வாங்க வேண்டும் என்றுதான் உத்தேசித்திருக்கிறேன்" என்ருன் விசுவம்.

போஜனம் ஒருவாறு முடிந்தது. தாம்பூலம் வாங்கிக் கொண்டு இருவரும் திரும்பினர்கள்.

விசுவத்தின் வீட்டில் மங்கிய விளக்கு. அவன் படுக்கையில் சாய்ந்திருக்கிறான். பக்கத்தில் கமலம் உட்கார்ந்திருக்கிறாள். வெற்றிலையை மடித்துக் கொடுத்தவள் அவன் முகத்தைப் பார்த்ததும், 'கோ!' வென்று கதறிக் கொண்டு அவன் மார்பில் முகத்தை மறைத்துக்கொண்டாள். சிறைப்பட்ட துக்கம் பீரிட்டுக்கொண்டு வருவது போல் இருந்தது.

"சீ, அசடு! ஏன் அழுகிறாய்! அம்பி ஒரு அசட்டுப் பயல். அவன் வார்த்தைக்கு ஒரு மதிப்பு வைக்கலாமா? உலகம் தெரியாமல், குடி முழுகிப்போன மாதிரி...அசடு! ..அசடு!" என்று தேற்றினான்.

"அதற்கல்ல......" என்றாள் கமலா.

"பின் என்னவோ, துக்கம்!"

"இன்றைக்கு மனசே ஒரு நிலை கொள்ளல்லெ!"

"சீ! நான் செய்தது முட்டாள்தனம்! கமலா" என்று அவள் அதரத்தில் முத்தமிட்டான். கண்ணீரின் ருசி உப்பு மட்டும் கரிக்கவில்லை.

# வாடா மல்லிகை

அவள் பெயர் ஸரஸு; ஒரு பிராமணப் பெண். பெயருக்குத் தகுந்ததுபோல் இருக்கவேண்டும் என்று நினைத்தோ என்னவோ பதினேழு வயதிற்குள்ளேயே சமூகம் அவளுக்கு வெள்ளைக் கலையை மனமுவந்து அளித்தது, அவள் கணவனுக்குக் காலனுடன் தோழமை ஏற்பட்டு விட்டதால். அதற்குச் சமூகம் என்ன செய்ய முடியும்?

ஸரஸு ஓர் உலாவும் கவிதை. இயற்கையின் பரிபூரணக் கிருபையில் மலரும் பருவம்; காட்டிலே ரோஜா யாருமின்றி உதிர்ந்தால் அதைப் பற்றிப் பிரமாதமாக யாரும் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் நந்தவனத்திலே, மனத்தின் களிப்பில் குலாவக்கூடிய இடத்திலே தனிமை என்ற விதி ஏற்பட்டால் அதைப் பற்றிப் பரிதவிக்காமல் முடியுமா? இயற்கையின் போக்கைத் தடை செய்துகொண்டு அவள் தியாகம் செய்கிருள்; அவள் பரிசுத்தவதி என்று சமூகம் களித்துக்கொண்டு இருப்பது அதன் ரத்த வெறிதான். அவளுக்கு இந்தச் சமூகத்தில் உரிமையே கிடையாதா? அவள் நிலைமை என்ன? சாம்ராஜ்யப் பிரஜையின் நிலைதானு? சமூகம் என்ன செய்ய

முடியும்? வேதம் சொல்லுகிறது. தர்ம சாஸ்திரம் சொல்லுகிறது என்று பேத்திக்கொண்டிருக்கும்......?

ஸரஸுவுக்கு இதெல்லாம் தெரியாது. அவள் ஒரு ஹிந்துப் பெண். வாயில்லாப் பூச்சி. பெற்ரேரையும், புருஷனையும், முன்னேரையும் நம்பித்தான் உயிர் வாழ்ந்து வந்தாள். பெற்ரேர் கலியாணம் செய்து வைத்தார்கள். புருஷன் வாழ்க்கையின் இன்பத்தைச் சற்று காண் பித்துவிட்டு, விடாய் தீருமுன் தண்ணீரைத் தட்டிப் பறித்தமாதிரி, எங்கோ மறைந்துவிட்டான். அவனை இந்த உலகத்தில் இனிக் காணமுடியாது. பிறகு......... கண்டால்தான் என்ன? அது போகட்டும். இப்படித் தான் இருக்க வேண்டும் என்று சொல்லி வைத்துவிட் டுப்போன முன்னேர்கள் கணவன் சென்றவிடத்தில் இருக்கிருர்கள். ஸரஸு பெற்ரேரைத் தட்டியது கிடை யாது. பிறகு முன்னேர்களை எப்படி எதிர்க்க முடியும்? அவளும் பெண்தானே! அச்சம் என்பதுதான் அவ ளுக்கு அணிகலன் என்று சமூகம் சொல்லுகிறதே. பிறகு அவள் வேறு என்னவாக இருக்கமுடியும்? அவள் 'உயர்தர'ப் படிப்புப் படித்த பெண்ணு? நாலு விஷயங்க ளைத் தானுக ஆராய்ச்சி செய்துகொள்ள அவளுக்குத் திறன் ஏது? இயற்கையின் தேவை கட்டுக்கடங்காமல் மீறி ஒரு மிருகத்தின் முரட்டுத் தைரியத்தைக் கொடுகக வில்லை. கொடுத்திருந்தால், அவளைச் சமூகம் தூற்று வதற்குத் தயார்.

எந்த அமைப்பிலேயும் விதிவிலக்குகளான சிறு பான்மையோர் கஷ்டப்படத்தான் வேண்டுமென்று தத்துவம் பேசலாம். தத்துவம் நன்ருகத்தான் இருக் கிறது! ஸரஸுவின் உணர்ச்சிக்கு உரிமையில்லை—அவள் விதிவிலக்கு.

ஸரஸு எப்பொழுதும் மாடியின்மேல் காலை ஏழு மணிக்கே தலையை உலர்த்த வருவாள். அப்பொழுதே ஸ்நானமாகிவிடும். பெற்றோரின் பாசம், அவளைச் சமண முனி மாதிரி, பெண்மையின் கோரமாக்கத் துணியவில்லை. அதை எடுத்திருந்தாலும் அவள் கவலைப்பட்டிருக்க மாட்டாள். வாழ்க்கைக்கே வசதியில்லாம லிருக்கும் பொழுது சிகை போவதுதானா பிரமாதம் ?

அவளைப் பார்த்தால் யாருக்கும் கண் கலங்கும். அவள் கண்களிலே ஒரு நிரந்தரமான துயரம், போக்க வழியில்லாத துன்பம் குடிகொண்டிருக்கும். அவள் சிரிக்கத்தான் செய்கிறாள். குதூகலமாகப் பேசத்தான் செய்கிறாள். இவை யாவற்றிற்கும் பின் சோகந்தான் நிலவும்.

பிரம்மச்சாரியாக, உண்மையான பிரம்மச்சாரியாக நீ இருந்து பார்த்திருக்கிறாயா? வேறு ஓர் உயர்ந்த இலட்சியம் உனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, உன்னை அப்படியே விழுங்கிவிடாவிட்டால் பிரம்மச்சரியம் உன்னைக் கொன்றுவிடும். உன்னை மிருகமாக்கி உனது உள்ளத்தைப் பேயாகச் சிதற அடித்துவிடும். ஆனால் கட்டாயத்தின் பேரில் இப்படிக் கன்னிகையாகக் காலங் கழிக்க வேண்டிய நிலைமையை என்ன சொல்லுவது ?

அன்று ஸரஸுவின் தம்பி துரைசாமிக்குச் சாந்திக் கலியாணம். முதலிலே ஸரஸுக்குத் தாங்க முடியாத குதூகலம்—தங்கள் வீட்டில் விசேஷம் வருகிறது என்று தான், தம்பியின்மீது இருந்த ஒரு ஹிந்துத் தமக்கையின் அளவு கடந்த பாசத்தினால்.

அன்று புகல் வந்தது............

அன்று இரவு வந்தது. ஊரில் இருள். வீட்டில் ஒளி.

வீட்டில் ஒளி; ஸரஸுவின் உள்ளத்தில்?

அவளுக்கு என்னென்னவோ நினைவுகளெல்லாம் குவிந்தன. அப்படித்தானே மூன்று வருஷங்களுக்கு முன் முதல் முதலாக அவருக்கு........என்னென்னவோ தோன்றின., நேரமாக நேரமாக, அவள் மனத்தில் அந்த மூன்று வருஷங்களுக்கு முந்திய சந்தோஷகர மான, வாழ்க்கையை ஓர் இன்ப ஒளியாக்க முயன்ற அந்த இரவின், ஒவ்வொரு சிறு சம்பவமும்.........அவர் முதலில் என்ன கூச்சப்பட்டார்! பிறகு அந்த உரிமை என்ற தைரியம்தானே.........இவ்வளவு சீக்கிரம் அவள் வாழ்க்கை இருட்டிவிடும் என்று அப்பொழுது கண் டாளா? என்னவோ சாசுவதமான அழியாத நித்திய வஸ்துவென்றல்லவோ—

துரைசாமியையும் அவன் மனைவியையும் அழைத்துக் கொண்டு சென்றனர். கூச்சலும் அமளியும் அவளுக்குப் பொறுக்க முடியவில்லை.

தன்னை மீறிய கட்டுக்கடங்காத ஓர் ஆவேசம் அவ ளைப் பிடர் பிடித்துத் தள்ளியது. பின்புறம் புழக்கடைக் குச் சென்றுவிட்டாள்.

நானும் பின் தொடர்ந்தேன். அவள் நிலைமை எனக்கு ஒருவாறு தெரிந்தது. அவள்மீது ஒரு பரிதாபம். அதனால்......

புழக்கடையில் ஒரு பெண் தேம்பிக்கொண்டு இருந்த சப்தம் கேட்டது.

நெருங்கினேன் அவள்தான்!

"ஸரஸு!"

பதில் இல்லை.

இன்னும் நெருங்கித் தோளில் கையை வைத்தேன். உணர்ச்சியற்ற கட்டைபோல் இருந்தாள்—உடல் தேம்புவதினால் குலுங்கியது.

"ஸரஸு! நான் இருக்கிறேன் பயப்படாதே" என்றேன்.

"நான் ஒரு ஹிந்துப் பெண்!" என்று கூறிவிட்டுச் சடக்கென்று உள்ளே சென்றுவிட்டாள்.

நான் திகைத்து நின்றேன். ஹிந்துப் பெண் என்றால் உயிர் வாழ உரிமை யில்லையா?......

நான் எவ்வளவு நேரம் நின்றேனே!

மறுபடியும் அவள் வந்தாள்.

"ஸரஸு! என்னை மன்னித்துவிடு. நான் கூறியது வேறு. நீ அர்த்தம் பண்ணிக்கொண்டது வேறு. நான் உன்னை மணம் செய்துகொள்ளுகிறேன்!" என்றேன்.

"கொள்கைக்காக நீர் தியாகம் செய்துகொள்ள முயலுகிறீர்; அது வேண்டாம்—மிஞ்சினால் நான் உமக்குப் போகக் கருவியாகத்தான், உமது தியாகத்தின் பலி பீடமாகத்தான் நீர் கருதுவீர். அது எனக்கு வேண்டாம். நான் காதலைக் கேட்கவில்லை. தியாகத்தைக் கேட்கவில்லை. நான் தேடுவது பாசம்..........."

"அது என்னிடம் இருக்கிறது" என்றேன். அவளிடம் இவ்வளவு எதிர்பார்க்கவில்லை.

"அப்படியானால் திருமணம் வேண்டாம்......பாசம் இருந்தால் போதும்" என்று சொல்லித் தலை குனிந்தாள்.

" என்ன ஸரஸு இப்படிச் சொல்லுகிருய்—இரகசியம் பாபம் அல்லவா? கலியாணம் இதை நீக்கிவிடுமே!"

" எனக்கு உமது தியாகம் வேண்டாம், உமது பாசம் இருந்தால் போதும்!"

" நீ ஒரு பரத்தை!"

" உமது தியாகத்திற்கு நான் பலியாக மாட்டேன்—அதில் எப்பொழுதும் உமக்கு இந்தக் காலத்து நன் மதிப்பு ஏற்படும். தைரியசாலி என்பார்கள். அதை எதிர்பார்க்கிறீர். நான் பரத்தை யன்று-நான் ஒரு பெண். இயற்கையின் தேவையை நாடுகிறேன்!" என்ருள்.

எனது மனம் கலங்கிவிட்டது. வெளியேறினேன்...

மறுநாள் அவள் பிரேதம் கிணற்றில் மிதந்தது. அதன் மடியில், "நான் எதிர்பார்த்தபடியே" என்று எழுதிய ஒரு நனைந்த கடுதாசி இருந்தது.

# செவ்வாய் தோஷம்

முருக்கம் பட்டிக்கு லோகல்பண்டு ஆஸ்பத்திரி தான் உண்டு. அதாவது சின்னக் காய்ச்சல் தலைவலி, கைகால் உளைச்சல், வெட்டுக் காயம், அல்லது வேனல் கட்டி—இவைகளை மட்டிலுமே குணப்படுத்துவதற்கான வசதி அமைந்தது. கிராமவாசிகள் திடமான தேகமுள்ள வர்களானதால் பட்டணத்துக்காரர்களைப் போல நாகரிக மான வியாதிகளைப் பெறுவதில்லை. கொய்னா மாத்திரம் மத்திய சர்க்காரின் மலேரியா எதிர்ப்பு முயற்சியால், கிராம வாசிகளிடையே இலவச விநியோகத்திற்காக வேண்டிய மட்டிலும் உண்டு.

டாக்டர் வீரபத்திர பிள்ளை எல். எம். பி., அந்தப் பிர தேசத்தின் தேக சௌக்கியத்திற்குப் பொறுப்பாளியல்ல ராலும், கிராமவாசிகள் வருவித்துக்கொள்ளக்கூடிய வியாதிகளைத் தடுக்க முயற்சி செய்யும் பாத்தியதை அவ ருக்கு உண்டு. 'கை ராசிக்காரர்' என்ற அக் கிராம வாசிகளின் பட்டம் அவருடைய வைத்திய கௌரவத் திற்குப் பின்னணியாக இருந்துவந்தது.

அவருடைய வைத்தியம், தெரிந்த வியாதிகளுக்கு ராஜ பாதை; அவருக்குச் சிறிது சந்தேகம் தோன்றிவிட் டால் போதும், சாதாரணமானதானாலும், வியாதியஸ்

தனே, நூறு சத விகிதம் பயமூட்டையுடன், வண்டி கட்டி, ஜில்லா ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுவார்.

கம்பௌண்டர் வெங்கடசாமி நாயுடு அப்படியில்லே. அவருடைய ஞானம் இரண்டு களஞ்சியங்களில் இருந்தது. ஒன்று யூனியன் ஜாக் கொடிபோட்ட—டாக்டர் பிள்ளையவர்களின் கைக்குள் அடங்கிய-சீமைச் சிகிச்சை; இன்னென்று, எண்ணற்ற ஓலேச் சுவடிகளிலிருந்து திரட்டப்பட்ட மூலிகை சாஸ்திரம். வியாதியஸ்தனேக் குணப்படுத்துவதைவிட குறிப்பிட்ட முறையின் தன்மையைப் பரிசீலனே செய்வதில் நெஞ்சமூத்த முடையவர். ஆயுள் வேத சாஸ்திரத்தில் ஏற்பட்ட அபாரப் பிரேமையின் விளேவே, அவருடைய இந்த நெஞ்சமூத்தத்திற்குக் காரணம் என்று சொல்லவேண்டும்.

முருக்கம்பட்டி ஆஸ்பத்திரியில், பெரும்பான்மையான நாட்களில், குழந்தைகளுக்குப் பேதி மருந்து, அல்லது மலச்சிக்கலால் ஏற்பட்ட காய்ச்சலுக்கு மருந்து, இவை தயாரிப்பதிலேயே காலம் கழிந்துவிடும்.

அதனுல், பிணமறுக்கும் கிடங்கின் பூட்டு, துருப் பிடித்துச் சிக்கிக் கிடப்பதில் ஆச்சரியமில்லே.

கிடங்கு, ஆஸ்பத்திரிக் காம்பவுண்டின் கீழ்க்கோடி மூலேயில் இருக்கிறது. அன்று ராத்திரி பத்து மணி சுமாருக்கு ஆஸ்பத்திரித் தோட்டியான ராக்கன் வந்து எசமானிடம், கோயிலூரிலிருந்து பிணம் ஒன்று வந்திருப்பதாகச் செய்தி அறிவித்து, சாவியை வாங்கிக் கொண்டு போய்த்திறக்கக் கஷ்டப்பட்டான். முடியாமற் போகவே, பூட்டுச் சிக்கெடுக்க டாக்டர் அம்மாளிடம் எண்ணெய் வேறு வாங்கிச் செல்ல வேண்டியதாக இருந்தது.

கோயிலூர் கி. மு., அந்த வட்டாரத்தில் 'ரவுண்டு வரும்' ஏட்டு கந்தசாமி பிள்ளை—எல்லாரும் அந்தக் கேஸை எடுத்து வந்திருந்தார்கள். கேஸ் கோயிலூர்ப் பள்ளனுடைய பிரேதம். அவர்கள் சொன்ன விபரந்தான் விசித்திரமாக இருந்தது; அது வைத்திய சாஸ்திரத் திற்கு அதீதமானது.

ரத்தக் காட்டேரி அடித்துவிட்டதால் அந்தப் பள் ளன் மாண்டுபோனதாகக் கூறப்படுகிறது.

இ. பி. கோ. வில் பேயடிப்பதற்குத் தனிப் பிரிவு இல்லை என்பதைத் தெரிந்து கொண்டிருந்தும், ஏட்டுப் பிள்ளைகூட வெட்டியான் கூற்றை நம்பி ஆமோதிக்கிறார்.

டாக்டர் வீரபத்திர பிள்ளைக்குப் பிரேத பரிசோதனை யெல்லாம், வைத்தியக் கலாசாலையில் முதல் இரண்டு வரு ஷங்களில் கற்றுக்கொள்ளுவதற்காக அநாதைப் பிரேதங் களை அறுத்துப் பார்த்ததோடு முடிவடைந்து விட்டது. பட்டிக்குள் சரணாகதி யடைந்த பிறகு அவருக்கு இது வரை பிரேத பரிசோதனை உத்தியோகம் ஏற்பட்டது கிடையாது. அப்படிப்பட்டவருக்கு இம்மாதிரி விதி விலக்கான ஒரு கேஸ் சம்பவித்தது ஊர்க்காரர்கள் பொதுப் பகையில் செய்த குற்றத்தை மறைப்பதற்குச் செய்யப்படும் ஒரு முட்டாள் தனமான முயற்சியோ என்று நினைத்தார்.

கம்பௌண்டர் நாயுடுவுக்கு ஆள் அனுப்பிவிட்டு, "யாருடா அது?" என்ற அதட்டலுடன், பாதக்குறடு சரல்கற்களில் கிரீச்சிட, அவர் பிரேதக் கிடங்குக்குச் சென்றார்.

இவரைக் கண்டதும் ஏட்டு கந்தசாமிபிள்ளை போலீஸ் ஸலாம் செய்து தமது கேஸ் புஸ்தகத்தை

நீட்டிக் கையெழுத்து வாங்கிக்கொண்டு, விலகி நின்றார். "என்ன கந்தசாமி பிள்ளை, பய கதை விடுறானே!" என்று சிரித்தார் டாக்டர்.

" பேய் பிசாசு இல்லை என்று சொல்ல முடியுமா?" என்றார் கந்தசாமி பிள்ளை.

" பயந்தான் பேய். ரிப்போர்ட்லெ பேயடிச்சதுன்னு எழுதி வையாதியும், சிரிச்சுத் துப்பப்போறான் !" என்றார் டாக்டர்.

" நீங்கள்தான் முகத்தைப் பாருங்களேன் ! அப்பந் தெரியும்—ஏலே வெட்டியான், அந்தச் சாக்கெ விலக்கடா !" என்று உத்தரவு போட்டார் கந்தசாமி பிள்ளை.

டாக்டர், கையில் அரிக்கன் விளக்கை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, குனிந்து பிரேதத்தைப் பார்த்தார்.

கண் பிதுங்கி வெளியே தள்ளிக்கொண்டிருந்தது. சொல்ல முடியாத பயத்தில் முகத்தை வார்ப்பு எடுத்த மாதிரி, அவ்வளவு கோரம்! கிட்டிப்போன பற்களுக்கிடையில் நாக்கு வெளியே தள்ளிக் கிடந்தது. பல் நாக்கில் பதிந்து விறைத்துக்கொண்டதால், வாயை அகற்றிக் கூட நாக்கை உள்ளே தள்ள முடியாது.

" சாக்கை அப்புறம் எடுத்தெறி !" என்றார் டாக்டர்.

பிரேதம் ஒரு பக்கமாகச் சாய்ந்து கிடந்தது. முதுகில் பலத்த அறை விழுந்ததால் அதைத் தேக்குவதற்காக உடம்பை வளைத்த பாவனையில் வளைந்து விறைப்பேறிக் கிடந்தது. கை விரல்களும் வக்ரமாக முறுகிக் கிடந்தன.

" சரி, உள்ளே எடுத்துக்கொண்டுபோய் மேஜையிலே கெடத்துங்கடா!" என்று சொல்லி நிமிர்ந்தார் வைத்தியர்.

" உடம்பில் கோறை ஒன்றையும் காணவில்லை; ஆனால் அடிக்குக் குனிந்த மாதிரிக் கிடக்கிறது" என்று ஏட்டைப் பார்த்தபடியே கூறினார்.

அச்சமயம் இருட்டில் ஓர் உருவம் தெரிந்தது. " அதாரது?" என்ற குரலுக்கு, " நான் தான் நாயுடு!" என்று சொல்லிக் கொண்டே, கம்பௌண்டர் அருகில் வந்தார்.

" பேயடிச்ச கேஸ்கூட நம்ம ஆஸ்பத்திரிக்கு வருதுவே!" என்று சிரித்தார் டாக்டர் வீரபத்திர பிள்ளை.

" பேயா, அடிச்சா சாகத்தான்! இரண்டு மூன்று நாளாக இந்தப் பக்கம் ஒரு ரத்தக் காட்டேரி தெரிகெட்டுப் போய் அலேயிது. அதாத்தானிருக்கும்!" என்றார் நாயுடு.

" நீரும் பேயை நம்புறீரா,—உருப்பட்டாப்லே தான்!" என்று சொல்லி, டாக்டர், " ஏலே இன்னுமா— எத்தினி நேரம், சவத்தெ இளுத்துக் கெடத்த?" என்று அதட்டினார்.

" வே, கந்தசாமி பிள்ளை, நம்ம தோட்டி பாத்துக்கிடுவான்—நீங்க வேணும்னா ஆஸ்பத்திரி வெராண்டாவுலே படுத்துக்கிடுங்க—காலையிலே வேலையைச் சுருக்கா முடிச்சுடுவோம்!" என்று சொல்லிக்கொண்டே ஆஸ்பத்திரிக் காம்பவுண்டுக்கு எதிரில் உள்ள தமது வீட்டிற்குப் புறப்பட்டார்.

“ஸார், ஒரு நிமிசம், நான் ஒரு பார்வை பார்த்துப் புட்டு வந்திருதேன்!” என்றுகொண்டே உள்ளே நுழைந்தார் கம்பௌண்டர் நாயுடு.

டாக்டர் சிறிது தூரம் தள்ளிச் சென்று நின்ருர்.

உள்ளே சென்ற கம்பௌண்டர் நாயுடு சிறிது நேரத்தில் விறைக்க, விறைக்க ஓடிவந்தார்.

“வெட்டியான் சொல்லுறதில் அணுவளவு சந்தேகமில்லெ; ரத்தக் காட்டேரிதான்!” என்ருர் நாயுடு.

“உமக்கும் என்ன பைத்தியமா? வேறெ வேலெ இருந்தாப் போய்ப் பாரும்!” என்று அதட்டினர் டாக்டர்.

“இப்பவே வேணும்ஞ அறுத்துப் பாருங்க! நான் சொல்லுரது சரியா தப்பா என்று தெரியும்,” என்ருர் நாயுடு.

“பார்க்க வேண்டியது உமது மூளைக்குத்தான் வைத்தியம்!” என்று சொல்லிக்கொண்டே மேல் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு, கைகளைத் தோளுக்குமேல் உயர்த்தி சுடக்கு முறித்துக் கொட்டாவிவிட்டார் டாக்டர்.

“நீங்க எங்கூட ஷெட்டுக்குள் வாருங்க, காண்பிக்கிறேன்!” என்று தமது கட்சியை நிரூபிக்க அவசரப்பட்டார் கம்பௌண்டர்.

“என்னதான் சொல்லுமே!”

“நீங்க வாருங்க ஸார்!” என்று ஷெட்டுக்குள் நுழைந்து, பிணத்தின்மீது கிடந்த சாக்கை அகற்றினர் கம்பௌண்டர்.

“ டேய் தோட்டி! விளக்கைக் கொஞ்சம் ஒசத்திப் பிடி!” என்று சொல்லி, மடியிலிருந்து சூரிக் கத்தி ஒன்றை எடுத்தார்.

அவர் என்னதான் காட்டப்போகிருர் என்பதைப் பார்க்க ஷெட் வாசலில் நின்றுகொண்டிருந்த டாக்டர், “ என்னவே வேலே!” என்று சொல்லுமுன், பிணத்தின் கையில் கத்தியைக் குத்திக் கிழித்து, மாங்காயைப்பிளந்து காட்டுவதைப்போல், காயத்தை விரித்துப் பிடித்துக் காண்பித்து, “ இதில் ஒரு சொட்டு ரத்தம் இருக்கிறதா பாருங்கள்!” என்ருர்.

“ ரத்தம் இருந்தாலும் பிணமானபின் வடிவதை எங்கே கண்டீர்?” என்றுகொண்டே நெருங்கிஞர் டாக்டர்.

“ ரத்தம் வடியாது, உறைந்தாவது இருக்க வேண்டுமே! எங்கே பாருங்கள்?” என்ருர் நாயுடு.

டாக்டர் குனிந்து பரிசோதித்துப் பார்த்தார். ரத்தத்தை வடிகட்டிப் பிழிந்தெடுத்த சதைபோலக் கிடந்தது பிணம்.

டாக்டர் வேறு ஓர் இடத்தில் பரிசோதிக்கும்படி கூறிஞர். அங்கும் அப்படியே இருந்தது. டாக்டருக்குப் புல்லரித்தது.

“ அப்புறம்!” என்ருர். அவருடைய நாக்கு மேல் வாயில் ஒட்டிக்கொண்டது.

“ வாருங்க, போவோம்!” என்று வெளியே வந்த கம்பௌண்டர், “ இவன் ரத்தம் எங்கே இருக்கிறது என்று பார்க்க வேண்டுமா?” என்ருர். “ கோயிலூர்க் கணியான்

செத்துப் போனனே அவனைப் பொதைக்கத்தானே செய் தார்கள் ?" என்று கேட்டார் தோட்டியிடம்.

" ஆமாஞ் சாமி ! அங்கனெதான் இவனும் மாட்டிக் கிட்டான் !" என்றான் தோட்டி ராக்கன்.

" எப்படா நடந்தது ?"

" சாயங்காலம் சாமி !"

" வருகிறீர்களா, போவோம் ?" என்றார் கம் பௌண்டர்.

" அவ்வளவு நிச்சயமா உமக்கு ? அப்படியானல் போவோம் !" என்றார் டாக்டர்.

" எட்டுப் பிள்ளையையும் கூட்டிக் கொள்ளுவோம்; ஏலே ராக்கா, மம்பட்டியை எடுத்துக்கிட்டு கூட வா !" என்றார் நாயுடு.

" நான் வரமாட்டேன் சாமி; எனக்குப் புள்ளை குட்டி யில்லே !" என்றான் ராக்கன்.

" நாங்க இருக்கரப்ப என்னடா பயம் ? சும்மா வா. ஒண்ணும் நடக்காது !" என்று தேற்றினார் கம் பௌண்டர்.

## 2

இந்தப் பரிசோதனைக் கோஷ்டி கோயிலூர் பள்ளர் சுடுகாட்டை அடையும்போது மணி பன்னிரண்டு.

வானத்திலே துளி மேகங்கூடக் கிடையாது. நில வொளியும் இல்லை ; வெறும் நட்சத்திரப் பிரகாசம்தான்.

சுடுகாடு ஆற்றங்கரையிலிருந்தது. அது ஒரு வெட்ட வெளி, நாலைந்து பர்லாங்குக்கப்புறந்தான்

அந்தப் பகுதியில் மரம் என்ற பேருக்கு ஒன்றிரண்டு பனை முளைத்துக் கிடந்தது.

"எங்கடா அவனைப் பொதெச்சாங்க?" என்று அதட்டினர் டாக்டர். தம்மை இழுத்தடிக்கிருனே அந்தக் கம்பௌண்டர் என்று அவருக்கு நினைப்பு.

"அதோ, அந்தக் குத்துக்கல் தெரியுதே அதுதான் சாமி!" என்ருன் ராக்கன். அவன் சொல்லி வாய் மூட வில்லை.

நாயின் ஊளைபோல ஆரம்பித்த ஒரு சப்தம், கண நேரத்துக்கு நேரம் சுருதிகூடி, ஆந்தையின் அலறலாக மாறி, வெறும் பேய்ச் சிரிப்பாக வான முகட்டைக் கிழித்தது.

கட கடவென்று விக்கி விக்கிச் சிரிப்பது போன்ற அலறல் ஒரு கணம் வானத்தையே நிறைத்தது.

அடுத்த கணம் அமைதி.

அதே பேய்-அமைதி!

நடந்துகொண்டிருந்தவர்கள் யாவரும் தரையுடன் தறையிட்டது மாதிரி கல்லாய் உறைந்து நின்றனர்.

"சாமி, நான் வரமாட்டேன், பேய்!" என்று ஓட்டம் பிடித்தான் ராக்கன்.

மண் வெட்டி, ஓடிய வேகத்தில், அவன் கைவிட்டு நழுவியது. அதை எடுத்துக்கொள்ள அவன் தாமதிக்க வில்லை.

"நாய் ஊளையிட்ட மாதிரி இருந்துதல்ல!" என்ருர் ஏட்டுப் பிள்ளை.

"சுடுகாட்டில் நாய்க்கா பஞ்சம்; அது நாயில்லை!" என்றார் கம்பௌண்டர்.

மூவரும் அந்தக் கணியானைப் புதைத்திருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

கம்பௌண்டர் நாயுடு விளக்கை உயர்த்திப் பிடித்துக்கொள்ள, ஏட்டுப்பிள்ளை தைரியமாக வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு, மண்வெட்டியால் தோண்ட ஆரம்பித்தார்.

ஆற்றருகில் உள்ள இடந்தானே; வேலை சுளுவாக நடந்தது.

"அதோ வெள்ளையா என்னமோ தெரிகிறது!" என்றார் கம்பௌண்டருடன் ஒண்டிக்கொண்டிருந்த டாக்டர்.

ஏட்டுப் பிள்ளை மண்வெட்டியைக் குழிக்கு வெளியில் எறிந்துவிட்டு, கைகளால் மண்ணைப் பரசி எடுக்க ஆரம்பித்தார். கம்பௌண்டரும் கையிலிருந்த விளக்கை டாக்டரிடம் கொடுத்துவிட்டு, உள்ளே இறங்கி, துணியின் முனையைப் பிடித்து இழுத்துத் தூக்கவே, பிரேதம் தென்பட்டது.

டாக்டர் குழிக்குள் விளக்கைப் பிடித்துக்கொண்டு குனிந்து பார்த்தார்.

பிரேதம், கைக் கட்டு, கால் விரல்கட்டு, வாய்க் கட்டுகளுடன் மலத்திக் கிடத்தப்பட்டிருந்தது.

புதைத்து நான்கு நாட்களாகியும் நெற்றியிலிருந்த சந்தனமும் குங்குமமும் அழியவில்லை. கழுத்தில் கிடந்த மாலை வாடவில்லை. பிரேதம்போல் கட்டப்பட்டு ஒருவன் படுத்துத் தூங்குவதுபோலவே தென்பட்டது.

"அவன் எமை ஆடுது" என்று அலறிக்கொண்டே விளக்கை நழுவவிட்டார் டாக்டர்.

நல்ல காலம். கம்பௌண்டர் அதை ஏந்திக் கொண்டார்.

பிரேதத்தின் வலது இமை ஆடியது. யாவரும் அதையே பார்த்து நின்றார்கள்.

பிணம் எழுந்து உட்கார்ந்து பேசும் என்று எதிர் பார்ப்பதுபோலிருந்தது அவர்கள் பார்வை.

வலது கண் இமைகள் மெதுவாக அசைந்தன. உள் ளிருந்து சிரமப்பட்டு ஒரு கரு வண்டு வெளியே வந்தது. வெளிச்சத்தைக் கண்டு திகைத்தது போலத் தள்ளாடி யது. பிறகு சிறகை விரித்து உயரப் பறந்து சென்றது.

"வண்டுகளைப் போல அது ரீங்கார மிடவில்லை, பார்த்தீரா?" என்றார் நாயுடு.

வண்டு போனதையே பின்பற்றிய கண்கள் அதை இருளில் இழந்தன.

"இதோ பாருங்கள்!" என்று பிரேதத்தின் வலது கரத்தைக் கத்தியால் கிழித்துக் காயத்தை விரித்துப் பிடித்தார் நாயுடு.

புது ரத்தம் குபு குபு என்று பொங்கி அவர் விரல் களை நனைத்தது!

* * *

மூவரும் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தார்கள்.

"ரிப்போர்ட் எப்படி எழுத?" என்று கைகளை மண லால் தேய்த்துக்கொண்டே கேட்டார் ஏட்டுப் பிள்ளை. தன் கையில் ரத்தம் பட்டது போல அவ்வளவு பிரமை.

"பயத்தால் மரணம் என்று எழுதிப்புடும்!" என்றார் கம்பௌண்டர்.

"நாயுடு, இது எப்படித் தெரிந்தது?" என்றார் டாக்டர்.

"அவன் ஜாதகத்தைப் பார்த்திருக்கிறேன்; அவனுக்குச் செவ்வாய் தோஷம்; அந்த ஜாதகமெல்லாம் ரத்தக் காட்டேரிதான்!" என்றார் கம்பௌண்டர்.

# கருச் சிதைவு

டெலிபோன் மணி காதை அறுத்தது.

ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை பம்பாய் சர்க்கார் மின்சாரத் திட்ட அறிக்கையில் மூன்றாவது பக்கத்தில் நான்காவது பாராவை மொழி பெயர்த்து எழுதி, ' இருக்கிறது ' என்று போட்டு முடித்தார்.

டெலிபோன் மணிவிடவில்லை. காதை அறுத்துக் கொண்டிருந்தது.

மேஜையிலிருந்து எழுதின கடுதாசிகளைக் கம்போஸிங் ரூமுக்கு எடுத்துச் சென்றுகொண்டிருந்த வடிவேலு ஓடிவந்து, ரிஸீவரைக் காதில் எடுத்து வைத்துக்கொண்டு " ஹலோ! யாரது?" என்ற சந்தேக வார்த்தைகளைக் கக்கினான்.

" இந்த மகத்தான திட்டம் பம்பாய் மாகாண வாசிகளுக்கு மட்டுமல்லாமல்...." என்று எழுதியபடி மங்கிய டைப் கடுதாசிகளில் கண்ணைச் சொருகிக்கொண்டிருந்த ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை அவர்களிடம், " டெலிபோன், ஸார்!" என்று கொண்டே ரிஸீவரைக் கையில் கொடுத்தான்.

பிள்ளையவர்கள் சாவதானமாகப் பேனவை மேஜை மேல் வைத்தார். சொருகு பலகைமேல் சாய்த்து வைத்தெழுதிய அட்டையை மேஜைமேல் வைத்தார். ஒரு பக்கமாகச் சாய்ந்து தமது ஜோல்னைப் பையைத் தேடிப் பிடித்து அதில் கைக்குட்டையைத் தேடி, அங்கில்லாமல் 'பேப்பர் வெய்ட்' அடியிலிருந்த அதை எடுத்து நெற்றியைத் துடைத்துக்கொண்டார். ஷர்ட் கைகளைத் தள்ளிவிட்டுக்கொண்டு. "என்ன டெலிபோனு?" என்று ரிஸீவரை வாங்கிக்கொண்டு, "யாரது? ஓஹோ நீங்களா? என்ன இரண்டு மூணு நாளா இந்தப் பக்கத்திலியேகாணலியே......அப்படியா? என்ன, கதையா? அதுக்கென்ன? இன்னிக்கு சாயங்காலமா? ரெடின்னு வச்சுக்குங்க!" என்று சொல்லிவிட்டு, பம்பாய் மாகாண மின்சாரத் திட்டத்தில் ஈடுபட்டார். மும்முரமாக ஈடுபட்டால் டைப் கடுதாசிகள் எத்தனை நேரந்தான் மேஜைமேல் நிற்க முடியும்? நேராகக் குப்பைக் கூடையில் ஐக்கியமாயின.

"வடிவேலு புருப்!" என்று காயதாப் பண்ணிவிட்டு, மேஜைக்குள் இருந்த வெற்றிலைச் செல்லத்தை,—வர்ணம் போன மசாலா டின்னுக்கு, அவர் செல்லமாக இட்டிருக்கும் பெயர்—எடுத்துச் சாவதானமாக வெற்றிலை போட ஆரம்பித்தார்.

அவருக்கு வெற்றிலை போடுவது வெறும் சம்பிரதாயமல்ல—மகாயக்ஞம்!

யந்திரம் எழுதி இந்த இந்தத் திக்கில் இன்னின்ன தேவதைகளை நிறுத்திவைக்க வேண்டும் என்றிருப்பது போல, அவருடைய செல்லத்தில் இன்னின்ன சரக்குகள் இன்னின்ன இடத்தில் இருக்கவேண்டும் என்பது நியதி; ஆனல் இருக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு. எப்பொ

ழுதும் எல்லாம் இருக்காது என்பதைப் பொது விதியாகக் கொள்ளுவதால் ஸ்ரீ சுந்தரம் பிள்ளை தம்மைத் தவருக அர்த்தப்படுத்திக் கொண்டதாகக் கருதமாட்டார்.

தென்புலத்தில், அதாவது யமன் திசையில் சுண்ணும்பு மட்டிலும் எப்பொழுதும் இருக்கும்—காறைக் கட்டியாகவாவது. அதைச் சூரணமாகவோ அல்லது அவகாசமிருந்தால் மத்தித்து அதன் பூர்வாசிரமத்திற்கு அதைக் கொண்டுவந்தோ, வைத்துக்கொண்டபின், வெற்றிலையை ஒவ்வொன்ருக எடுத்து, காம்புகளைக் கீறிவிட்டுச் சுண்ணும்பைத் தடவுவார். பிறகு அதில் சீவல் பாக்கோ அல்லது அது இருந்த இடத்தில் கிடக்கும் தூசு தும்பட்டமோ, அதைச் சுமை ஏற்றிப் பொட்டலமாக மடித்து ஒரே கவளமாகப் போட்டுக் கொள்ளுவார்.

பிறகு புகையிலை தேடு படலம். சாதாரணமாக அது அருகில் இருக்கும் நண்பருடைய பிரதேசத்தில் ஆக்ரமிப்பாகவே இருக்கும். வாய்மொழியாக ' புகையிலை யிருக்கிறதா ?' என்று மரியாதைக்கு எச்சரித்துவிட்டு, பொட்டலத்தை எடுத்துக் கொண்டுவந்து மறுபடியும் நாற்காலியில் உட்கார்ந்தபின், புகையிலை சுற்றியிருந்த கடுதாசியை மட்டும் எறிந்து விட்டு, மீதியை ஒரு தடவைக்கு உபயோகித்துவிடுவார்.

இது அவர் பொதுவாக அனுஷ்டிக்கும் விதி.

அன்று அவர் தமது சகபாடியின் மேஜைக்கு அருகில் சென்ற பொழுது அவரும் அதே விருத்தியில் ஈடுபட்டிருந்தார்.

" என்னப்பா வந்துட்டியா, எங்கிட்ட ஒரு தரத்துக்குத்தான் இருக்கும் !" என்று அங்கலாய்த்தார் அவருடைய நண்பர். புகையிலையை வாயில் ஒதுக்கிக்கொள்ளும் வரை பிள்ளை அதைக் கேட்கவில்லை.

" என்ன, இல்லையா ? நான் வாங்கிக் கொண்டுவரச் சொல்லுகிறேன் !" என்று சொல்லிக்கொண்டே தம் மேஜைக்கு வந்தவர், ஒரு புஸ்தகத்திற்குள் ஐக்கிய மானார்.

" ஸார், கொஞ்சம் புரூப் பார்த்துக் கொடுங்கோ ! பேஜ் போடணுமாம் !" என்று குழைந்தான் வடிவேலு. அவனுடைய குழைவுக்கு மரியாதை என்று அர்த்தம்.

" புரூப் எங்கே ? கொண்டுவந்தால் தானே !" என்று புஸ்தகத்தின் மீதுள்ள கவர்ச்சியால் சீறினார் பிள்ளை.

" அப்பவே கொண்டுவந்து வச்சுட்டேன் " என்று சொல்லிக்கொண்டே எடுத்துக் கையில் கொடுத்தான் வடிவேலு.

பிள்ளையவாள் அவசரத்தில் 'காலி' 'காலி' யாகத் தாவி, மெய் யெழுத்துக்களையும் ஒற்றுக்களையும் கார்வார் செய்து, கையெழுத்திட்டு வடிவேலு கையில் ஒப் படைத்து விட்டு, மறுபடியும் புஸ்தகத்தில் சரணாகதி யடைந்தார்.

மணியும் மூன்ருயிற்று. மறுபடியும் டெலிபோன் மணி யடித்தது.

"ஹல்லோ ! யாரது ?... நீங்கள்தானா ? இன்னும் ஒரு மணி நேரத்தில் பையனை அனுப்புங்கோ...எத்தனை பக்கம் ?....நாலு பக்கமா ? வரும் வரும்...லெட்வுட் பண் ணிடுங்கோ......அப்பன்னா நானே கையிலே எடுத்துக் கொண்டு வந்துவிடுகிறேன்; பையன் புறப்பட்டு விட் டானா ? அப்படின்னா இங்கியே இருக்கேன் " என்று சொல்லி விட்டுப் பேனாவையும் கடுதாசியையும் எடுத் தார்.

பேனாவைத் திறந்து வைத்துக்கொண்டு வெள்ளைக் கடுதாசியைப் பார்த்தபடியே பேனாவை எழுதும் பாவனையில் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

சரிப்படவில்லை. மேஜையின்மீது அட்டையையும் பேனாவையும் வைத்துவிட்டுக் கைகளைச் சுடக்குவிட்டார். பிறகு சாவதானமாகக் கொட்டாவி விட்டார்.

மேஜையிலிருந்த பேனாவும் அட்டையும் கையிலேறி விட்டு, மறுபடி புறப்பட்ட இடத்திற்கே போய்ச் சேர்ந்தன.

மேஜையின் சொருகை உருவித் திறந்து நிதான மாக வெற்றிலை மடித்துப் போட்டுக்கொண்டார் ஸ்ரீபிள்ளை.

புகையிலைக் கட்டத்திற்கு வரும்பொழுது சுறுசுறுப் புத் தட்டியது. மேஜையிலிருந்த எழுத்துச் சாதனங்கள் கையிலிறங்கின.

"ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா இருந்தான்...." என்று எழுதிவிட்டுப் பேனாவை மூடி மேஜைமீது வைத்துவிட்டார்.

சிறிது நெரம் பேந்தப் பேந்தச் சுற்றுமுற்றும் பார்த்து விழித்துக் கொண்டிருந்தார்.

அப்புறம் சில நிமிஷங்கள் கழித்து...."அவன் ஒரு கதைப் பைத்தியம். சண்டைக்கு வந்த எதிராளி ராஜா விடம் 'உனக்குக் கதை சொல்லத் தெரியுமா?' என்று ஒரு தூதுக் கோஷ்டியை அனுப்பிக் கேட்டுவிட்டா னாம்...."

சுந்தரம் பிள்ளை, மேஜையில் பேனா முதலிய சில்ல றைத் தொந்தரவுகளை வைத்துவிட்டு வெளியே வராந்தா

விற்குச் சென்று வெற்றிலையைத் துப்பிவிட்டு வாயைக் கொப்புளித்தார். ஒரு டம்ளர் ஜலம் குடித்துவிட்டு வந்து உட்கார்ந்துகொண்டு மறுபடியும் பேனவை எடுத்தார்.

"....அவனுடைய மந்திரிக்குக் கதை என்றுலே பிடிக்காது. கதை கேட்பதால் தன்னுடைய ராஜ்யத்தின் மீதிருந்த ஆதிபத்திய உரிமையை இழந்து வெறும் சிற்றரசனுகப்போன ராஜாவுக்குப் புத்தி சொல்லிக் கொடுக்க ஒரு யோசனை செய்தான் மந்திரி.

"சர்க்கார் சம்பிரதாயப்படி அதற்கு ஒரு திட்டம் வகுக்க ஒரு விசேஷக் கமிட்டி ஏற்படுத்துவது என்று முடிவு கட்டப்பட்டது......."

மறுபடியும் பேனவை மூடி வைத்துவிட்டு, மோட்டு வளையைப் பார்த்து யோசனையிலாழ்ந்தார் ஸ்ரீ பிள்ளை.

"...இந்த விசேஷக் கமிட்டிக்கு பிரிட்டனிலிருந்து சட்ட அநுபவம் வாய்ந்த ஒரு நிபுணரையும், கதாசாஸ்திரத்தில் பாண்டித்தியம் பெற்ற ஒரு பிரபலஸ்தரையும், பிரிட்டிஷ் ராயல் வைத்திய சங்கத்தைச் சேர்ந்த ஒரு வைத்திய நிபுணரையும் தருவிப்பது என்று தீர்மானிக்கப் பட்டது."

"இந்த விசேஷச் செலவுக்கு சமஸ்தான கஜானவில் போதுமான பணம் இல்லாததினல், ஒரு புதிய வரி போடுவதா, அல்லது ஒரு கடன் பத்திரம் பிரசுரிப்பதா என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது."

"அதற்குள் இந்தச் சமாசாரம் பெரிய ராஜாவுக்குத் தெரிந்துவிட, இவ்வித முயற்சிகள் செய்யச் சிற்றரசருக்கு சன்னதின் ஷரத்தின்படி உரிமை கிடையாது என்று ஓலை அனுப்பினன்."

" நாலுவிதமாகவும் யோசித்துவிட்டு இந்த யோசனை களை அப்படியே ஒதுக்கிவிடுவதுதான் நன்மை என்று மந்திரி நினைக்கலானன்."

" மந்திரியின் நினைப்பு காரியாம்சத்திற்கு வருமுன் ராஜாவுக்கு சஷ்டிஅப்தபூர்த்தி விழா வந்துவிட்டது. பெரிய ராஜா இந்தச் சிற்றரசனுக்கு வெகுமதியாக ஒரு பெரிய கதைப் புஸ்தகத்தை அனுப்பினன். அது ஒரு லக்ஷத்திச்·செல்வானம் பக்கங்கள் கொண்டது."

" புஸ்தகத்தைக் கண்டதும் அதைப் பூராவும்படித்து முடிப்பதற்குத் தமக்கு ஆயுசு இருக்குமோ என்று நினைத்து, சிற்றரசன் சிம்மாசனத்திலிருந்துகொண்டே கண்ணீர் விட்டான்."

" மந்திரி பிரதானிகளும் பிரஜைகளும் ராஜாவைத் தனியாக அழ விட்டுவிடுவதா என்று நினைத்து அனு தாபம் காட்டி கூட அழுதார்கள்."

" இந்தச் சமயத்தில் பிரதம மந்திரிக்கு அழுகை வர வில்லை. நெடுமரம்போல நின்ருன்......"

" நெடுமரம் போல நி..." என்று மறுபடியும் அடித்து விட்டு எழுதினர் சுந்தரம் பிள்ளை.

கதை தானகவே, தன்னிஷ்டம் போலவே, பின்னிக் கொண்டு போவதைக் கண்டு பயந்துபோன சுந்தரம் பிள்ளை இந்த நெடுமரம் என்ற மதில் சுவர் வந்ததும் நிம்மதியுடன் பெருமூச்செறிந்தார்.

கதை-வண்டியைத் தமக்குப் புரியும் வழியில் திருப்பு வதற்காக, அந்த அழாத பிரதம மந்திரியைச் சிரச்சேதம் செய்தார்.

அந்த வேலை முடிந்த பின் கதைக்கு உயிர் சந்தேக மின்றி அகன்றுவிட்டது என்பதை நாடி பிடித்துப் பார்த்

தவர்போல நிச்சயப்படுத்திக்கொண்டு, அவனை உயிர்ப் பிக்கப் பரமசிவனைக் கூப்பிடலாமா, அல்லது வெறும் மந்திர வாதியைத் தருவித்து அவனுக்கு ராஜா மகளைக் கட்டிக் கொடுத்துக் கதையை மேளதாளத்துடன் மங் களமாக முடித்து விடலாமா என்று யோசித்துக்கொண்டி ருக்கையில், "என்ன ஸார் முடிந்து விட்டதா?" என்று கொண்டே நுழைந்தார் சுந்தரம் பிள்ளையிடம் கதை கேட்ட ஆசிரியர்.

"பையனை அனுப்புகிறேன் என்றீர்களே?" என்று சொல்லி எழுந்தார் ஸ்ரீ பிள்ளை.

"பையனிடம் கடுதாசி அனுப்பிவிட்டால் என்று தான்......." என்று சிந்தித்துக்கொண்டே மேஜையி லிருந்த கடுதாசிகளை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார் ஆசிரிய நண்பர்.

"இதுதானா நாலு பக்கம்?—போஸ்டர் எழுத்தில் போட்டாக்கூட நாலு பக்கம் வருமோ என்னமோ? இதற்கு என்ன அர்த்தம்?" என்றார்.

"நீர்தான் சொல்லுமே!"

"சரி வாருங்க, காப்பி சாப்பிட்டு வரலாம்!" என்றார் நண்பர்.

"வருவது எதற்கு, நேரா வீட்டுக்குப் போவோமே?" என்றார் சுந்தரம் பிள்ளை.

"அங்கே போனால் எழுதுவீரா?" என்றார் நண்பர்.

"போன பிறகு பார்த்துக் கொள்ளலாம், நீங்க எழுந்திருங்க!" என்று கொண்டு மேஜையை எடுத்துப் பூட்ட ஆரம்பித்தார் பிள்ளை.

துண்டை எடுத்து உதறி மேலே போட்டுக்கொண்டு புறப்பட்டார் நண்பர்.

"கொஞ்சம் இருங்க, வெற்றிலை போட்டுக்கொண்டு வருகிறேன்" என்று உட்கார்ந்துகொண்டார் ஸ்ரீ. பிள்ளை.

வெற்றிலை போட்டு முடிந்தது.

"ஸார், ஒரு நிமிஷம்!" என்று சொல்லிக் கடைசி வரியை எழுதினார் பிள்ளை.

"தான் படித்த அத்தனை கதைகளையும் படிக்க வேண்டும் என்று ராஜா அந்த மந்திரிக்குத் தண்டனை அளித்தான்." என்று எழுதி, "இப்படி முடித்து விடலாமா?" என்றார்.

"எப்படியாவது முடித்தால் போதும்; என்னிடம் குப்பைக் கூடை இருக்கிறதை மறந்து விட்டீரா?" என்றார் நண்பர்.

"அது என்னிடமே இருக்கிறதே!" என்று சொன்னார் பிள்ளை.

ராஜாவும் மந்திரி பிரதானிகளும், இங்கிலீஷில் கசங்கும் மாகாண மின்சாரத்திட்டத்துடன் கிடந்து நசுங்கினர்.

# சணப்பன் கோழி

பரமேச்வரன் ஓர் இலட்சியப் பைத்தியம். கலாசாலையை விட்டு வெளியே வரும்பொழுது, தற்காலத்திய புதுமை இளைஞர்களின் வெறி இருந்ததில் ஆச்சரியம் இல்லை. முதல் முதலாகப் பட்டினி கிடந்தாலும் கவர்ன்மெண்டு வேலைக்குப் போகவே கூடாது என்ற சித்தாந்தம். அவன் நிலைமைக்கு வேலை கிடைப்பது ரொம்ப சுலபம். அப்பா பென்ஷன் உத்தியோகஸ்தர். இவன் சித்தாந்தத்தைக் கேட்டதும், இத்தனை நாள் போஷித்த அப்பாவுக்குப் பலத்த சந்தேகம்—பரமேச்வரனுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டதோ என்று—உண்டாயிற்று. அதிலே தகப்பனுருக்குக் கொஞ்சம் ஏமாற்றம். காலை மடக்கிக்கொண்டு முரண்டு செய்யும் மாடு என்றுல் வாலைக் கடித்தாவது எழுப்பலாம்; பரமேச்வரனுக்கு வாலில்லையே!

மனிதனுடைய வாழ்க்கையில்—தென்னிந்தியத் தமிழனுடைய வாழ்க்கையில்—வேலையை எதிர்பார்த்துக் காலத்தைக் கலாசாலையில் கழித்துப் படிக்கவைக்கும் முதல் முக்கியத்திற்குப் பிறகு, பெரிய இடத்துப் பெண்ணை—கை நிறையப் பணம் கொண்டுவரும் பெண்ணை—கலியாணம் செய்துவைப்பது இரண்டாவது

முக்கியமான விஷயம். தான் பென்ஷனுவதற்குள், தன் மகனுக்கு வேலை பார்த்துக் கொடுத்துவிட்டு, தன் அந்திமக் கிரியைகளைப் பையன் சரியாக நடத்தும் நிலையில் கொண்டுவந்து வைப்பது மூன்ருவது வேலை.

பரமேச்வரனுடைய தகப்பனுருக்கு முதல் வேலை விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது. இரண்டாவதோ, அவருக்குப் பெரிய ஏமாற்றமாகிவிட்டது.

பையன் பெரிய இடத்துப் பெண்ணை, கை நிறையப் பணமும், கழுத்து நிறைய நகையும் போட்டுவரும் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள முடியாது என்று சொல்லி விட்டான். பையனது தர்க்கம் தகப்பனுருக்கு விளங்கவில்லை. சுகமாக இருக்க விரும்புவதுதான் மனித இயற்கை என்பது தகப்பனுர் அனுபவம். அதில் இன்பம் கிடையாது என்பதுதான் பையன் சித்தாந்தம். தகப்பனுருக்குப் பையன் நடத்தை அர்த்தமாகவில்லை.

ஏழைப் பெண், சிறிது படித்த பெண், முக்கியமாகக் குண செளந்தரியமுடைய பெண் வேண்டும் என்ருன் பையன். முதல் இரண்டு நிபந்தனைகளும் சாதாரணமாக நிறைவேறிவிடும். மூன்ருவது? அதுதான் அதிசயம். பரமேச்வரன் எதிர்பார்த்தபடி, ஆசைப்பட்டபடி ஒரு பெண் கிடைத்தது.

லால்குடிப் பெண். ஏழைப் பிரைமரிப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் வீட்டுப் பெண் சாரதா. அந்த மூன்று நிபந்தனைகளுக்கு மேல் நான்காவது நிபந்தனை ஒன்றையும் நிறை வேற்றி விட்டாள் சாரதா. அவள் நல்ல அழகி. பரமேச்வரன், கண்டதும் காதல் என்பதெல்லாம் பற்றிப் படித்திருக்கிருன். அதை அசம்பாவிதம் என்று நினைத்தவன்! கலியாணமான பிறகுகூடக் கட்டுக் கடங்காத பாசம் ஒருவனைப் பிடிக்கும் என்பதிருந்தால், பரமேச்

வரன் அதற்கு ஓர் உதாரணம். அவன் சாரதாவிடம் தன்னை மறந்தமாதிரி, அவளும் பரமேசுவரனிடம் தன்னை மறந்தாள். இது பக்கத்திலிருப்பவருக்குப் பொருமைப் படும்படியாக இருந்தது.

பரமேச்வரனுடைய வாழ்க்கைச் சகடம் கலியாண மாகும் வரை 'கிர்ர்' என்ற சப்தமில்லாமல் மையிட்டது போல் ஓடிக்கொண்டிருந்தது. கலியாணமான பிறகு, முதல் அதிர்ச்சி, தனது சாரதாவின் மனம் கலங்குமோ என்று தான். கலங்கும் நிலைமையும் ஏற்பட்டது. பறவை பெரிதான பிறகும் கூண்டில் இருக்க, அதுவும் கூட ஒரு ஜோடி சேர்த்துக்கொண்டு இருக்க, பெற்ற குருவிகள் இடம் கொடுக்குமா? இது இயற்கை. சிறிது மனத்தாங் கல், சாரதாவை அவள் பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு அவனை வேலை தேடும்படி யாக்கிற்று.

2

**எ**ங்கெங்கோ அலைந்து கடைசியாகப் பம்பாயில் அவனுக்கு எண்பது ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது. கிடைத்த மறுமாதம் கூட்டிப்போவதாக எண்ணம். சந்தர்ப்பம் ஒத்து வரவில்லை. எப்பொழுதும் சாரதா தியானந்தான். பக்கத்திலிருப்பவர்கள் பெண் டாட்டிக் கிறுக்கனே என்று கூட நினைக்கும்படி இருக் கிறதென்று அவனுக்குத் தெரியும். பரமேச்வரன் என்ன யோகீஸ்வரனா, மனத்தை ஒரே இடத்தில் கட்டி வைக்க!

சாரதாவுக்குத் தினம் ஒரு கடிதம். பதிலும் அடிக் கடி வந்துகொண்டிருந்தது-அவளுடைய குதலை எழுத் தில். அதைப் படிப்பதில் அவனுக்கிருந்த பிரேமை, இலக்கிய ரஸிகனுக்குக் கம்பனைப் படிக்கும்பொழுதுகூட இருந்திருக்காது.

திடீரென்று அவள் கடிதம் வரவில்லை.

முதலில் என்னென்னவோ அபாயங்கள் அவளுக்கு நேர்ந்திருக்கலாம என்று நினைத்தான். அவள் தகப்பனுர் ஏன் எழுதவில்லை? ஏமாற்றத்தினுல் அவள்மீது காரண மற்ற கோபம் தோன்றலாயிற்று. அவள் தகப்பனுர் மீதும் சிறிது ஓடிற்று. தனது இலட்சியம் என்பதற்காகச் செய்த தனது திருமணத்தை அவமதித்தார்களல்லவா என்ற கோபம். நிலையாகச் சாரதாமீது கோபப்பட அவனுல் முடியவில்லை. ஏமாற்றம் வளர வளரக் கோபமும் வளர்ந்தது.

அவளுக்கு ஒரு முரட்டுத்தனமான கடிதம்—அவள் ஹிருதயத்தைப் பிளக்கும் கடிதம்—எழுதிக்கொண்டு போய்த் தபாலில் போட்டான். அதனுல் சிறிது மானஸிக வெற்றியின் குதூகலம்; குமுறும் நெஞ்சில் பின்னுல் சமா தானம் ஏற்படவில்லை.

தகப்பனும் மகளும் வியாதியாகப் படுத்திருக் கிருர்கள் என்று அவனுக்குத் தெரியுமா?

அரை மணி நேரம் கழித்துத் தந்திச் சேவகன் அவன் மாமனுர் இறந்து போனதாக ஒரு தந்தியைக் கொடுத்து விட்டுச் சென்ருன்.

## 3

பரமேச்வரனுக்கு நெஞ்சில் சம்மட்டியால் அடித்தது போல் பட்டது. மாமனுர் மரணத்தில்கூட வருத்தம் ஏற் படவில்லை. அந்தக் கடிதம்—அது அவனை என்ன செய் யும்! அதைத் தடுக்க வேண்டும். பம்பாயிலிருந்து லால் குடி என்ன பக்கத்துத் தெருவா? அல்லது பெட்டியில் போட்ட காகிதத்தை எடுக்க முடியுமா? ஒரே ஒரு வழி. கடிதம் மத்தியானந்தான் கிடைக்கும். அதற்கு முன்பு நேரில் சென்று விட்டால்?

லீவு எழுதிப் போட்டுவிட்டு ரயிலுக்குச் சென்றான். வழி முழுவதும், கடிதமும் சாரதாவும் மாறி மாறித் தோன்றிக்கொண்டிருந்தனர். தனது முட்டாள்தனத்திற்கு நொந்துகொண்டான். தனது குற்றத்தை அவள் மன்னிப்பாளா? அவள் மன்னிப்பாள். பரமேச்வரன் மனம் மட்டும் அவனை மன்னிக்க மறுக்கிறது.

பரமேச்வரனும் மாமனார் வீடு வந்துவிட்டான். வரவேற்பு அழுகையும் துக்க விசாரணையும் ஓய்ந்தன. சாரதா கதவின் பக்கம் வந்து நின்றாள்.

பரமேச்வரன் கண்களைத் துடைத்துக்கொண்டான். துக்கமும் தேக அசௌகரியமும் அவளை உருமாற்றி விட்டன. துயரத்தின் உரு! முந்திய அழகின் சாயை! பரமேச்வரனுக்குத் துக்கம் நெஞ்சை யடைத்தது. கண்கள் கலங்கிவிட்டன.

"சாரதா!" என்றான். கூப்பிடும் பொழுதே கடிதத்தின் நினைவு வந்தது.

"எனக்கு உடம்புக்குக் குணமில்லாமல் இருந்தது. நீங்கள் ஏன் காயிதம் எழுதலே? உடம்புக்கென்ன? இளைத்திருக்கிறீர்களே!" என்றாள்.

"வேலை ஜாஸ்தி!" என்றான், கடிதத்தை நினைத்துக் கொண்டே.

"நான் உனக்குக் கடிதம் எழுதியிருந்தேனே!" என்று அவன் வாய் தவறிச் சொல்லியது.

"வரவில்லை!" என்றாள் சாரதா.

தடுத்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் பரமேச்வரனுக்குக் குதூகலம்.

"நான் வெளியே போய் வருகிறேன்!" என்று தபால்காரனை எதிர்பார்த்துக்கொண்டு வெளியே வந்தான் பரமேச்வரன்.

தபால்காரன் வழியிலேயே சாரதாவின் தம்பியிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டது அவனுக்குத் தெரியாது. தபால்காரன் பேசாமல் போய்விடவே சாயங்காலம் வரும் என்று சிறிது அசட்டையாக இருந்தான்.

அவன் வரும்பொழுதெல்லாம் அவனுக்கு மாமனார் வீட்டில் ஒரு சிறிய அறை. அதிலேதான் அவன் தங்குவது.

மத்தியானம் சாப்பிட்டுவிட்டு அங்கு வந்தான். அப்பொழுது அதை நினைக்கவில்லை, கடிதம் கிடைக்கவில்லை என்ற நினைப்பில். உள்ளே வந்ததும் திடுக்கிட்டு நின்றான்.

தலைவிரி கோலமாக அவன் படத்தின் முன்பு, கையில் கடிதத்துடன் கிடந்தாள் சாரதா.

"சாரதா!" என்று எடுத்தான்.

"உங்கள் கடிதம் வந்தது!" என்றாள். உள்ளிருந்த துயரம் பொங்கி ஓலமிட்டுவிட்டாள்.

"சாரதா!" என்றான்.

அவள் முகம் அவன் மார்பில் மறைந்தது. ஏங்கி, ஏங்கி அழுது அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

அவள் மனது தணலாக வெந்தது. அவள் மன்னிப்பாளா?

"சாரதா?"

"என்னை உடன் கூட்டிப்போங்கள்!" என்றாள். கடிதத்தின் காரணம் அவளுக்குத் தெரிந்துவிட்டது.

அவள் பெண்.

# திருக்குறள் செய்த திருக்கூத்து

துப்பறியும் இரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டர் வித்தல் ராவ் என்ருல் சாதாரண மக்களுக்குத் தெரியாம லிருக்கலாம்; அது ஒரு குற்றமல்ல—இரகசியப் போலீஸ் அல்லவா. ஆனுல் போலீஸ் இலாகாவில் அவரது பிரக்யாதி தெரியாதிருப்பவன் உத்தியோகத்தி லிருப்பதைவிட பலசரக்குக் கடை வைக்கலாம். துப்பறியும் தொழிலில் அவர் யாருடைய சிஷ்யர் என்று நீங்கள் அறிந்திருந்தால் இவ்வளவு தூரம் நாம் எடுத்து எழுதவேண்டாம். மேல் நாட்டு ஷெர்லாக் ஹோம்ஸும் தென்னுட்டு பிரக்யாதி பெற்ற துப்பறியும் கோவிந்தனும் அவரது ஹ்ருதய கமலத்தில் தனித் தொகுதி பெற்று இருந்தனர். ஸ்ரீலஸ்ரீ திகம்பர சுவாமியார் அவர்களே துப்பறியும் தொழில் பஞ்சாட்சரத்தை அவர் காதில் உபதேசித்து அருளியது. இவ்வாறு மேல்நாடும் கீழ்நாடும் சம்மேளித்துப் பரிணமித்த இரகஸியப் போலீஸ் வீரர் வித்தல் ராவின் திறமையைப்பற்றி இன்னும் சந்தேகிப்பவர்களை சுயமரியாதைக் கார நாஸ்திகர் என்று தள்ளிவிடலாம்.

நமது வித்தல்ராவிற்கு மாறு வேடத்தில் அபார நம்பிக்கை. அதிலும் தன்னுடைய திறமைக்கு எந்தத் தென்னிந்திய நாடகமேடை சார்லி சாப்ளினும் போட்டி

போடமுடியாது என்பது இரண்டாவது நம்பிக்கை. சாதாரணமாக தாலூகா ஆபீஸ் குமாஸ்தா அல்லது எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர் மாதிரிதான் காட்சியளிப்பார். சிற்சில முக்கிய சமயங்களில், மேல்நாட்டு உடைகளையணிந்து ஒரு ஜாவா சுருட்டு சகிதமாகப் புறப்பட்டுவிட்டால், அவரை வித்தல் ராவ் என்று நிரூபிப்பவர்களுக்கு என்ன வெகுமதி வேண்டுமானாலும் கொடுத்து விடலாம். சிவபிரான் சிற்சில சமயங்களில் அர்த்த நாரீசுவரராகத் திகழ்வதும் உண்டு; கிப்ளிங் கவிதைக்கு விதிவிலக்காக, நமது வித்தல்ராவ், கீழ்–மேல் நாடுகளின் நடையுடை பாவனைகள் இரண்டும் கலந்து பரிணமித்த ஒட்டுமாங்கனியாகத் தனித் தமிழ் சிவத்தை முறியடிப்பதும் உண்டு.

சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நெருக்கடியான காலம். இரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டர், தம்மை ஒரு ஆதிசேஷனாக நினைத்து ஊக்கத்துடன் உழைத்துவருகிறார். வேதாந்திகள் "சர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்பார்கள்; இன்ஸ்பெக்டரோ சர்வம் சந்தேக மயம் ஜகத் என்பார். சிவப்புப் புடவை முதல் சிவப்புக் கழுத்துப்பட்டி ஈருக சதிக்கூட்ட அங்கத்தினர்களின் சின்னமாகவே கருதுவார். தாடிவைத்த பைராகி முதல் நாவிதனுக்குக் கூலி கொடுக்க விதியில்லாத கூலிக்காரன் வரை தொழில் புரட்சி அங்கத்தினர்கள். இவ்வாறு இவர் தம் ஆழ்ந்த அனுபவத்தால் கண்டுபிடித்த விஷயங்களுடன், எடுத்த கேஸ்கள் எல்லாவற்றிலும் வெற்றி பெற்று வாகையே சூடி வந்திருந்தும், அவரது அந்தராத்மாவின் இலக்ஷியமாகிய சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பதவி இன்னும் இலக்ஷிய உலகிலேயே இருந்துவருகிறது. அடிக்கடி தான் எதிர்பார்த்தும் எட்டமுடியாத ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் உடையுடன் தமது சூஷ்ம சரீரம் நட

மாடும் தோற்றமே இவருக்கு மிகுந்த உற்சாகத்தை யளித்து வருகிறது.

சாயங்காலம் 5 அல்லது 5½ மணியிருக்கலாம். இரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டர் வித்தல் ராவ், போலீஸ் சூப்பிரண்ட் துரைபங்களாவை நோக்கி தான் வழக்கப்படி செய்யும் புண்ணிய க்ஷேத்திர யாத்திரையை நடத்திக் கொண்டு இருந்தார்.

முன்னறிக்கைகொடாது தன்னை வேட்டையாட வரும் மோட்டார்களுடன் கிளித் தட்டுமறித்துக் கொண்டே சூப்பிரண்ட் துரையவர்களின் பங்களா வாசலை யடைந்தார். இதற்குள் சாயங்காலமும் மேகங்களுடன் கூட்டுறவுசெய்துகொண்டு வெளிச்சத்தை அதிக மங்கலாக்கிவிட்டன. கண்ணுக்கெட்டிய தூரம் எல்லாத் திசைகளிலும் பார்த்தார். ஒரு மனிதப்பிராணிகூட இல்லை! பிறகு பூமியில் எங்காவது வெடிகுண்டு ஏதேனும் ஒருவேளை மறைத்து வைக்கப் பட்டிருக்கக்கூடுமோ வென்று கூர்ந்து கவனித்தார். அப்படி ஒன்றுமில்லை. ஆனால் அவரது தீட்சண்யமான பார்வை ஒரு சிறு துண்டு கடிதத்தின் மீது சென்றது; உடனே பாய்ந்து சென்று வெகு ஜாக்கிரதையாக எடுத்தார். ஹா! ஆச்சரியம்! அது சிவப்பு இங்கியில் எழுதப்பட்டு இருந்தது. சாதாரண நோட்டுப் புத்தகத்திலிருந்து கிழிக்கப்பட்ட காகிதம் தான். எழுதப்பட்டிருந்த விஷயந்தான் அதிக சந்தேகத்தை உண்டு பண்ணியது.

" துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி
துப்பர்க்கு துப்பாய தூஉ மழை."

என்று இருந்தது. கையெழுத்தையும் அதில் எழுதியிருந்த மாதிரியையும் பார்த்தால் சட்டசபை அங்கத்தினராக வாவது அல்லது சென்னை சர்வகலாசாலை மாணவனாக

வாவது இருக்க வேண்டும் என்று ஊகித்தார். ஆம்! எழுதியவருக்கு புரட்சி எண்ணங்கள் முதிர்ந்து பைத்தியம் பிடித்திருக்க வேண்டும்; இல்லா விட்டால் மந்திரத்தை உச்சாடனம் செய்வதுபோல் தப்பும் தவறுமாக துப்பாக்கி என்ற வார்த்தையை எழுதி இருப்பாரு? மழை திடீரென்று வந்து அவரது எழுத்து வேலையைத் தடை செய்திருக்க வேண்டும். பின் ஏன் "தூ மழை" என்று அதையும் எழுதவேண்டும்? யோசிக்க, யோசிக்க, துப்பறியும் வித்தல் ராவிற்கு, ஓர் பயங்கரமான, அபாயகரமான, கொலைப் பைத்தியம் பிடித்த புரட்சிக்காரனுடைய வேலை என்பது உறுதியாயிற்று. ஆனல் யார் என்ற மறு கேள்வி பிறந்தது. காலடித் தடங்கள் தரையில் இருக்கின்றனவா என்று பூமாதேவியை ஏறக்குறைய முத்தமிடும் அளவு, முகத்தைக் குனிந்து கூர்ந்து நோக்கிஞர். ஒரே விதமான காலடித் தடங்கள் முட்புதர் நிறைந்த மைதானத்தை நோக்கி ஓர் ஒற்றையடித் தடத்தின் வழியாகச் செல்வதைக் கண்டார். முதலில் அவற்றை அளந்துகொண்டு வெகு ஜாக்கிரதையாக, 'ஙப்போல் வளை' என்பதற்கு நடமாடும் மனித உதாரணமாகச் சென்ருர். உடை முட்புதர்கள் படர்ந்து ஓர் ஆள் உயரம் வளர்ந்திருந்ததால் அம்மாதிரி நடப்பதற்கு வித்தல் ராவைப்போல் தொழிலில் பயிற்சி இருந்தால்தான் முடியும்.

இவ்வாறு பதுங்கிப் பதுங்கிச் சென்று ஓர் முட்புதரை நெருங்கிஞர். அதன் மறு பக்கத்தில் பிரசங்கம் செய்வது போல் ஒரு மனிதக் குரல் கேட்க, கிளைகளின் ஊடே முட்கள் கண்களில் குத்தாமல் நோக்கிஞர். அவரது தீட்சண்ய பார்வையில், பத்துப் பதினைந்துபேர் கூடிய ஒரு சிறு கூட்டத்தின் முன், சிவப் புக்கழுத்துப் பட்டியணிந்த ஒரு வாலிபன் உற்சாகமாகப் பிரசங்கம் செய்வது தெரிந்தது. சிவப்புக் கழுத்துப் பட்டி! சதியாலோசனைக் கூட்டம்! உடனே உடல் முழுவதும் வியர்த்தது.

புரட்சிக்காரருக்கும் நமக்கும் 4½ அடிதான் தூரமிருந்த தென்றால் யாருக்குத்தான் வியர்க்காது!

"இக்கொடுமையை, அநாகரீகமான, மனிதத் தன்மை யற்ற கொடுமையை இனிப்பொறுக்க மாட்டோம். நாளைக்குத் தீர்மானமா......" என்ற பிரசங்கியாரின் வார்த்தைகள், "ஆம்! ஆம்!" "நாளைக்கு"; "கட்டாயமாக", என்ற வார்த்தைகளுடன் சபையோரின் கரகோஷத்தினிடையே மறைந்தது. நமது ராவ்ஜியின் மனக்கண் முன், "இரகசியப் போலீஸ் நிபுணர் கொலை" என்ற பத்திரிகைத் தலையங்கங்கள் முதல், உபகாரச் சம்பளம் பெறும் தன் விதவையான மனைவிவரை, சினிமாப்படம் போல் தோன்றி மறையலாயின. ஆனால் அடுத்த நிமிஷம் அவரது அந்தராத்மா அவரது இலக்ஷியமான சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உடையுடன் மனக் கண்முன் தோன்றி ஓர் புதிய உற்சாகத்தையும் வீரத்தையும் அளித்தது. அங்கேயே சற்று உட்கார்ந்து கவனிப்பதென்று நிச்சயித்துக் கொண்டார்.

இதற்குள் பிரசங்கமும் முடிந்துவிட்டது. அவர்கள் எல்லோரும் ஒவ்வொருவராக, தலைவன் நீட்டிய காகிதத்தில் கையெழுத்துப் போட்டுக்கொண்டிருந்தார்கள். இரத்தத்தினால் எழுதா விட்டாலும் சிவப்பு இங்கியினாலாவது இருக்கவேண்டுமென்பது வித்தல் ராவினது திடமான நம்பிக்கை.

இப்பொழுது தலைவனைக் கூர்ந்து கவனிக்க அவகாசமிருந்தது. தனக்கு உளவு கொடுத்த சிறு துண்டுக் கடுதாசியை அவன்தான் எழுதியிருக்க வேண்டுமென்று பட்டது. பேச்சும் குரலும், ஓர் பயங்கரமான பைத்தியக்கார புரட்சிக்காரனுடையது போலிருந்தது. அவனது கால் பாதங்களும் தாம் முன்பு அளவு எடுத்த தட்டத்தையே ஒத்திருந்தது.

சபை கலைந்தது. ஒவ்வொருவராக பாதையின் வழியாக பசுப்போல் செல்ல ஆரம்பித்தனர். துப்பறியும் இன்ஸ்பெக்டரும் புறப்பட்டார். வலக்கையில் ஓர் நீண்ட உடை மரத்தின் முள் இருந்தது. இடது கையில் கூர்மையான பென்ஸில் இருந்தது. புரட்சிக்காரர் கண்டு கொலை செய்ய வந்தால் உயிர்போகுமளவாவது ஒரு வீரப்போர் நடத்தி யிருப்பார் என்பது திண்ணம். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமன்றோ ! ஆனல் அப்படிப்பட்ட அசம்பாவிதமான விஷயம் ஒன்றும் நடக்கவில்லை. அவர்கள் யாவரும் சென்றபின் வெகு ஜாக்கிரதையாக மாறுவேடம் புனைந்தார். தலையில் முக்காடு இட்டு கிழவன் நடக்கிற பாவனையாக இரண்டாவது குழவிப் பருவம் எய்தி, இடையிடையே இருமல் பஜனையுடன் அந்தப் புரட்சித் தலைவனைத் தொடர்ந்தார். நாளைக்கு ஓர் மர்மமான சம்பவம் நடக்கப்போகிறது என்பதைத் திட்டமாக ஊகித்து அறிந்துகொண்டார்.

காலை பத்து மணி. பாளையங்கோட்டைக் கலாசாலை. விளையாடுமிடத்தில் இருந்த ஒரு பெரிய மாமரத்தினடியில் முந்திய நாள் புரட்சிக்கூட்டத்தார் உல்லாசமாகப் பேசிக்கொண்டே புத்தகங்களை அம்மானை விளையாடிக் கொண்டிருந்தனர். புரட்சித் தலைவர் என்று சொல்லப் பட்டவர் எவ்வளவு கம்பீரமாகக் கடிகாரத்தைப் பார்க்க முடியுமோ அவ்வளவு கம்பீரமாகப் பார்த்துவிட்டு, திடீரென்று ஒருவனை நோக்கி, " சங்கர் நீ அங்கு நின்று பண்டிதர் கிளாசிற்குப் போனதும் வந்து சொல் " என்று அனுப்பிவிட்டு, தனது புத்தகங்களின் இடையே வைக்கப்பட்டிருந்த நீண்ட உறையை ஜாக்கிரதையாகத் திறந்து, ஓர் பத்திரம் போன்ற கடுதாசியை மிகவும் ஊக்கமாக வாசித்துக்கொண்டிருந்தார். உறையில் " மாணவர் வீர சுதந்திரம் " என்று பெரிதாக எழுதப் பட்டிருந்தது. இவர்களுக்குச் சற்று தூரத்தில் தலையில்

முக்காடுபோட்டு நரைத்த மீசையையுடைய கிழவர் இவர்களைப் பார்த்தும் பார்க்காததுமாகக் கண்காணித்து வந்தார்.

கலாசாலை மணி, "பாடம் ஆரம்பிக்கலாயிற்று," என்பதை நீண்ட ஓசையில் பிலாக்கணம் வைத்தது. சங்கர், "அவர் போய்விட்டார்" என்று தலைதெறிக்க ஓடி வந்து சொன்னான். உடனே எல்லோரும் புரட்சித் தலைவருக்குப்பின் வரிசையாக வந்து நின்றார்கள். சிவப்புக் கழுத்துப்பட்டி, வண்ணானை நெடுநாளாக ஏமாற்றிக் கொண்டிருக்கும் கருப்புக் கதர் சட்டை, ஒரு மல் வேஷ்டி நம் "புரட்சித் தலைவரது" தேகத்தை அலங்கரித்தன. வலது சட்டைப் பையில் ஏதோ பருத்துத் துருத்திக் கொண்டிருந்தது.

எல்லோரும் தலைவனைத் தொடர்ந்தனர். ஊர்வலம் வகுப்பின் கதவுவரைபோய் நின்றதும், புரட்சித் தலைவர், மிகுந்த காம்பீர்யமாக நாடகத்தில் அயன் ராஜபார்ட் முதல் தடவை பிரவேசிப்பதுபோல் நடந்து சென்று, தனது கையிலிருந்த நீண்ட உறையை, பண்டிதர் அருகிலிருந்த மேஜையின்மேல் அனாயாசமாக வீசி எறிந்துவிட்டுத் திரும்ப, வெளியிலிருந்த கூட்டம், "மாணவர் வாழ்க ! மாணவர் வெல்க !" என்று ஏக குரலில் கோஷித்தது. பிறகு புரட்சி வீரர் தன் சைன்யத்தை அழைத்துக் கொண்டு தனது மாமரக் கொட்டகைக்கு வந்துவிட்டார். அவசர அவசரமாக இவர்களைத் தொடர்ந்த கிழவனை யாரும் கவனிக்கவில்லை.

பண்டிதருக்கு இம்மாதிரியான நடத்தை மிகவும் ஆச்சரியமாக இருந்திருக்குமென்றாலும் முகத்தில் ஒன்றும் தெரியவில்லை. பண்டிதரல்லவா ! பிறகு அந்த

உறையைப் பிரித்து உள்ளிருந்த பத்திரத்தை வாசித்தார். அது பின் வருமாறு :

## மாணவர் சுதந்திரப் பத்திரம்

பாளையங்கோட்டைக் கலாசாலை பதின்மூன்றாவது வகுப்பு அல்லது பி. ஏ. முதல் வருஷத்து மாணவர்களது "மாணவர் சுதந்திர சுயமரியாதைச் சங்கத்தின்" ஆதரவின் கீழ் 13—8—33-ல் நடந்த பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள். இச் சங்கம்,

(1) மாணவர் சுயமரியாதைக்கு இழுக்காக, அநாகரீகமான மனிதத்தன்மையற்ற, கொடூரமான முறையில் பண்டிதர் நடப்பதை வெறுத்துக் கண்டிக்கிறது.

(2) மாணவர்களின் தொன்று தொட்டு வந்த உரிமைகளை (வியாசங்கள், புத்தகங்கள் கொண்டுவராமலிருத்தல், முதலியன) மறுபடியும் வற்புறுத்துகின்றது.

(அ) தண்டம் வசூலிக்கும் கோழைத் தனமானசெய்கையைத் தனது முழு ஆத்ம பலத்துடனும் கண்டிக்கிறது.

(3) மனிதரை விலங்கினத்தினின்றும் பாகுபடுத்தும், சிரிக்கும் உரிமை, மாணவர்களுக்கு உண்டு என்பதை மிகவும் அழுத்தமாக வற்புறுத்துகிறது. மாணவர்கள், தனியாகவோ சேர்ந்தோ, ஏக குரலாகவோ சிரிக்கலாம் என்பதைப் பண்டிதருக்கு மிகவும் கண்டிப்பாக அறிவிக்கிறது.

மாணவர் வாழ்க !

மாணவர் வெல்க !

மாணவர் சுதந்திர
சுயமரியாதைச் சங்கம்.

இதை முழுவதும் வாசித்த பின்னும் பண்டிதர் முகத்தில் ஓர் புன்னகைதான் தவழ்ந்தது.

வேலைக்காரனைக் கூப்பிட்டு, இச்சுதந்திரப் பத்திரத்துடன் ஓர் சீட்டும் எழுதிப் பிரின்ஸிபாலுக்கு அனுப்பி விட்டு, அங்கு மிகவும் பொறுமையுடன் காத்திருந்த மரப் பெஞ்சுகளுக்கு, வெகு உற்சாகமாக மௌனப் பிரசங்கம் ஒன்று—தனித் தமிழ் வீர வாழ்க்கையைப் பற்றி யிருக்கலாம்—நடத்தி விட்டு நேரம் முடிந்ததும் பிரின்ஸிபாலைக் காணச் சென்றார்.

பிறகு இருவருமாக புரட்சி வீரர்களுடைய மாமரக் கோட்டையை முற்றுகையிட அணுகினார்கள். அங்கு செல்லும் வரை பிரின்ஸிபாலின் கோபாக்கினி மீசையில் துடித்துக் கொண்டிருந்ததானாலும், அவர் நெருங்கியதும் தனது கைக் குட்டையால் வெள்ளைக் கொடி காட்டுவது போல் காட்டி, ஆங்கிலத்தில் "நடேசா இங்கே வா" என்று அந்தப் புரட்சித் தலைவனை தமது சமரசக் கமிட்டிக்கு அழைத்தது ஓர் சுத்த வீரனது உயரிய மனோ தர்மத்தைக் காட்டியது. நடேசன் தனது வீரர்களுக்குக் கண்களினால் சமிக்ஞை செய்துவிட்டு கம்பீரமாக நடந்து சென்று, தனது பூரண சுதந்திரத்தை பிரின்ஸிபால் முன்னும் நிலை நாட்டப் பயப்பட மாட்டான் என்பதைக் காண்பிக்குமாறு தனது (துருத்திக் கொண்டிருந்த) பையில் கையைப் போட்டான்.

"அடே பாவி! என்ன செய்யப்போகிறாய்" என்று கத்திக்கொண்டே அங்கிருந்த கிழவர் நடேசன் மீது பாய்ந்து அக்கையை எட்டிப் பிடித்து வெளியே இழுக்க முயன்றார்.

தனது பூரண சுதந்திரத்தை நிலைநாட்டும் சமயத்தில் குறுக்கே விழுந்து தடை செய்யும் கிழவரையா

நடேசன் பொருட்படுத்துகிறவன். "முடியாது" என்று அழுத்தமாகவே சொல்லிவிட்டு, பையில் வைத்த கையை எடுக்காமல் தனது தலைமைப் பதவிக்கு வரவிருந்த இகழைத் தனது முழு ஆத்ம பலத்துடனும் துடைத்து விட்டான். கிழவரோ தமது பிடிக்கும் திறமையில், உடும்பின் உடன் பிறந்த சகோதரன்போல் காணப் பட்டார். நடேசன் இதை மாணவர் சுதந்திர சுயமரி யாதைச் சங்கத்தின் குருக்ஷேத்திரமாக எண்ணினான். வித்தல் ராவ் இதை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை நிலை நாட்டும் இரண்டாவது பிளாசி யுத்தமாக மதித்தார்.

இம்மாதிரி எதிர்பாராத விதமாய் தமது சமரச மகா நாட்டிற்கு வந்த இடையூறு பிரின்ஸிபால் துரை யவர்களின் மனதில் ஒரு நெருக்கடியான நிலைமையை ஏற்படுத்தி விட்டது. தமது தலைவரின் வீர யுத்தத்தைக் கண்ட மாணவர்கள், "மாணவர் வெல்க!" "ஸ்ரீயுத நடேசருக்கு ஜே!" என்று கோஷித்து உற்சாக மூட்டினார்கள்.

பிரின்ஸிபாலும், பண்டிதரும் என்ன செய்வதென்றறி யாமல் திகைத்து நின்றனர்.

இதற்குள் கிழவருக்கும், குமரருக்கும் நடந்த முஷ்டி யுத்தம், ஜயலக்ஷ்மியை, யாருக்கு வெற்றியைக் கொடுப்பது என்னும் ஓர் நெருக்கடியான நிலைமையில் கொண்டு வந்து வைத்துவிட்டது. கடைசியில் கிழவர் திடீரென்று தந்திரத்தை மாற்றி, குஸ்தித் திறமையால், வாலிபன் கையை அப்படி இப்படித் திமிற விடாமல் பற் றிக் கொண்டார். அந்தோ! அன்று மா.சு.சு. சங்கத்தின் தோல்வியாகவும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வெற்றி யாகவும் போர் முடிந்தது. கிழவரானாலும் சிங்கத்தின் தைரியத்தைப் படைத்த வெற்றி வீரனைக் கண்டு யாவரும் சித்திரப் பதுமைபோல் நின்றனர்.

இடக்கையால் நடேசனைப் பிடித்து இறுக்கிக் கொண்டு, மிகுந்த காம்பீரமாகவும், அனுவசியமாகவும் தனது வலது கையால், வெள்ளைக்காரர் தொப்பியை எடுக்கும் பாவனையாக, பொய் மீசையை எடுத்துவிட்டு "நான்தான் வித்தல்ராவ் சி. ஐ. டி." என்று பிரின்ஸிபாலுக்குத் தனது சுய உருவைக் கடாக்ஷித்தருளினார். காரியம் என்னதென்று விளங்காவிட்டாலும் பிரின்ஸி பாலுக்கு வித்தல்ராவின் நாடகத் திறமையைப் போற்றாமலிருக்க முடியவில்லை. அவர் உடனே, "உமக்கு எனது மாணவருடன் என்ன வேலை?" என்றார்.

"அவன் ஒரு பயங்கரமான புரட்சிக்காரன். உம் மேல் வெடிகுண்டை எறிய எத்தனித்தான். நேற்றே இவன் சூழ்ச்சியை எல்லாம் கண்டுபிடித்துவிட்டேன். என்னை இவன் ஏமாற்ற முடியுமா?" என்று சொல்லிக் கொண்டே புரட்சித் தலைவன் சட்டைப் பையிலிருந்த அந்த பயங்கரமான வஸ்துவை எடுத்தார். அது கசங்கிப் போன ஒரு சோற்றுப் பொட்டணமாக இருந்தது உடனே யாவரும் சிரிக்காமலிருக்க முடியவில்லை.

"வாலிபனாகிலும் இவ்வளவு தந்திரம் உன்னிடம் இருக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. என்னை ஏமாற்றி விட்டதாக மனப்பால் குடிக்காதே! என் கையில் ரிகார்டு இருக்கிறது," என்று நடேசனை நோக்கி உறுமிவிட்டு, பிரின்ஸிபால் துரையிடம் பேச எத்தனித்தார்.

இப்பொழுது வித்தல் ராவ் தாம் வரம்பு மீறிக் கலவரம் விளைவிக்கவில்லையென்பதை பிரின்ஸிபாலுக்கு ருசு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் தான் கண்டு பிடித்த விஷயங்களை எடுத்துச் சொல்லி சிறு துண்டுக் கடிதத்தையும் காண்பித்தார்.

" எங்கே அந்தத் துண்டுக் கடிதத்தைப் பார்ப்போம்" என்ருர் பண்டிதர்.

" இதோ இந்தாருங்கள் " என்று கொடுத்தார் பிரின்ஸிபால். பண்டிதர் அதை வாங்கிக் கவனித்துவிட்டு, " நடேசனுக்குத் தமிழில் போய்விடும்போலிருக்கிறதே. எத்தனை தப்பு, குறள் கூடவா, சீர்தளைகளைக் கவனித்து எழுதத் தெரியாது?" என்று பண்டிதர் சிறிது கோபப் பட்டுக்கொண்டார்.

" இது இவன் எழுதியதுதான் என்று தெரிந்தும் இவனையும் இவன் கூட்டத்தையும் ஏன் கைதி செய்யக் கூடாது !" என்று தமது கட்சியை ஸ்தாபித்தவர் போல் வித்தல் ராவ் கர்ஜித்தார்.

பண்டிதர் மிகவும் சாவதானமாக "இது திருக்குறள்; இதற்கு பரிமேலழகர் உரை சொல்லுகிருர்......" என்று ஆரம்பித்து ஒரு சிறு பிரசங்கம் நடாத்தினர்.

வித்தல்ராவ் தனது முழு சாமர்த்தியத்தாலும் ஒவ் வொரு அம்சமாகக் கண்டு பிடித்த கேஸ் அந்த சோற்றுப் பொட்டணத்தைப்போல் சிதைந்து போனது மிக்க பரிதாபகரமாக யிருந்தது.

பிரின்சிபாலும், "நீங்கள் வகுப்பிற்குப் போங்கள். ராயர்வாள், உமது துப்பறியும் திறமையை வேறிடத்தில் காட்டும். நீர் என் (மார்பைத் தட்டிக் கொண்டு) மாண வரை சந்தேகித்தது என்னைச் சந்தேகித்தது மாதிரி. இனி இங்கு அரை நிமிஷமும் நிற்கக் கூடாது. போம்" என்று ஒரே கல்லில் இரண்டு பட்சிகளை யடித்த மாதிரி தமது அதிகாரத்தை நிலை நாட்டி மறைந்தார்.

ஐந்து நிமிஷங்களுக்கப்புறம் மா. சு. சு. சங்கத்தின் அங்கத்தினர்கள் மாமரக் கோட்டையில் மருந்திற்காவது கிடையாது.

வித்தல் ராவ் திரும்பிப்போன யாத்திரையை வர்ணிக்க நம்மால் முடியாது.

தம்மை ஏமாற்றி தனது கேஸைப் பாழாக்கின திருக்குறளையும் அதை எழுதியவரையும் அவர் இன்றும் மன்னிக்கவேயில்லை.

# மன நிழல்

## I அவள் . . . .

வாழ்க்கையில் அடிபட்ட சர்ப்பம்போல் அவள் நெஞ்சு துவண்டு நெளிந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு நெளிவிலும் அதன் வேதனை சகிக்க முடியாமல் தவித்தாள். அடுத்த வீட்டுப் பொருள் கண்ணுக்கு அழகாக இருக்கலாம்; ஆனால் தனக்கு அது சொந்தம் என்று நினைப்பதால் தனக்கே கிடைத்துவிடுமா என்று அவள் ஒரு நாள்கூட நினைத்துப் பார்த்தது கிடையாது. அப்படி அவள் அன்று நினைத்திருப்பாளானால், இந்த அடியின் வேகம் நெஞ்சில் இவ்வளவு ஆழமாகப் பதிந்திராது.

மூன்று வருஷங்களுக்கு முன்னால் அவனை முதல் முதல் பார்க்கும்போது, இப்படி ஏதாவது வரும் என்று அவள் நினைத்தாளா? எத்தனையோ சிநேகிதர்கள் வருகிறார்கள், போகிறார்கள்; அவர்களில் அவனும் ஒருவன் என்றுதான் அப்போது நினைத்தாள். நாளாக நாளாக அவன் பழக்கம் நெருங்கி வளரவே அவளும் அவனிடம் சகஜமாகப் பேசுவாள், பழகுவாள். நிம்மதியாகப் போய்க் கொண்டிருந்த வாழ்க்கைப் பாதையில் கண்டெடுத்த நல் முத்தாக அவன் அவளுக்குத் தோற்றமளித்து வந்தான்.

எதிர்பாராத அந்த தனத்தை கையில் இறுக மூடிக்கொள்வதில் தப்பில்லை என்று அவள் நினைத்தாள்.

நந்தவனத்தில் எத்தனையோ விதமான பூக்கள் மலர்கின்றன. ஆனால் முள்ளுக்கு நடுவில் நிற்கும் ரோஜாப்பூதான் அவளுடைய கண்களுக்கு அழகாக இருந்தது. அதைப் பறித்தால் கையில் முள் தைக்குமோ என்று நினைத்துத் தயங்கி நிற்கும்போது, அதுவே அவள் எதிரில் தரையில் விழுந்தால் கையால் எடுத்து கண்களில் ஒத்திக் கொள்ளச் சொல்லியா கொடுக்கவேண்டும்? அடுத்த வீட்டுத் தோட்டம் என்பதையும் அவள் மறந்தாள். பூவுக்கு உடையவர் வேறொருவர் என்பதையும் மறந்தாள். ஆசையோடு அதை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக் கொண்டாள். சாசுவதமாக நெஞ்சில் அதை அமரவைத்தாள்... தன்னுடைய சகலமும் அவனே என்று நினைத்து நிலை கொள்ளாத சந்தோஷத்தில், தன்னையும் மறந்து, தன்னுடையவை என்று சொல்லத் தக்க எல்லாவற்றையுமே அவனது காலடியில் போட்டு, அவனுடைய அடிமையாகி விட்டாள். தன்னுடைய ஜீவனின் உயிர் நாடியைக் கூட அவனது காலடியில் சமர்ப்பித்து விட்டாள்.

ஒவ்வொரு நாளும் அவன் வரவுக்காக சாயங்காலத்தைக் கூவி அழைத்துப் புழுவாகத் துடித்துக் கொண்டிருப்பாள்.

எவ்வளவு இருட்டிவிட்டாலும், ஒவ்வொரு நாளும் அவன் தரிசனம் கிடைக்காமல் போகாது. மணி அடித்து எழுந்த மாதிரி, ஒவ்வொரு நாளும் அவன் சாயங்காலம் ஆறு மணிக்கு அவள் முன் வந்து நிற்பான். அவனை எதிரில் பார்த்த பிறகுதான் அவள் 'வெப்பிராளம்' சிறிது தணியும். மத்தியானங்களில் தனிமையாக இருக்கும்போதெல்லாம் சாயங்காலம் வரும் அவனிடம் என்னவெல்லாமோ பேச வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருப்

பாள். ஆனால் அவனை எதிரில் கண்டவுடன் அத்தனையும் மறந்துபோகும். பேசுவதற்கு விஷயம் அகப்படாமல் தவித்து வாய் பேசா ஊமை மாதிரி அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே பரம திருப்தி அடைவாள்.

அவர்களுடைய அன்பு, அணையில்லா வெள்ளம் போல் காலத்தோடு ஒட்டிப் பெருக்கெடுத்துப் போய்க் கொண்டிருந்தது. சந்தோஷத்தோடு சரிபாதி துக்கமும் கலந்துதான் இருக்கும் என்ற உண்மையைத் தெரிந்து கொள்ள அவளுக்கு இத்தனை நாட்கள் வேண்டியிருந் தன. தன்னைப்போன்ற பாக்கியசாலி இந்த உலகத்தி லேயே இல்லை என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அவளுடைய நினைப்புகள் எல்லாம், ஒரு துரும்பு பட்டா லும் 'டபார்' என்று வெடித்துத் தரையில் துவண்டு விழும் பலூன்மாதிரி சிதறிவிடும் என்று அவள் சொப்பனத்தில் கூட நினைத்ததில்லை. கடிகாரத்தைப் பார்த்துப் பார்த்துப் பகல் பொழுதை உந்தித் தள்ளி விட்டுக்கொண்டு இருந் தாள். இரவிலோ இன்பக் கனவுகள்; நாட்கள் போய்க் கொண்டிருந்ததுகூட அவளுக்குத் தெரியாது. அவனைப் பார்த்து மாதக் கணக்காகி விட்டது என்றால், அவள் மனம் பதறித் தவிக்காமல் என்ன செய்யும்? அன்புக் கோட்டையில் அவனைச் சிறை வைத்திருந்தாள். அதி லிருந்து எப்படியோ அவன் தப்பித்துக்கொண்டு போய் விட்டான். எவ்வளவு பிரியமாக இருந்தான்! ஒரு சிறு தலைவலி வந்தால் கூட அவள் கஷ்டப்படுவதைப் பார்த்து சகியாத அவனா இப்பொழுது மாதக்கணக்காக அவளைப் பார்க்காமல் இருக்கிறான்? எல்லாம் வெறும் வேஷந்தானா? அல்லது புருஷர்களுடைய மனமே இவ் வளவுதானோ? அவளை அவன் மறந்து விட்டானா? அவ்வ ளவு லகுவில் மறக்கக்கூடிய விதத்திலா அவர்கள் பழகி யிருந்தார்கள்? அல்லது அவன் ஞாபகம் வைத்துக் கொள்ளக்கூடிய விசேஷ அழகு ஒன்றும் அவளிடம்

இல்லையா? அவனுக்காக, அவன் அன்புக்காக, விழுந்து விழுந்து பிராணனை விட்டதின் பலன் இவ்வளவுதானா? தம் சௌகரியத்திற்காக மற்றவர் மனதைக் கொலை பண்ணுவதுதான் புருஷர் குணமோ? சீ! இது அப்பொழுதே தெரியாமல் போய்விட்டதே! இவ்வாறு அவள் தனது பின்புத்திக்காக வருந்தினாள். சீ! சீ! ஒரு நாளும் அப்படி இராது; ஏதோ, என்ன வேலையோ? வர சௌகரியப் பட்டிருக்காது; வராமல் இருக்க மாட்டான்! இப்படிச் சொல்லிக்கொண்டும் மனதைத் தேற்றிக் கொள்வாள்.

அனுபவம் நீடிக்க நீடிக்கப் பாத்திரம் பழசாவது சகஜந்தானே? அதே மாதிரி அன்று அவன் கண்களுக்கு பிரமாதமாகத் தெரிந்த விசேஷம், இன்று அவளிடம் இல்லாமல் போய்விட்டது போலும்! இல்லைதான், வாஸ்தவம். அவன் கண்களை உறுத்தக் கூடிய அழகு அவளிடம் இல்லைதான். ரொம்ப சாதாரணம் என்றாலும் பிறர் கண்ணுக்கு விகாரமாகப் படும்படி அவள் இருக்கவில்லை. அதுதான் அவன் தன்னைவிட்டுப் போய் விடுவானோ என்று அடிக்கடி அவளுக்குப் பயத்தைக் கொடுத்துக்கொண்டு இருந்தது. அழகிலிருந்து அனுராகமா, அனுராகத்திலிருந்து அழகா என்பது அவளுக்கு அவன் நடத்தையிலிருந்து இன்னும் புரியவில்லை. நடுச் சந்தியிலும் மூலை முடுக்குகளிலும் கூட அழகைக் கூடை கூடையாக வாரலாம். ஆனால், அன்பு அப்படியா? அதன் மகத்துவம் எவ்வளவு மேலானது என்பது அவனுக்குத் தெரிந்திருக்காது.

ஜீவிதத்தில் முதல் முதல் ஏற்பட்ட ஏமாற்றம் இதுவே. இவ்வளவு லகுவில் பிறர் கையில் விளையாட்டுப் பொருளாக அமைந்து விடுவாள் என்று அவள் என்றாவது நினைத்திருந்தாளா? வேண்டிய மட்டும் வைத்து விளையாடி விட்டு, வேண்டாத போது போட்டு உடைத்துவிடும் சிறு

குழந்தையா அவன்? அல்லது, பூவுக்குப் பூ தாவி தேன் குடிக்கும் வண்டைப்போல் ஏதேனும் புது மலரைத் தேடிப் போய்விட்டானா?அப்படியானால், தான் இனி அவன் முகத்திலேயே விழிக்காமல் இருந்து விடலாமா? ஐயோ, அதை நினைக்கும்போது அவனைப் பார்க்க முடியாமல் போய் விடுமோ என நினைக்கும்போதே அவள்நெஞ்சை வாள் கொண்டு அறுப்பதுபோல் இருக்கிறது. அப்படி அவன் தன்னை மறந்து விட்டால், லேசில் விடக்கூடாது, எப்படியும் தன் காலில் வந்து விழும்படி செய்ய வேண்டும், பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்றெல்லாம் நினைத்து நினைத்து, இன்று பல்லைக் கடித்துக்கொண்டு நாட்களைத் தள்ளி வருகிறாள். கவலை என்பதே என்ன என்று அறியாத அவள் மனதை, கரையான் அரிப்பது போல, அவனுடைய நினைவு ஒரு பக்கம் இருந்து அரித்துக் கொண்டிருந்தது. நாளுக்கு நாள் அவள் பலவீனப்பட்டுக் கொண்டே வருகிறாள். ஒவ்வொரு நாளும் அவன் வரவை ஆவலோடு எதிர்பார்த்துப் பார்த்து அவள் கண்கள் கூடப் பார்வை மங்கிவிட்டன. 'இப்படி என்னை நயவஞ்சகமாகப் பேசி ஏமாற்றிவிட்டானே, என்ன நடிப்பு? எவ்வளவு அன்பு வார்த்தைகள்! அப்பா! நினைக்க நினைக்க அவனையே நேரில் காணுவது போல் மனசில் சிறிது சந்தோஷம் தோன்றுகிறதே! அவனை நேரில் பார்க்கும் பாக்கியம் என்றைக்குக் கிடைக்குமோ?' என்று தெய்வங்களுக்கெல்லாம் வேண்டிக் கொள்ளுகிறாள். அவள் மனோரதம் நிறைவேற தெய்வ அருள் உண்டா? ஒரு தடவை அவனைக் கண்குளிர மறைவில் எட்ட நின்று பார்த்தாலே போதும். அதுகூடவா கிட்டாமல் போய் விடும்? 'நான் படும் அவஸ்தையை, என் நிலைமையை, ஒரு தடவை அவன் நேரில் வந்து பார்த்தாலே போதும். என் வேதனையின் நிழல் பின்தொடர்ந்துவிடுமோ என்று அவன் பயப்படுகிறானே! அப்படியானால், அவன் மனுஷத்துவம்

இல்லாத மிருகமா? சீ! ஒருகாலும் அப்படி இராது. அவன் தங்கமான மனுஷன். அவனைப் பற்றி வீணைகத் திட்டின என் புத்தியைத்தான் கண்டிக்க வேண்டும். ஏதோ சௌகரியக் குறைவினுல் வராமல் இருக்கலாம். சமயமும் சந்தர்ப்பமும் கிடைத்தவுடன், நிச்சயம் என்னிடம் ஓடி வந்துவிடுவான். என் அந்தரங்க அன்பு விக்கிரகத்தை மனசில் வைத்துப் பூஜித்தே பொழுதைப் போக்கிக்கொள் வேன். என் ஆசையும் ஜீவனும், எல்லாமுமே அவன் தான். அமன் ஜீவனேடு இருக்கும் வரை நானும் எப் படியோ என் ஜீவனையும் சுமந்து திரிவேன். எதற்காக? என்றைக்காவது ஒருநாள் என் அன்பின் தரிசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான். வராமல் இருக்க முடியாது...நிச்சயம் வருவான், வந்தே தீருவான்......

## II அவன் . . . .

''நிச்சயமாக அங்கே போகவேண்டும். ஏன் நிச்சய மாகப் போக வேண்டும். அது முட்டாள்தனம் அல்லவா? மனிதன் என்ருல், நிதானம் தவறிவிடுவது இயற்கை. தவறின நிலையிலேயே நின்று உழன்று கொண்டிருப்பது என்பது படு முட்டாள் தனம். நான் யார், அவள் யார்? எப்படித் தொடர்பு நிரந்தரமாக அமைய முடியும்? பாவம் இல்லை...அசடு....என்னைப் பிரமாதமாக நினைத்துவிட் டாள். ஒரு சமயம் நினைக்கும்போது, பரிதாபமாகத்தான் இருக்கிறது. அதற்காக அவளிடமே விழுந்து கிடக்க முடியுமா? நான் என்ன ஒற்றைக் கட்டையா? எனக்குக் குடும்பம் கிடும்பம் ஒன்றும் கிடையாதா? ஏதோ கொஞ்ச நாட்கள் போனேம் வந்தோம் என்றில்லாமல் இப்படி ஒரே பிடியாகப் பிடித்துக்கொள்வார்கள் என்று தெரிந்திருந்தால், அந்த வழிக்கே போகாமல் இருந் திருக்கலாமே! ஏன் என்னிடம் அப்படிப் பிராணனை இருக்க வேண்டும்? எனக்கு வேண்டி விழுந்து விழுந்து

பணிவிடை செய்திருக்கிருள். எதற்காக? என் மனதை சாசுவதமாகத் தனக்கு அடிமைப்படுத்திக் கொள்வதற் காகத்தான் இருக்கும்...அல்லது அவளுடைய சந்தோ ஷத்திற்காகவும் இருக்கலாம்......அவைகளை எல்லாம் பொருட்படுத்திக்கொண்டு நான் அவளை எப்பொழுதும் பக்கத்திலேயே வைத்துக்கொள்ள முடியுமா? மேலும், தன்னை மறந்து புத்தியை இழந்துவிடும்படி அவளிடம் யார் சொன்னூர்கள்? மனசுக்குக் கட்டுப்பாடு இல்லாவிட் டால், அது தறிகெட்ட மிஷின் மாதிரி போய்க்கொண் டிருக்கும்.

'அதற்கெல்லாம் நான் சமாதானம் சொல்லிக்கொண் டிருக்க முடியுமா? இனிமேல் அந்தப் பக்கமே போகாமல் இருப்பதுதான்மேல். இனி அவள் முகத்திலேயே விழிக் கப் போகிறதில்லை....இப்படி நினைத்தால் மனசும் கேட்க மறுக்கிறது. அங்கே போகாவிட்டால் இருப்புக்கொள்ள வில்லை. அன்று முழுவதுமே ஒரு வேலையும் ஓட மாட் டேன் என்கிறது....போகலாம்....ஆனுல் மனசு இன்னும் பலமாகப் பின்னிக்கொண்டால், அப்புறம்....? அப்புறம் ஏற்படக்கூடிய பொறுப்புக்கு நான் தயார் இல்லை. அதற் காக அவள் அழிந்து போகிறது என்ருலோ, ஆயிரம் ஜீவனில் ஒன்றுதானே என்று, கவலையை உதறித் தள்ளி விடவும் முடியவில்லை. இரண்டு வழியாலும் அவளுக்குத் துன்பந்தானே! பந்தம் இறுகிவிட்டால். அதைச் சுமக்க மனத் தைரியம் இருக்குமோ என்பது சந்தேகம். உதறித் தள்ள எனக்கே மனசு வரவில்லையே! அவளுக்கு வரும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? தவிரவும் அந்த உறுதி வந்தது என்றுதான் வைத்துக்கொள்வோம். அதனுல் அவளுக்குத்தானே கெடுதல்! நிஜமாகவே என் மனசில் அவள் பேரில் ஆசை யிருந்தால், விலகி ஓடிப் போவது அல்லவா புத்திசாலித்தனம்? முதலில் கஷ்ட மாகத்தான் இருக்கும். சதையோடு ஒட்டிக்கொண்டிருக்

கும் நகம் பிய்த்துக்கொண்டு வந்தால் வலிக்கத்தான் செய்கிறது. ரத்தம் பெருக்கெடுக்கத்தான் செய்கிறது. ஆனால் புண் ஆறவில்லையா? அதேமாதிரி, நாட்கள் போகப் போக மன வேதனையும் கொஞ்சம் கொஞ்சமாக ஆறிவிடும். அதற்காக நான் நிதானத்தை இழந்து விடுவதுதான் தப்பு. அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. விலகியே நிற்க வேண்டும். அப்பொழுதுதான் அவளுக்கு நான் நன்மை செய்ததாக முடியும். இல்லாவிட்டால், எனக்கு அவள்மீது ஆசையிருப்பதாக நினைத்துக்கொள் வது வெறும் பிரமை. சந்திக்காதுபோனல்........? சகிக்க முடியாமல்தான் இருக்கிறது. அதற்காக, சில நிமிஷ நிம்மதிக்காக, சில நிமிஷ உல்லாசத்திற்காக, விலங்கை மீண்டும் நாமே எடுத்துப் பூட்டிக்கொள்வது புத்திசாலித் தனம் இல்லை. ஒரு தடவை போய், இதை யெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும். உணர்ச்சி வசப்பட்டு விடாமல் மனசைக் கட்டுப்படுத்திக்கொண்டு பேச வேண்டும்; அவள் கேட்கத் தயாராக இருக்க வேண்டுமே! அவளுக்கு அது எப்படிப் புரியும்? பெண்கள் தங்கள் மனம் கண்ட உலகத்தைத்தானே உண்மை என்று நம்பு கிறார்கள்! அப்படி இருக்கும்போது அவள் மட்டும், யோகீஸ்வரர் மாதிரி, நான் சொல்லுவதை உட்கார்ந்து கேட்டுக்கொண்டு புரிந்து கொள்வாள் என்று எப்படி எதிர்பார்ப்பது?

மேலும், அந்தச் சமயத்தில் எனக்கும் நினைத்ததைத் தெளிவாக எடுத்துச் சொல்லத்தான் முடியுமா? மேலும் உணர்ச்சியை மூலையில் கட்டிவைத்து விட்டு உபதேசம் செய்து கொண்டிருக்க இது வேதாந்த விவகாரமா? அவள் அழுதால், என் புத்தி பொல பொலத்துவிடுமே! போகாமல் இருப்பதுதான் புத்திசாலித்தனம். விலகி விட லாம், விலகி விடவேண்டும்; விலகிவிட முடியும்! முடிகிற காரியத்தைச் செய்வதைப் போல, முடியாத காரியத்தை

நோக்கி மனசு எப்பொழுதும் தயங்குவதில்லை. முடிகிற காரியம், விரும்புகிற காரியமாக இருக்க வேண்டும். புத்தி மறக்கச் சொல்லுகிறது; ஆசை அங்கு இழுக்கிறது. உடம்பை இழுத்த இழுப்புக்கு விடுவதுதான் வியாதிக்கு வழி. அந்த மாதிரிதான் மனசுக்கும். பைத்தியத்தில் கொண்டுபோய் விடும். பைத்தியம்தான் தன்னை மறக்க நமக்கு வழிகாட்டும்.

ஆனால், எங்கள் ரகசியம் ஊருக்குப் பொதுச் சொத்தாகி விடுமே! அதனால்...அதனால்....கண்ணை மூடிக் கொண்டு உணர்ச்சியின் இழுப்புக்கு எல்லாம் தலை குனிய வேண்டியதுதான். அதனால் பயன் உண்டா? யாருக்குப் பயன்? "யார்" என்று நான் குறிப்பிடுவதுயார்? நானா அவளா? அவள் என்று நினைத்துக்கொண்டு திருப்தி யடைவது போல மனசு பாசாங்கு செய்கிறது. உண்மை அப்படியா? உண்மை அப்படியா? எனக்குத் தெரிய வில்லை! நாளைக்குப் போய்ப் பார்க்கலாம். தெய்வம் விட்டவழி. ஆமாம் தெய்வம் எப்பொழுதுந்தான் வழி விட்டுக் கொண்டே இருக்கிறதே! அதன் தலையில் பொறுப்பைப் போட்டுவிட்டு, விட்டில் பூச்சி மாதிரி நெருப்பைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டால் சிறகு தீய்ந்து போகாமல் என்ன செய்யும்?

ஆசை என்று நினைத்துக் கொண்டு சகதிக்குள் காலை விட்டுக் கொள்ள முடியுமா? முழு மனசையும் ஈடு படுத்திக் கொண்டு ஒரு காரியத்தில் இறங்குவதைப் போல முட்டாள் தனம் ஒன்றுமில்லை. நினைத்த நேரத்தில் பிடியை விடுவித்துக் கொள்ளுவதற்கு வகை தெரியாமல் கையைக் கொடுக்கலாமா? பிடி தளர்வதற்கு நேரம் கிடைத்தபோது, பிறகும் கையை அப்படியே வைத்துக் கொண்டிருந்தால், தளர்வு மறைந்து, முன் இருந்ததை விடப் பன்மடங்கு பலத்துடன் அமுக்கிக் கொள்ளும்.

இப்பொழுது விலகுவது தான் புத்திசாலித்தனம்...புத்தி சாலித்தனம்... இவ்வளவு லேசில் தப்பித்துக் கொள்ளு வேன் என்று நான் நினைக்கவேயில்லையே! உலகம் மாறி ஞலும், உள்ளன்பு மாருது என்று கையடித்துக் கொடுத்த மனசுதாஞ இது? அடடா! நான் எவ்வளவு விவேகி! மனசை அடக்கிக் கொள்ளக்கூடப் படித்துக் கொண் டேன். சுயநலத்துக்காக மனசை அடக்கிஞல் என்ன? அது யோகியின் சாதனை அல்லவா? லோகத்திலேயே மிகவும் பிரமாண்டமான தன்னலம் உள்ளவன் தானே யோகியும்! நான் யோகியல்ல, விவேகி. புத்திசாலி... போகமாட்டேன்....போகவே மாட்டேன்........

# எப்போதும் முடிவிலே இன்பம்

அது மிகவும் ஆசாரமான முயல். நாலு வேதம் ஆறு சாஸ்திரம், மற்றும் தர்க்கம், வியாகரணம் எல்லாம் படித்திருந்தது. திரிகரணசுத்தியாகத் தெய்வத்தின் மீது பாரத்தைப்போட்டு, வாழ்வின் சுகங்கள் எல்லாம் ஒன்று பாக்கிவிடாமல் அனுபவித்து வந்தது.

அந்த முயல் எலியட்ஸ் ரோடில் உள்ள ஒரு கலெக்டர் பங்களாவில் வசித்து வந்தது. வெகு காலமாகத் தான் வசிக்கும் இடம் ஒரு கலெக்டரின் பங்களா என்பது அதற்குத் தெரியாது. அதைத் தெரிந்து கொண்ட பிற்பாடு அதற்குப் பெருமை சொல்லி முடியாது. வனராஜனை சாக்ஷாத் மிருகேந்திரனேபோல அதன் நடையில் மிடுக்கு ஏற்பட்டது. உலகத்தில் தன்னை ஏறெடுத்துப் பார்க்க யாருக்கும் அருகதை இல்லை என நினைக்கவும் ஆரம்பித்து விட்டது அந்த முயல்.

தான் வசிப்பது கலெக்டர் வீடு என்பதை அது அறிந்துகொண்ட வரலாற்றை ஒரு ரசமான இதிகாசம் என்று சொல்ல வேண்டும். கலெக்டர் யுகத்தில் இதிகாச கர்த்தர்களுக்கு இடம் இல்லாமல் போனது இதிகாச கர்த்தர்களின் துரதிருஷ்டமே தவிர முயலின் துரதிருஷ்

டம் என்று அதன் மேல் பழி சாற்ற முடியாது. ஏனென்றால் ஜோதிஷர்கள் சொல்லக்கூடிய மிக மிகச் சிறந்த நக்ஷத்திரத்தில், அதற்கு மேலான சிறந்த லக்கினத்தில் பிறந்த முயல் அது. அதன் ஜன்ம லக்கினத்தைப் பற்றியோ அதன் அதிருஷ்டத்தைப் பற்றியோ சந்தேகப்படும் மனப்பாங்கு படைத்தவர்கள். ஜோதிஷ சாஸ்திரத்தையே அறியாதவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

நாலு வேதமும் ஆறு சாஸ்திரமும் படித்திருந்தால் தான் என்ன? முயல் முயல் தானே? அதன் குணம் போய் விடுமா? சமண சந்நியாசிகள் பாறைகளில் குடைந்த நிலவறைகள் மாதிரி தோட்டம் முழுவதிலும் குடைந்து வளைபோட்டுவிட்டது. முன் 'கேட்' அருகில் உள்ள ரோஜாப் புதரின் பக்கத்தில் உள்ள வளையில் குதித்து மறைந்தது என்றால், புழைக்கடையில் சுற்றுச் சுவர் ஓரத்தில் உள்ள கறிவேப்பிலைச் செடிக்கு அருகில் உள்ள குண்டுக்கல்லுக்குக் கீழிருந்து அது வெளியே வரும். இது தவிர அதன் நிலவறைகள் தரையில் திக்குக்கு ஒரு மாதிரியாகச் சென்று மழைக் காலத்தில் மனிதர் காலடித் தடம் பட்டதும் பொதுக்கென்று உள் வாங்கி விடும். மாலை நேரத்தில் கலெக்டர் துரை பங்களாவின் சுற்றுப் புறத்தில் உலாவுவார். ஒரு தடவை அவருடைய காலும் சொதக் என்று உள் வாங்கிக் கணுக்கால் சுளுக்கிக்கொள்ள, மாலியைக் கூப்பிட்டுத் திட்டினார். முயலை விரட்டு என்று உத்தரவு போட்டு விட்டார். காங்கிரஸ்காரர்கள் என்றால் தண்டோராப் போட்டோ வெளியேற்ற உத்தரவு பிறப்பித்தோ துரத்திவிடலாம். கலெக்டரின் உத்தரவு அமலுக்கு வருவதற்குச் சிறிது காலம் பிடித்தது. மாலி மிகவும் கிழவன். சமயங்களில் தூரத்தில் முயல் மாதிரி எதுவும் தென்படுமாகில் எக்ஸ்-பி என்ஜின் புறப்படுகிற மாதிரி "சூ" வென்று சத்தம் போட்டுக் கொண்டு ஓடி வருவான். காகதாலீய நியா

யத்தை நிர்த்தாரணம் செய்வதுபோல முயல் தன் வாலை ஆட்டி விட்டு, அருகில் உள்ள வளைக்குள் சரேலென்று அந்தர்த்தானம் ஆகிவிடும்.

ஓடி ஓடிச் சலித்துப் போன கிழட்டு மாலிக்கு ஒரு யுக்தி தோன்றியது. ஒரு கறுப்பு நாயை இந்த உத்தியோகத்துக்கு அமர்த்தினன். நிலாக்காலங்களில் தவிர மற்ற நாட்களில் இருட்டுடன் இருட்டாக உலாவலாமாகையால், அதற்கு அந்த உத்தியோகம் ஏற்றது என்று நினைத்தான். அதற்குத் தினசரி கால் வீசை மாமிசமும், இரண்டு எலும்புத் துண்டுகளும், சில சமயங்களில் கலெக்டர் போட்ட மிச்சத் தீனி என்ற போனஸும் உண்டு. முதலில் பறை நாய்க்கு இந்த உத்தியோகம் மிகவும் சௌகரியமாக இருந்தது. பகல் முழுவதுமாக ஒரு மரத்தடியிலோ சுவர் ஓரத்திலோ பொழுதைக் கழிப்பது, ராத்திரி வேளைகளில் ரோந்து சுற்றி வருவது, இம்மாதிரி ஏற்பாடு அதற்குப் பரமபதமாக இருந்தது.

இந்தக் கறுப்புக் குட்டி பறை நாய்; அதிலும் பட்டணத்துப் பறை நாய். அதற்கு முயல் என்றல் எப்படி இருக்கும் என்று கூடத் தெரியாது. மேலும் அது எழுத்தாளர் அல்ல; சொந்த மனசிலோ, இரவல் விவகாரத்திலோ கற்பனை பண்ணிக்கொள்வதற்கு அதற்குச் சக்தி இல்லை.

மூன்று நான்கு நாட்கள் உத்தியோகம் பார்த்தும் முயலைப் பார்க்காததற்கு முக்கியமான காரணமும் ஒன்று உண்டு. அந்த நாய்க்கு வாக்கிலே சனி. தூரத்தில் எதுவும் கறுப்பாகத் தெரிந்தால் வள் என்று குரைக்கும். சற்று நேரம் அந்தத் திசையையே பார்த்துக் கொண்டு நின்றுவிட்டுப் பிறகு பாய்ந்து ஓடும். கறுப்பு நாயின் இந்த ஏற்பாடு முயலுக்குச் சௌகரியமாக இருந்தது. அபாயச் சங்கின் சப்தம் கேட்டதும், டபக் என்று நிலவறை

களுக்குள் புகுந்துகொள்ள வேண்டும் என்ற உத்தர வைப் படித்துத் தெளிந்தது போல, அது வளைக்குள் சென்று ஒளிந்து கொள்ளும். இந்தப் புதிய குரல் எங்கி ருந்து வருகிறது, எதனுடைய குரல் என்பதெல்லாம் அதற்குத் தெரியாது. உயிர்ப் பிண்டங்கள் எல்லாவற் றிற்குமே ஊறிப்போயுள்ள ஒரு குணம், அதைக் குலை நடுக்கமெடுத்து அவ்வாறு ஓடும்படி தூண்டியது.

முயல் தர்க்க சாஸ்திரம் படித்த பிராணியாகை யினாலே, இரண்டு மூன்று தடவை ஓடின பிற்பாடு, இம் மாதிரி ஓடி ஒளிவது அதற்குப் பிடிக்கவில்லை. வளைக்குள் பதைக்கப் பதைக்க ஓடி, இண்டில் உட்கார்ந்து கொண்டு ஆசு ஊசென்று வரும் இரைப்பும் சுவாசமும் நிதானப்பட்டு, படக்குப் படக்கு என்று அடித்துக் கொள்ளும் நெஞ்சு ஒரு விதமாகச் சுமாரானவுடன், கீழ்க்கண்டவாறு யோசனை செய்யும்: "கயிற்றரவு என்று சொல்லுவார்களே, ஒரு வித மயக்க நிலை, அதைப் பற்றிப் படித்தவனாகிய நானா இப்படி ஓடி வருவது? எதற் கும் அந்தச் சத்தம் என்ன என்று பார்த்தே தீரவேண்டும் இல்லாவிட்டால் நான் படித்துப் பாழாய்ப் போய் என்ன பலன்?" என்று நினைத்த பின் மெதுவாக ஊர்ந்து வந்து வந்து வளைக்கு வெளியே கண்களை மட்டும் வைத்துக் கவனித்துக் கொண்டிருந்தது.

குரைத்த பிற்பாடு கூர்ந்து கவனித்துவிட்டுக் கறுப்பு நாய் பாய்ந்து ஓடி வருவதற்கும், முயல் தீர்க்காலோசனை செய்து விட்டுத் திரும்பி எட்டிப் பார்ப்பதற்கும் சமயம் ஒத்திருந்ததனால், தர்க்க சாஸ்திர பண்டிதர் கண்ணில் ஏதோ பிரமாண்டமான ஒன்று நாலுகால் பாய்ச்சலில் ஓடுவது தென்பட்டது. ராமநாமத்தைச் சொல்லி மன சைத் திடப்படுத்திக் கொண்டு, குரலையும் திடப்படுத்திக் கொண்டு, "அது யார்?" என்று இலக்கணப் பிழை இல்லா மல் கேட்டது முயல்.

"அதாரது?" என்று கொச்சையாகத் தனது உத்தி யோகக் கடமைக் காலம் வீணுகிறதே என்ற எரிச்சலுடன் பறை நாய் திருப்பிக் கேட்டது.

நாயின் கொச்சைக் குரலைக் கேட்டுப் பயம் தெளிந்த முயல், மீண்டும் அதிகாரத்துடன், "அது யார் அது?" என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டது.

"நாணு, நான் தான் கலெக்டர் பங்களாவின் காவல் உத்தியோகஸ்தர்; முயல் என்று ஒன்று இருக்கிறதாம்; அதை வேட்டையாடி வெளியே துரத்துவதற்கு நியமிக் கப்பட்ட ஸ்பெஷல் உத்தியோகஸ்தர் நான்" என்றது கறுப்பு நாய்.

"அப்படியா, முயலைத் துரத்துவதற்காக நியமிக்கப் பட்டவரா? ஏதோ இருட்டில் நன்ருகத் தெரியவில்லை. இப்படிக் கொஞ்சம் வாரும், பார்ப்போம்" என்றது முயல்.

சுற்றுமுற்றும் பார்த்து எதுவும் தென்படாமல், "எங்கே இருக்கிறீர்? நீர் யார்?" என்று கொஞ்சம் மரி யாதையாகக் கேட்டது ஸ்பெஷல் ரோந்து உத்தியோ கஸ்தர்.

"இதோ இப்படி இந்த வளையண்டை வாரும். நான் தான் முயல். நீர் விரட்டுவதற்காக இங்கே வெகு கால மாக இருந்து வருகிறவன். எனக்கு நாலு வேதம், ஆறு சாஸ்திரம், தர்க்கம், வியாகரணம் எல்லாம் தள பாடம்" என்றது முயல், வளைக்குள் இருந்து கொண்டே.

"ஐயா முயலாரே, முயலாரே, கொஞ்சம் வெளியே வாரும்; எனக்காகச் சற்று வெளியே வாரும். உமக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. எனக்கு உத்தியோகம் போய் விடக்கூடாது; தயவு செய்து வெளியே வாரும்" என்று

கூத்தாடியது; கெஞ்சியது. முயலின் குரலைத்தான் கேட்டிருந்ததே ஒழிய அது எப்படி இருக்கும் என்று கறுப்பு நாய்க்குத் தெரியாது.

" நான் வெளியில் வருவது இருக்கட்டும். உமக்குத் தர்க்க சாஸ்திரம் தெரியுமா? அதைக் கற்றுக் கொள்ளாமல் என்னிடம் வாதம் பண்ண வருகிறீரே" என்றது முயல்.

"எனக்குத் தர்க்கமும் தெரியாது; படிப்பும் கிடையாது. நான் பறை நாய். உமக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. நீர் இந்தப் பங்களாவை விட்டு வெளியே போய் விடும்; இல்லா விட்டால் எனக்கு வேலை போய்விடும்" என்று அழுதது கறுப்பு நாய்.

"உம்முடைய நிலையைப் பார்த்தால் பரிதாபமாகத் தான் இருக்கிறது. நான் இந்தப் பங்களாவை விட்டுப் போய்விடுவது என்ருல் அதனல் உமக்குத்தானே நஷ்டம் என்று எனக்குக் கஷ்டமாக இருக்கிறது" என்றது முயல்.

"அது எப்படி?" என்றது கறுப்பு நாய். "நான் போகா விட்டால் உமக்கு வேலை போய்விடும் என்று நீர் பயப்படுகிறீர்; நான் போய்விட்டால் பிறகு உமக்கு இங்கே வேலை ஏது? யாராவது ஒருவரைச் சும்மா வைத்துச் சம்பளம் கொடுத்துக் கொண்டிருப்பார்களா? நான் போய்விட்டாலும் உமக்கு வேலை போவது நிச்சயந் தானே?" என்றது முயல்.

கறுப்பு நாய் இவ்வளவு தூரம் எட்டி யோசிக்கத் திராணி இல்லாததனல், மருண்டு ஓவென்று பிலாக்கணம் வைக்க ஆரம்பித்து விட்டது. அதற்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

"ஓய், என் வீட்டுவாசலில் உட்கார்ந்து கொண்டு பிலாக்கணம் வைக்காதேயும். உமக்கு வேலை போகக் கூடாது; அவ்வளவு தானே உம்முடைய கவலை? நான் சொல்லுகிறபடி சத்தியம் செய்து கொடுப்பீரா?" என்று கேட்டது முயல்.

"ஆகட்டும், ஆகட்டும்" என்றது நாய்.

"அதிருக்கட்டும், நீர் சுத்த சைவந்தானே?" என்று கேட்டது முயல்.

"அப்படி என்றால்?"

"நீர் மாமிசம், எலும்பு, அணில்...பிறகு......பிறகு... நான்...முதலிய மிருக ராசிகளைச் சாப்பிடுகிறவரா?"

"ஆமாம், ஆமாம். சாப்பிடுகிறவன்...சுத்த சைவம்" என்றது நாய். மத்தியான்னம் கிடைத்த கறித்துண்டு ஞாபகத்துக்கு வரவே நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டது.

"அப்படிச் சாப்பிடாதவர்கள் தாம் சைவம். உமக்கும் நமக்கும் எப்படி ஒத்து வரும்?" என்றது முயல். "உமக்கு அந்தப் பழக்கத்தை விட்டுவிட முடியுமா?" என்று கேட்டது மீண்டும்.

"எப்படி முடியும்? ஒரு இருத் துண்டோ எலும்புத் துண்டோ இல்லாது போனால், என் உடம்புக்கு ஒத்து வராதே!" என்றது நாய்.

"கீரை, கிழங்கு தினுசுகளைச் சாப்பிட்டுப் பாருமே. உடம்புக்கும் நல்லது; நான் உம்மிடம் தயக்கமில்லாமல் நெருங்கியும் பழக முடியும்" என்றது முயல்.

"நான் செத்துப் போவேனே!" என்று ஏங்கியது கறுப்பு நாய்.

"அப்படியானால் உமக்கும் நமக்கும் ஒத்து வராது; எனக்குத் தூக்கம் வருகிறது" என்று சொல்லி விட்டு வளைக்குள் சென்று விட்டது வேதம் படித்த முயல்.

கறுப்பு நாய்க்கு மிகவும் வருத்தம். இவ்வளவு கெட்டிக்கார, தர்க்கம் படித்த முயலைப் பார்க்க முடியாமல் போயிற்றே என்று வேதனை.

எப்படியானாலும் மீண்டும் ஒரு தடவை அதைப் பார்க்கப் பிரயாசைப்படுவது, இல்லாவிட்டால் தெய்வம் விட்டவழி என்று நினைத்துக் கொண்டு தான் வழக்கமாகப் போய்ப் படுத்துக்கொள்ளும் கறிவேப்பிலைப் புதரடிக்குச் சென்று விட்டது.

2

மறுநாள் அதிகாலையில் எழுந்து, முயல் காயத்திரி ஜபித்துக்கொண்டிருந்தது. சூரிய கிரணங்கள் மூடிய இமை வழியாக அதன் கண்ணுக்குள் இந்திர ஜாலங்களைக் காட்டிக் கொண்டிருந்தன. கீரைப் பச்சையும் டொமாட்டோச் சிவப்பும் அடிக்கடி தோன்றி, கலெக்டர் பங்களாக் காய்கறித் தோட்டத்துக்கு அதன் மனசை இழுத்துச் சென்றன.

நேற்றுப் பார்த்த இடத்தில் முயல் அகப்படுமா, அதை மறுபடியும் பார்க்க முடியுமா என்று கவலைப்பட்டுக்கொண்டு கறுப்பு நாய் அந்தப் பக்கமாக மோப்பம் பிடித்துக்கொண்டு வந்தது.

எதிரே காயத்திரி பண்ணிக்கொண்டிருக்கும் ஜந்து தான் நேற்று ராத்திரிப் பேசிய முயல் என்று அதற்குத் தெரியாது.

நாயைக் கண்டவுடனேயே ஜப தபங்களைச் சீக்கிரமாக முடித்துக்கொண்டு, "நாயாரே சௌக்கியந்தானா?" என்று கேட்டது முயல்.

சத்தம் வந்த திக்கைத் திரும்பிப் பார்த்து நாய் திடுக்கிட்டுப் போயிற்று. இத்தனை சின்னச் சாதியா நேற்று ராத்திரி அத்தனை பெரிய பேச்சுப் பேசியது என்று அதிசயப்பட்டுக்கொண்டு அதனிடம் நெருங்கியது.

"காலையில் ஆகாரம் பண்ணியாச்சா?" என்று கேட்டுக்கொண்டே வளைக்குள் சென்று உட்கார்ந்துகொண்டது முயல்.

"எனக்கு இத்தனை காலையிலேயே கொடுப்பதற்கு யார் இருக்கிறார்கள்? இன்னும் கலெக்டரே சாப்பிட்டாகலியே" என்றது நாய்.

"நீர் வருகிற வேகத்தைப் பார்த்ததும் அப்படித்தான் நினைத்தேன்" என்றது முயல்.

"நேற்று ராத்திரி என் வேலைக்கு ஆபத்து வராமல் ஒரு வழி பண்ணித் தருவதாகச் சொன்னீரே, அதைப் பற்றி விசாரித்துக் கொண்டு போகலாம் என்று வந்தேன்" என்றது நாய்.

"உமக்கும் நமக்கும் ஒத்துவராதே; நான் எப்படி வழி சொல்லுகிறது? நீரோ மாமிச பட்சணி; நானோ சாத்விக உணவுக்காரன். எண்ணெய்க்கும் தண்ணீருக்கும் சரிப்பட்டு வருமா? உறவு என்றால் தண்ணீரில் பால் கலப்பது மாதிரி இருக்க வேண்டும் என்பது ஆன்றோர் வாக்கு" என்றது முயல்.

"நீர் எனது வேலையைக் காப்பாற்றிக் கொடுக்கிறதானால் என்ன செய்ய வேண்டுமானாலும் செய்கிறேன். இதோ இப்போதே சத்தியம் பண்ணித் தரட்டுமா!" என்று ஆவலுடன் கேட்டது நாய்.

"நீர் உம்முடைய மாமிச உணவை விட்டுவிடுவீரா?" என்று கேட்டது முயல்.

" அதுதான் என்னால் முடியாது என்று அப்போதே சொன்னேனே; நான் செத்துப்போன பிற்பாடு எனக்கு வேலை இருந்து என்ன, போய் என்ன ? கலெக்டர் கூட என்னைப்போலத்தானே சாப்பிடுகிறார் " என்றது நாய்.

" நீரோ மாமிசத்தை விட முடியாது என்கிறீர்; என்னைத் தின்ன மாட்டேன் என்றாவது சத்தியம் செய்து கொடுப்பீரா ?" என்று கேட்டது முயல்.

" இந்த லோகத்திலே, யாராவது குருவைத் தின்பார்களா ? உமக்கு ஏன் இந்தச் சந்தேகம் ?" என்றது நாய்.

" லோகத்திலேதான் சில பேர், தம் வயிற்றுக்குள்ளே குரு போய்விட்டால், தாமே குருவாகி விட்டதாக நினைத்துக் கொள்ளுகிறார்கள். அது உமக்குத் தெரியாது போல இருக்கிறது " என்று சொல்லியது முயல்.

" உமக்கு அந்தச் சந்தேகம் வேண்டாம், நான் உம்மைத் தின்பதே இல்லை என்று சத்தியமாக, ஆணையாகச் சொல்லுகிறேன். இன்னும் வேறு என்ன வேண்டும் ?" என்றது நாய்.

" நான் சொல்லுகிறபடியெல்லாம் கேட்க வேண்டும்; நான் சொல்லுகிற வேலை எல்லாம் செய்ய வேண்டும் " என்றது முயல்.

" ஆகட்டும் " என்றது நாய்.

" அப்படியானால் பக்கத்துத் தோட்டத்தில் முயலினி என்று ஒரு யுவதி இருக்கிறாள். அவளிடம் போய் அவளுடைய கோத்திரம் என்ன என்று கேட்டுக்கொண்டு வாரும் என்றது முயல்.

" எனக்குத் தந்திரம்........ ?" என்றது நாய்.

" நீர் போய் விசாரித்துக்கொண்டு வாரும். அதற்குள் ஒரு நல்ல யுக்தியாக யோசித்து வைக்கிறேன்" என்றது முயல்.

நாய் அகன்றதும், காய்கறித் தோட்டத்துக்குள் புகுந்து இரண்டு இணுக்குக் கீரையும் நல்ல டொமாட்டோப் பழமாக இரண்டும் சாப்பிட்டு ஏப்பமிட்டுக் கொண்டு, கீரைப் பாத்திக்கு அருகில் இருந்த வளைவழியாக ஓடி மறைந்தது முயல்.

பக்கத்துப் பங்களா ஒரு ஜமீன்தாருடையது. பறை நாயை உள்ளே வரும்படி விடுவார்களா? நாலைந்து வேலைக்காரப் பையன்களும் ஒரு கோம்பை நாயுமாகச் சேர்ந்து விரட்ட வாலைக் காலிடையில் பதுக்கிக் கொண்டு அழுதுகொண்டே ஓடி வந்து விட்டது கறுப்பு நாய்.

முயல் சொல்லி அனுப்பின காரியத்தைக் கேட்டு வருவதற்குக்கூட முடியவில்லையே, அதன் முகத்தில் எப்படி விழிப்பது என்று குன்றிப்போய், பங்களாவுக்குள் நுழைந்த சமயத்தில் பட்டப் பகலாகி விட்டது. சாப்பாட்டுக்காக, தோட்டக்காரன் குடிசைப் பக்கமாகப் போயிற்று. சாப்பிடும் தட்டை மோந்து பார்த்தது. வெறும் தட்டுத்தான் கிடந்தது. தனக்கு வேலைதான் போய்விட்டதோ என்று பதறியது. அதற்குப் போட்டிருந்த தீனியை நரி ஒன்று தின்று நடந்துவிட்டது; அதற்கு எப்படித் தெரிய முடியும்?

## 3

அன்று இரவு நல்ல நிலா. சற்றுச் சுகமாக உலாவி வருவோமே என்று நினைத்து வேத வித்தான முயல் வெளியே புறப்பட்டது. மனசுக்கு இன்பமாக இருக்க

வும் சாந்தம் ஏற்படவும் சாமகானம் பாடிக்கொண்டு எங்கெங்கோ நடந்தது. சிறிது நேரம் கழித்து எவ்வளவு தூரம் நடந்து விட்டோம் என்று சுற்றுமுற்றும் பார்க்க, தூரத்தில் முயலினி ஓர் இலையைக் கறித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, "என்ன லாவண்யம்! என்ன அழகு!" என்று அப்படியே சொக்கிப்போய் நின்றது. பிறகு குண்டு குண்டென்று ஓடி அதனிடம் நெருங்கி, "முயலினி உன் கோத்திரம் என்ன?" என்று கேட்டது.

"உங்கள் கோத்திரந்தான்," என்று சொல்லிவிட்டு வேறு ஓர் இலைக்குப் போயிற்று முயலினி.

"இத்தனை பிரயாசைப்பட்டும் என் ஆசை எல்லாம் பாழாய்ப் போயிற்றே!" என்று பெருமூச்சுவிட்டது முயல்.

"இல்லை, விளையாட்டுக்குச் சொன்னேன்; உங்கள் கோத்திரம் இல்லை" என்று கண்ணை ஒரு வீசு வீசிவிட்டு வேறு ஒரு தளிரை மென்றது முயலினி.

"என் கோத்திரம் உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டது முயல்.

"காதலுக்குக் கண் இல்லை என்று எங்கே படித்தீர்கள்?" என்று புன்சிரிப்புச் சிரித்தது முயலினி.

"இன்னிக்கு ஒரு ஆளை உன்னிடம் அனுப்பினேனே, வந்து விசாரித்தானா?" என்று கேட்டது முயல்.

"ஓ, அதுவா! பகல்லெ யாரோ என் அந்தப்புரத்தில் நுழைந்தார் என்று, ஜமீன்தார் வீட்டு வேலைக்காரர்களும் கோம்பையும் போய் விரட்டினார்கள்" என்றது முயலினி.

"நம்முடைய பங்களாவுக்கு வாயேன்" என்றது முயல்.

"என்ன, நாள் நக்ஷத்திரம் பார்க்காமலா? வேத சாஸ்திரம் படித்த தாங்களா இப்படிச் சொல்லுவது?" என்றது முயலினி.

## 4

சேதி கேட்டு வருவதாகப் போன நாய் திரும்பியே வரவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தது முயல். காலையில் அனுஷ்டானாதிகள் நடத்தும்பொழுது மனசு அதற்குக் காயத்திரியில் லயிக்கவே இல்லை. கறுப்பு நாய்க்கு என்ன துன்பமோ, வேலைதான் ஒரு வேளை போய்விட்டதோ என்று மனசை வாட்டிக்கொண்டது முயல்.

பகல் சுமார் பத்து மணிப்போதுக்கு முயலினி இரண்டு டொமாட்டோப் பழத்தையும் ஓர் இணுக்கு முள்ளு முருங்கை இலையையும் ஸ்திரீதனமாக எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தது.

முயலினியைக் கண்டதும் தன் வேதனையை மறந்து உல்லாசமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கும் போது, வளைக்கு வெளியே இரைச்சலும் சந்தடியுமாகக் கேட்க, முயல் வாசலருகில் வந்து, "அங்கே யார் அது, கூச்சல் போடுகிறது? இது கல்யாண வீடு என்று தெரியவில்லையா?" என்று உள்ளிருந்தபடி அதட்டியது.

"ஐயா முயலாரே, நான்தான் கறுப்பு நாய், ஒரு வழக்கு. தீர்த்து வைக்க வேண்டும்" என்றது.

"போதும். இதுதான் பிழைப்பாகப் போச்சு; நேற்றுப் போனவன் ஒரேயடியாக எங்கே தொலைந்து போனாய்? என்ன வேலையைப் போக்கடித்துக் கொண்டாயா?" என்றது முயல்.

"அங்கே போய்ப் பட்டபாட்டைச் சொல்லுவதென்றல் நான்கு நாட்கள் கூடப் போதா. இந்த வழக்கை மட்டும் தீர்த்து வைத்துவிடும்" என்று கெஞ்சியது நாய்.

"என்ன சண்டையாம்! பிரதிவாதி யார்?" என்று கேட்டது முயல்.

"நான்தான் நரி" என்றது நரி.

"நரியா? இந்த வட்டாரத்திலே ஏது நரி? நமக்கு இப்பொழுது சமயம் இல்லை" என்றது முயல்.

"ஐயா, முயலாரே, முயலாரே" என்று வாலை ஆட்டிக்கொண்டு கெஞ்ச ஆரம்பித்துவிட்டது நாய்!

"போடா போ, உனக்குப் புத்தி கித்தி இல்லை! காரியமா அனுப்பினல் திரும்பியே தலை காட்டுகிறதில்லை. வழக்குக் கொண்டு வந்தூட்டான் வழக்கு. எனக்குக் கல்யாணமாகி இன்னும் அரைமணிப் பொழுது கழியவில்லை. அதற்குள் இந்த நரியோடே ஏண்டா சண்டை போட்டுக் கொண்டாய்?" என்று அதட்டியது முயல்.

"ஓய் முயலாரே, உம்முடைய உயிருக்காகப் பயப்பட வேண்டாம். இன்னும் சுமார் ஒரு மண்டலத்துக்கு முயல் கறி சாப்பிடக் கூடாது என்று எங்கள் ஜாதி வைத்தியர் எனக்குக் கட்டளை இட்டிருக்கிருர். இப்பொழுது சும்மா தாராளமாக வெளியே வந்து பாருமே" என்றது நரி.

"சம்சாரம் வீட்டில்தானே?" என்று வளைக்குள் குனிந்து பார்க்க முயன்றது நரி.

"ஓய், நீர் தூரத்திலேயே நின்று பேசும்; எனக்கு நன்ருகக் காது கேட்கிறது" என்று கீச்சிட்டது முயல்.

" அப்படியா ! வழக்கு ஒன்றும் பிரமாதம் அல்ல. தினசரி அவருக்குத் தட்டில் வைக்கிற சாப்பாட்டை நான் இரண்டு நாட்களாகத் தின்று விடுகிறேன். அது தான், பத்தியம் என்று சொன்னது உமக்கு ஞாபகம் இருக்கிறதா ? அதைக் கண்டு பயந்து, தம் வேலைக்கு ஆபத்தோ என்று கவலைப்படுகிறது நாய். எப்படி இருந் தாலும் ஜாதிக்குணம் போகுமா ? மேலும் என்னைப் போல அர்த்த சாஸ்திரம், தண்ட நீதி எல்லாம் அது படித் திருக்கிறதா ? சுத்தப் பட்டிக்காடு " என்றது நரி.

" உமக்கு அர்த்த சாஸ்திரத்தில் நல்ல பரிசயமோ?" என்றது முயல்.

" என்ன அப்படிக் கேட்டுவிட்டீர் ? கரதலப் பாடம்" என்றது நரி.

" ரொம்ப நாளாக எனக்கும் அது படிக்க வேண்டும் என்று ஆசை " என்றது முயல்.

" அப்பியசித்தால் போகிறது. நாளையிலிருந்தே பாடம் கேட்க வருகிறீரா ?" என்றது நரி.

" வருகிற தக்ஷிணயனத்தின்போது பாடம் ஆரம் பிக்கலாம்; நீர் என்ன சொல்ல வந்தீர்?" என்றது முயல்.

" நாய் எதற்காகச் சம்பளத்துக்கு உழைக்க வேண் டும் ? கௌரவமாகப் பிழைக்க வழியில்லையா ? ஏன், கலெக்டரையே விரட்டிவிட்டால் போகிறது " என்றது நரி.

" கலெக்டரையா! விரட்டுகிறதா!" என்று பிரமித்துப் போயிற்று நாய்.

" கலெக்டரை விரட்டி இந்தப் பங்களாவுக்கு உம்மையே ராஜாவாகப் பண்ணுகிறேன். ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும் உருப்படாது என்று ஜனங்

கள் நினைக்கிறது உமக்குத் தெரியுமா? முயலைக் கேட்டுப் பாரும். ஆமாம் என்று சொல்லும். எனக்கு ஒரு சிநேகிதன் ஆமை இருக்கிறது. அதை அழைத்துக்கொண்டு விடியற்காலையிலே வருகிறேன். முயலாரே, நீர் பயப்படாமல் சும்மா வெளியே வந்து நடமாடும்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டது.

"நான் இப்பொழுதிருந்தே ராஜாவா?" என்று பல்லை இளித்துக்கொண்டு கேட்டது நாய்.

"ஆமாம் மகாராஜா; நாளை மாலை பங்களாவில் கிரகப்பிரவேசம்" என்று சிரித்துக்கொண்டு சென்றது நரி.

"வடிகட்டின அசடே, இந்தத்துரோகியை இங்கே ஏன் கூட்டிக்கொண்டு வந்தாய்?" என்று அதட்டியது முயல்.

"நான் மகாராஜாவாக்கும்! என்னை முன்போல வா போன்னு பேசப்படாது" என்றது நாய்.

"சீ, முட்டாள், வாயை மூடிக்கொண்டு சற்றுக் கேளு. நரிக்கு முன்னால்தான் நீ ராஜா. நரி இல்லா விட்டால், நீ என் சேவகன். அதைத் தூரத்தில் பார்த்தாலும் எனக்கு எச்சரிக்கை கொடுக்க வேண்டும். நான் காயத்திரி பண்ணும்போது நீ என் பக்கத்தில் காவலுக்கு உட்கார்ந்திருக்க வேண்டும். முயலினி எங்காவது போனால் துணைக்கு நீயும் போக வேண்டும்" என்றது முயல்.

"அப்படியே ஆகட்டும், எஜமான்" என்றது நாய்.

"ஜாக்கிரதை. தந்திரத்தைத் தந்திரத்தால்தான் ஜயிக்கவேண்டும். அவன் கலெக்டரை ஒழித்ததும் நாம் அவனை ஒழிக்கவேணும். ஜாக்கிரதை" என்றது முயல்.

" ஜாக்கிரதை " என்று சொல்லிவிட்டுப் பக்கத்திலேயே படுத்துக்கொண்டு தூங்கிப் போய்விட்டது நாய்.

" அர்த்த ஜாமமாய்விட்டது; முயலினியும் தூங்கியிருப்பாள்; நாமும் தூங்கவேண்டியதுதான் " என்று கொட்டாவி விட்டது முயல்.

" தூங்கல்லெ " என்ற கீச்சுக் குரல் வளைக்குள்ளிருந்து கேட்டது.

## 5

அதிகாலையிலே எழுந்திருந்து முயல் சூரிய நமஸ்காரம் பண்ணிக்கொண்டிருந்தது. அந்தச் சமயத்திலே நரி குலைதெறிக்க ஓடிவந்தது. முயல் வெகு வேகமாக வளைக்குள் சென்று உட்கார்ந்துகொண்டு தலையை மட்டிலும் வாசல் பக்கம் வைத்துக்கொண்டது.

" என்ன, உமக்கு என்மேல் இன்னும் சந்தேகமா ?" என்று கேட்டுவிட்டு 'மகாராஜா' என்று நாயின் முன்னல் தண்டம் சமர்ப்பித்து நின்றது.

" எல்லாம் இருக்கிற இடத்தில் இருந்தால் சந்தேகம் என்ன ? சண்டை என்ன ?" என்றது முயல்.

" மகாராஜா, என் வாக்குப் பொய்யாகுமா ? ஆமை என்று சொன்னவுடனேயே ஆட்கள் எல்லாம் ஓட்டம் பிடிக்கிருர்கள். வீட்டு வாசலில் வண்டி வந்து நிற்கிறது காலையிலேயே போய் ஆமையை வரும்படி சொல்லி விட்டு வந்தேன். அதற்குள் தங்களுக்கு வெற்றி " என்றது நரி.

" அப்படியா, எங்கே நான் பார்க்க வேண்டுமே " என்று சொல்லிக் கொண்டு ஓடியது நாய்.

"மகாராஜா, மகாராஜா, மந்திரி பரிவாரம் இல்லாமல் தாங்கள் தனியாக ஓடலாமா" என்று சொல்லிக் கொண்டே பின்தொடர்ந்தது நரி.

சுமார் ஒரு மணி நேரம் கழித்து வேர்க்க விறுவிறுக்கத் திரும்பி ஓடி வந்தது.

"என்ன அவசரம்? மகாராஜா எங்கே?" என்று கேட்டது முயல்.

"நாய்க்கு எப்பொழுதாவது ஜாதிப் புத்தி போகுமா? அதை மகாராஜா ஆக்கினதே பிசகு. தாங்களே மகாராஜா" என்று பல் இளித்தது நரி.

"என்ன ராஜத் துரோகம் பேசுகிறாய்? அர்த்த சாஸ்திரம் படித்த உனக்கு அடுக்குமா?" என்று கோபப்பட்டது முயல்.

"இனிமேல் தாங்களே எனக்கு மகாராஜா. எப்படியும் நாய், நாய் தான். ஓடிப்போய்த் தோட்டக்காரனிடம் வாலைக் குழைத்துக் கொண்டு நிற்குமா? அவன் அதன் கழுத்தில் கயிற்றைக் கட்டிப் போகிற வண்டியுடன் இழுத்துச் சென்று விட்டான்" என்றது நரி.

"மகாராஜாவைச் சிறைப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்களாம்" என்று முயலினியிடம் தெரிவித்து வருத்தப்பட்டது முயல்.

"மகாராஜா, வருத்தப்பட்டு ஆகிற காரியம் எதுவும் இல்லை. இனிமேல் தாங்களே ராஜ்யபாரத்தை ஏற்று நடத்தவேண்டும்" என்றது நரி.

"அதற்கென்ன, செய்தால் போகிறது. ஆனால் ஒரு நிபந்தனை. பகலில் நீ இங்கே தலைகாட்டக் கூடாது" என்றது முயல்.

'அதுவும் அப்படியா? அதற்கு ஒரு வழி பண்ணு கிறேன்' என்று எண்ணமிட்டு, "ஆகட்டும் மகாராஜா" என்றது.

அன்று ராத்திரி நல்ல நிலா, கலெக்டர் ஓடிப் போக வில்லை. கிழட்டுத் தோட்டக்காரனையும் கறுப்பு நாயை யும் வேலைக்கு லாயக்கில்லை என்று விரட்டிவிட்டுத் துப் பாக்கியும் கையுமாக நின்றிருந்தார். கலெக்டர் பங்களாக் கோழிகளை ஜபித்துக்கொண்டு மந்திரி உத்தியோகம் பார்க்க வந்த நரி, அவருடைய துப்பாக்கிக் குண்டுக்கு இலக்காகி உயிரை விட்டது.

லதாக்ருஹத்தில் முயலினியுடன் சல்லாபித்துக் கொண்டிருந்த முயல், வெடிச் சத்தம் கேட்டு, "இந்தப் பிரதேசமே ஆபத்துப் போல இருக்கே" என்று நடுநடுங் கியது.

"இதற்குமுன் டஞ்சவடி மாதிரி இருந்த இடம்; குட்டிச் சுவராகப் போச்சு" என்றது முயலினி.

"என்ன என்று பார்த்து வரட்டுமா?" என்றது முயல்.

"அது எதற்குப் பீடை? கூப்பிடு தூரத்திலே சர்க் கார் தோட்டம் இருக்கிறது. நாளைக்கு அங்கே போய் விடுவோம். உங்கள் ஜபதபங்களுக்குச் சௌகரியமாகக் குளம் ஒன்று உண்டு" என்றது முயலினி.

முயல்கள் கண்ணுக்குத் தென்படாததைக் கண்டு கலெக்டர் அதிசயப்படவில்லை. தமக்கு எதிராகப் பெரிய சதி நடந்ததும் அவருக்குத் தெரியாது.

# புதுமைப்பித்தனின் இதர நூல்கள்

| | |
|---|---|
| புதுமைப்பித்தன் கதைகள் | 4 0 0 |
| ,, கட்டுரைகள் | 2 8 0 |
| ,, கவிதைகள் | 2 0 0 |
| புதிய ஒளி | 3 0 0 |
| வாக்கும் வக்கும் | 1 8 0 |
| மணியோசை | 1 8 0 |
| தெய்வம் கொடுத்த வரம் | 1 8 0 |
| முதலும் முடிவும் | 1 4 0 |
| உலக அரங்கு | 1 4 0 |
| பிரேத மனிதன் | 1 0 0 |
| ஆண்மை | 1 0 0 |
| பளிங்குச் சிலை | 1 0 0 |

**STAR PUBLICATIONS**

**Triplicane**
**MADRAS-5**

**West Tower St.,**
**MADURAI**

523
1-55